


உங்கள் குடும்பம் ஆசீர்வதிக்கப்பட


# வேதாகமக் குடும்பங்கள்

## கற்றுத்தரும் பாடங்கள்









ஆசிரியர்
பி.எஸ். ராஜமணி

55 -

உங்கள் குடும்பம் ஆசீர்வதிக்கப்பட

# வேதாகமக் குடும்பங்கள்

## கற்றுத்தரும் பாடங்கள்

ஆசிரியர்
P.S. ராஜமணி

தொடர்பு முகவரி:

P.S. ராஜமணி
100, நாவலர் நகர்
மதுரை - 625 016.

LIGHT HOUSE A.G. CHURCH
Housing Board Colony,
Mela Anuppanady,
MADURAI - 625 009.
Ph: 0452-2698484

© பதிப்புரிமை : ஆசிரியருக்கே.


✦ முதல் பதிப்பு : ஜூலை 2004

✦ பிரதிகள் : 2000

✦ இரண்டாம் பதிப்பு : மார்ச் 2009

✦ பிரதிகள் : 2000

✦ மூன்றாம் பதிப்பு : அக்டோபர் 2011

***Published by:***

Rev. P.S. Rajamoni
100, Navalar Nagar
Madurai - 625 016.
Tamil Nadu.

*Phone: (0452) 3296346*

Printed at: **Dheva offset Printers**,
Chennai - 5 Ph: 28589656

# முன்னுரை

வேதாகமக் குடும்பங்கள் என்ற தலைப்பில் பரிசுத்த வேதாகமத்தில் கூறப்பட்டுள்ள பல குடும்பங்களைக் குறித்து விளக்கமாக எழுத கர்த்தர் கிருபை செய்தார். ஆதாம்-ஏவாள் முதல், ஆக்கில்லா-பிரிஸ்கில்லாள் வரை பல குடும்பங்களைக் குறித்து எக்ளிசியா பத்திரிக்கையில் எளிய முறையில் எழுதின காரியங்கள் அநேகக் குடும்பங்களுக்கு ஆசீர்வாதமாக இருந்ததாக அறிந்தோம். எனவே இதை ஒரு புத்தகமாக வெளியிடத் தீர்மானித்தோம்.

இந்தக் குடும்பங்களிலிருந்து பல நல்ல காரியங்களை கற்றுக்கொள்வதுபோலவே, நாம் எவைகளைச் செய்யக் கூடாது என்ற எச்சரிப்புகளையும் பெற்றுக்கொள்கிறோம். பரிசுத்தவான்களுடைய பலவீனங்களை, குறைகளை வேதாகமம் மறைக்க முயற்சிக்கவில்லை. அது வேதாகமத்தின் தனிச்சிறப்பு.

வேதாகமம் ஆதாம்-ஏவாளில் ஆரம்பித்து மணவாளனாகிய கிறிஸ்து, மணவாட்டியான சபையுடன் இணைவதில் முடிகிறது. எனவே ஒரு குடும்பத்தில் ஆரம்பித்து ஒரு குடும்பத்தில் முடிகிறது என்று கூறலாம். கர்த்தர் உங்கள் ஒவ்வொருவரையும் ஆசீர்வதிப்பாராக.

– பி.எஸ். ராஜமணி

# பொருளடக்கம்


- ★ ஆதாம் - ஏவாள் 05
- ★ நோவா - ஷைலா 12
- ★ ஆபிரகாம் - சாராள் 21
- ★ ஈசாக்கு - ரெபெக்காள் 34
- ★ யாக்கோபு - ராகேல் 43
- ★ யோசேப்பு 51
- ★ மனோவா, சிம்சோன் 60
- ★ நகோமி, ரூத் 72
- ★ அன்னாள், சாமுவேல் 77
- ★ ஏலியின் குடும்பம் 84
- ★ சூனேமில் கனம்பொருந்திய பெண் 92
- ★ வஸ்தி, எஸ்தர் 102
- ★ யோபின் குடும்பம் 110
- ★ சகரியா - எலிசபெத்து 117
- ★ யோசேப்பு - மரியாள் 125
- ★ அனனியா - சப்பீராள் 133
- ★ ஆக்கில்லா - பிரிஸ்கில்லாள் 141



# ஆதாம் - ஏவாள்

பரிசுத்த வேதாகமத்தில் கூறப்பட்டுள்ள முதல் குடும்பம் ஆதாம், ஏவாள் குடும்பம். உலகில் வாழ்ந்த, இன்றும் வாழ்கின்ற கோடிக்கணக்கான மக்கள் யாவரும் இந்த ஆதி பெற்றோரின் சந்ததியே. இன்று மனிதன் ஜாதியால், இனத்தால், கலாச்சாரத் தால், நிறத்தால், மொழியால், நாட்டால் பிரிக்கப் பட்டிருக்கின்றான். ஆனால் யாவருமே ஒரு குடும் பத்தைச் சேர்ந்தவர்கள் என்ற உணர்வைத் தருவது வேதாகம சரித்திரம்.

ஆதாம் தேவனால் உருவாக்கப்பட்டவன். தேவ சாயலில் படைக்கப்பட்டான். அவனுடைய எலும்பிலிருந்து ஏவாள் உருவாக்கப்பட்டாள். இரு வருக்கும் குழந்தைப் பருவம் கிடையாது. ஆதா முக்கும் ஏவாளுக்கும் உலகப்பிரகாரமான பெற்

றோர் கிடையாது. தேவனே அவர்களுக்கு பெற்றோராய் இருந்தார்.

## தேவன் ஏற்படுத்திய குடும்பம்

ஆதாமை உருவாக்கினவர் கர்த்தர். அவன் தேவனோடு எப்போதும் உறவாடுகிற பரிசுத்தனாக இருந்தபோதிலும் அவன் தனிமையாக இருப்பதாகக் கர்த்தர் கண்டார். அவனுக்கு ஏற்ற துணையை உண்டாக்கத் திட்டமிட்டார் (ஆதி.2:18). மனைவியே ஏற்ற துணை என்று கர்த்தர் கண்டார்.

ஒரு சகோதரனையோ, சகோதரியையோ, நண்பனையோ படைக்காமல், ஒரு மனைவியைப் படைத்தார். கணவன் மனைவியாக இணைத்தார். அவர்களை ஆசீர்வதித்தார். சில பொறுப்புகளைக் கொடுத்தார். புருஷன் தன் பெற்றோரைவிட்டு தன் மனைவியுடன் இசைந்திருக்கக் கட்டளையிட்டார்.

## ஆதாம் - ஏவாள் தம்பதி

வாலிபராக படைக்கப்பட்டு கணவன் மனைவியாக இணைக்கப்பட்ட அவர்கள் தேவ ஆசீர்வாதத்தால் நிரப்பப்பட்டிருந்தனர். நிர்வாணிகளாயிருந்தும் வெட்கப்படாதிருந்தனர். தேவ மகிமையால் மூடப்பட்டிருந்த அவர்கள் தங்களை நிர்வாணிகள் என்று எண்ணவில்லை. அவர்களுக்குள் ஒளிவுமறைவு ஒன்றுமில்லை (ஆதி.2:25).

**தேவனுடைய சத்தத்தை அனுதினமும் கேட்டனர். அவருடன் தோட்டத்தில் உலாவினர் (ஆதி.3:8).**

அருமையான சகோதர சகோதரிகளே! உங்களை கணவன் மனைவியாக இணைத்தது கர்த்தர் என்று உறுதியாக நம்புகிறீர்களா? உங்களுக்குள் ஒளிவுமறைவின்றி நெருக்கமாய் பழகுகிறீர்களா? அனுதினமும் தேவ்னுடன் பழகுகிறீர்களா? அவருடைய சத்தம் கேட்கிறீர்களா? உங்கள் வாழ்க்கை ஆசீர்வதிக்கப்பட இது அவசியம். தேவனோடு நெருங்கிய தொடர்பில்லாத குடும்ப வாழ்க்கையில் சந்தோஷமில்லை, சமாதானமில்லை, நிம்மதி இல்லை.

தோட்டத்திலுள்ள சகல கனி வர்க்கங்களையும் புசிக்கும் சிலாக்கியத்தைக் கொடுத்தார். இந்தக் கனிகள் பார்வைக்கு அழகும் புசிப்பதற்கு நலமானவைகளாகவும் இருந்தன (ஆதி.2:9,16).

நம் வாழ்க்கைக்கு அவசியமான, தேவையான யாவற்றையும் அனுபவிக்க தேவன் நமக்கு அதிகாரம் கொடுத்துள்ளார்.

“தீமையானதை புசிக்க வேண்டாம்” என்று கட்டளையிட்டார். நன்மை தீமை அறியத்தக்க மரத்தின் கனி என்றால் என்ன என்ற வேத ஆராய்ச்சி இப்போது தேவையில்லை. நமக்குத் தீமையை உண்டுபண்ணும் என்று அவர் ஒன்றை விலக்கும் போது அதற்கு நாம் விலகியிருப்பதே குடும்ப வாழ்க்கைக்கு நன்மை பயக்கும். இதற்குக் கீழ்ப்படியாவிட்டால் தண்டனை உண்டு என்றும் எச்சரித்தார்.

நமக்கு நன்மை தரும் ஒன்றையும் நாம் அனுபவிக்கக்கூடாது என்று கர்த்தர் விலக்கவே இல்லை. இது உன் வாழ்க்கைக்கு உன் குடும்பத்திற்கு நல்லதல்ல என்று அவர் கட்டளையிட்டால் நிச்சயம் அதற்கு விலகி இருப்பதே நமக்கு நல்லது.

## ஆதாமுக்கு வேலை கொடுத்தார்

ஏதேன் தோட்டத்தை பண்படுத்துவதும் காப்பதும் ஆதாமின் வேலை (ஆதி.2:15). எவ்வளவு பரிசுத்தனாக கணவன் இருந்தாலும், எவ்வளவு ஆசீர்வாதங்களைப் பெற்றிருந்தாலும் அவன் பொறுப்புள்ளவனாய்,சுறுசுறுப்புள்ளவனாய் வேலை செய்ய கர்த்தர் எதிர்பார்த்தார்.

கணவன்மாரே! இதே நிலையில் நீங்கள் நடந்துகொள்ளுகிறீர்களா? எவ்வளவு பணம் இருந்தாலும் சோம்பேறிகளாய் இராமல் சுறுசுறுப்போடு அல்லது பாடுபடும் ஆண்களாயிருங்கள். உங்கள் குடும்பமாகிய தோட்டத்தில் தினமும் தேவனோடு உறவாடுங்கள். உங்கள் குடும்பத்தை பண்படுத்துங்கள். உங்கள் குடும்பத்தை சாத்தானின் சூழ்ச்சிகளுக்கு விலக்கிக் காத்திட கவனம் செலுத்துங்கள்.

## சோதனைக்கு இடமளித்த ஏவாள்

பெண்கள் மென்மையானவர்கள். இந்த மென்மை சில சமயங்களில் ஏமாற வழி செய்துவிடுகிறது. ஏவாள் தனிமையாக இருந்தபோது சாத்தான் இவளுடன் பேச்சுக் கொடுக்கிறான். விலக்கின

கனியை புசி என்று அவன் நேரடியாக சொல்ல வில்லை. ஆனால் தேவன் ஒரு பெரிய ஆசீர்வா தத்தை உங்களுக்கு கொடுக்கத் தவறிவிட்டார். அவர் ஆலோசனை, கட்டளை உண்மையான தல்ல என்று, பொய்யை மெய்போல பேசினான்.

ஏவாள் தேவனுடைய கட்டளைக்குக் கீழ்ப் படியாமல் சாத்தானின் ஆலோசனைக்கு செவி சாய்த்தாள். விலக்கின கனியை இன்பமானதாகக் கண்டாள், பறித்தாள், புசித்தாள், தன் கணவனுக்கும் கொடுத்தாள். சிறுகாரியம்போல தோன்றின இது பெரிய சாபத்தைக் கொண்டுவந்தது. அருமையான சகோதரரிகளே! சிறிய தவறுபோலத் தெரியும் காரியம் குடும்பத்தில் பெரிய சாபத்தைக் கொண்டு வந்துவிடும். எச்சரிக்கை, விழிப்புணர்வு தேவை.

## பாவம் நுழைந்த குடும்பத்தின் நிலை

தேவ மகிமை குடும்பத்தைவிட்டு எடுபட்டது. செய்த தவறுகளை மறைக்க அத்தி இலைகளை சார்ந்திருக்கும் நிலை ஏற்பட்டது. தவறு செய்தபின் அதை மூடி மறைக்க முயற்சித்தார்கள். கர்த்தரின் சத்தத்திற்கு விலகி ஓடினார்கள். தேவனை நேரடி யாக சந்திக்க தைரியமில்லை.

பாவம் குடும்பத்தில் நுழைந்துவிட்டால் தேவ சத்தத்திற்கு கீழ்ப்படியாத நிலை உருவாகும். கர்த்தர் பேசினாலும் அதைக் கேட்கும் தைரியம் போய்விடும்.

ஏன் இந்த பாவத்தை செய்தாய்? என்று ஆதாமிடம் கேட்டபோது கர்த்தர் மீதும், மனைவி மீதும் பழி போட்டான். இந்தப் பாவத்தை நான் செய்யக் காரணம் நீர் தந்த பெண் என்றான். அதாவது சும்மா இருந்த எனக்கு மனைவியைத் தந்தது நீர், எனவே இதற்குக் காரணம் முதலாவது நீர் என்ற கருத்தில் பேசினான். மனைவி தந்தாள், நான் புசித்தேன் என்று விபரம் தெரியாத சிறுபிள்ளை போல பேசினான்.

பாவம் நுழைந்த குடும்பத்தில் புருஷன் மனைவிமீது பழி போடுவது வழக்கம். ஏவாளைப் பார்த்து ஏன் இப்படிச் செய்தாய் என்று கேட்ட போது பிசாசு வஞ்சித்துவிட்டான். நான் ஏமாற்றப் பட்டேன் என்று பிசாசுமீது பழி போட்டாள்.

ஆண்டவரே, நாங்கள் பாவம் செய்துவிட் டோம். உம்முடைய கட்டளைக்கு கீழ்ப்படியாமல் நடந்துவிட்டோம் என்று பாவ அறிக்கை செய்ய வில்லை. செய்த பாவத்திற்கு மன்னிப்புக் கேட்பதே சரியானது. சாக்குப்போக்கு சொல்வதும், பிறர்மீது பழிபோடுவதும் ஏற்புடையதல்ல.

ஒருவர்மீது ஒருவர் பழி போட்டாலும், பாவத் திற்குத் தண்டனை பெற்றாலும் ஒருவரையொருவர் விட்டுப்பிரியவில்லை என்பது நல்ல காரியம். கூடி வாழ்ந்தார்கள், குழந்தைகளைப் பெற்றெடுத்தார்கள். அவர்கள்மூலம் பூமியில் சந்ததிகள் உருவாயிற்று.

**ஆதாம் - ஏவாள் குடும்ப வாழ்க்கையிலிருந்து கற்றுக்கொள்ளும் காரியங்கள்:**

- குடும்ப உறவை உருவாக்கியது கர்த்தர்.
- தேவனுடைய கட்டளைக்குக் கீழ்ப்படிந்தால் குடும்பத்தில் ஆசீர்வாதம் உண்டு.
- சாத்தானுக்குக் கீழ்ப்படிந்தால் சாபம் வரும்.
- அனுதினமும் தேவனோடு நடந்து உறவாட வேண்டும்.
- பாவம் செய்துவிட்டால் தேவனைவிட்டு ஓடக் கூடாது.
- தேவமகிமையை இழந்துவிட்டால் ஓடி ஒழியும் நிலை வரும்.
- நம் பாவங்களை ஒத்துக்கொள்ள வேண்டும்.
- ஒருவர்மீது ஒருவர் பழிசுமத்தி சாக்குப்போக்கு சொல்லக்கூடாது.
- ஒரு மிருகம் கொல்லப்பட்டு தோலுடை மூடினது போல் இயேசுவின் இரத்தத்தால் கழுவப்பட வேண்டும்.
- எந்தப் பிரச்சனையிலும் கணவன்-மனைவி பிரிந்து செல்லக்கூடாது.



# நோவா - ஷைலா

**நோ**வாவின் மனைவியின் பெயர் வேதத்தில் குறிப்பிடப்படவில்லை. சமீபத்தில் நோவா மற்றும் அவரது மனைவியின் கல்லறைகள் கண்டுபிடிக்கப் பட்டன. அதில் நோவாவின் மனைவியின் பெயர் ஷைலா என குறிப்பிடப்பட்டுள்ளது. ஆதியாகமம் 6 முதல் 9 அதிகாரங்களில் நோவாவின் குடும்பத் தைப் பற்றியும், பூமி மீதெங்கும் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கத்தைப் பற்றியும் பார்க்கிறோம்.

**நோவாவைப் பற்றி வேதம் கூறுவதென்ன?**

நியாயப்பிரமாணம் கொடுக்கப்படாத காலத் தில் வாழ்ந்தவர் நோவா. தன் காலத்தில் இருந்தவர் களுக்குள்ளே நீதிமானும் உத்தமனுமாயிருந்தார் (ஆதி.6:9). முழு உலகமும் கெட்டுப் போயிருந்தது. மனிதனை உண்டாக்கினதற்காக தேவன் வேதனைப்

பட்டார். மிருகங்கள் பறவைகளை உண்டாக்கினதற்காக அவர் வருத்தப்படவில்லை. தமது சாயலில் படைத்த மனிதனை நினைத்து வேதனைப்பட்டார். மனுக்குலத்தை அழிக்க திட்டமிட்டார். அந்த அளவிற்கு பூமி முழுவதும் சீர்கேடு அடைந்திருந்தது.

இப்படிப்பட்ட சூழ்நிலையிலும் நோவாவின் குடும்பம் கர்த்தருக்குப் பிரியமாக வாழ முடிந்தது.

**நோவா தேவனுடைய கிருபை பெற்றார்**

**நோவாவுக்கோ கர்த்தருடைய கண்களில் கிருபை கிடைத்தது** (ஆதி.6:8).

முழு உலகிலும் ஒரு குடும்பம் மட்டுமே கர்த்தருக்குப் பிரியமாக நடந்தாலும் அந்தக் குடும்பத்தைக் கர்த்தர் அழிக்க மாட்டார் என்பதற்கு நோவாவின் குடும்பம் ஓர் நல்ல உதாரணம்.

**நோவா தேவனோடு நடந்தார்** (ஆதி.6:9)

உலகம் பாவத்தில் மூழ்கிக் கிடந்தது. மக்கள் சீர்கெட்டவர்களாக இருந்தனர். ஆனாலும் நோவா தேவனோடு நடந்தார். தேவனோடு நெருங்கிய ஐக்கியம் கொண்டிருந்தார். கர்த்தருடைய ஆலோசனைகளைக் கேட்டு அதன்படி செய்ய தன்னை ஆயத்தம் செய்திருந்தார்.

**நோவா தேவனுடைய கட்டளைப்படி பேழையை கட்டினார்**

வரப்போகும் வெள்ளப் பெருக்கத்தினால்

ஏற்படும் அழிவினின்று பாதுகாக்கப்பட பேழை யைக் கட்டும்படி தேவன் கட்டளையிட்டார். அது வரையிலும் அப்படிப்பட்ட ஒரு வெள்ளப் பெருக் கத்தை நோவா பார்த்திராவிட்டாலும், கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து பேழையைக் கட்டினார்.

**விசுவாசத்தினாலே நோவா தற்காலத்திலே காணாதவைகளைக் குறித்துத் தேவ எச்சரிப்புப் பெற்று பயபக்தியுள்ளவனாகி.... பேழையை உண்டுபண்ணினான்** (எபி.11:7).

## நோவா முழு உலகத்திற்கும் நீதியை பிரசங் கித்தான்

**பூர்வ உலகத்தையும் தப்பவிடாமல் நீதியைப் பிரசங்கித்தவனாகிய நோவா** (2 பேதுரு 2:15).

இன்றுள்ள நவீனக் கருவிகள் எதுவும் இல்லாத காலத்திலே முழு உலகத்திற்கும் வரப்போகிற அழிவினின்று தப்பித்துக்கொள்ள ஆயத்தமாகும் படி மக்களுக்கு எச்சரிப்பின் செய்தியைக் கொ டுத்த நோவாவின் பணி ஆச்சரியமானது.

## நோவா தன் குடும்பத்தை இரட்சிப்பதற்கு பேழையைச் செய்தான்

எச்சரிப்பின் செய்தியை முழு உலகமும் அலட்சியப்படுத்தினாலும் நோவாவின் குடும்பம் அழிவிலிருந்து பாதுகாக்கப்பட்டது. நோவா தன் குடும்பத்தை, கர்த்தருக்குப் பிரியமான குடும்ப மாயிருக்க கவனம் செலுத்தினார்.

## நோவாவின் மனைவியின் (ஷைலா) பங்கு

இந்த தாயாரின் செயல்பாடுகள் வெளிப்படை யாக சொல்லப்படாவிட்டாலும் மறக்க இயலாத பல அரிய காரியங்களை சாதித்தார்கள் என்பது நிச்சயம்.

### 1. சேம், காம், யாப்பேத் ஆகிய பிள்ளைகளைப் பெற்றார்கள்

நோவா ஐந்நூறு வயதானபோது சேம், காம், யாப்பேத் என்பவர்களைப் பெற்றான் (ஆதி.5:32, 6:10).

950 வருடம் வாழ்ந்த நோவாவிற்கு 500 வயது நடுத்தர வயதாக இருந்திருக்க வேண்டும் (ஆதி. 9:29). மூன்று பிள்ளைகளை பெற்றெடுத்த தாய் ஷைலா இந்த வயதில் பிள்ளை வேண்டாம் என்று எதிர்க்கவில்லை. கணவனுடன் இல்லற வாழ்க்கை யில் ஈடுபட்டதால்தான் இது சாத்தியமாயிற்று.

### 2. பிள்ளைகளை பரிசுத்தமாக வளர்த்தார்கள்

முழு உலகமும் கெட்டுப் போயிருந்த அந்த நாட்களில் இந்த மூன்று பிள்ளைகளும் எளிதில் கெட்டுவிடும் ஆபத்துகள் இருந்தது. தங்கள் வீட்டைவிட்டு வெளியே போனால் ஒழுக்கமுள்ள ஒருவரையும் பார்க்க இயலாது. அப்படிப்பட்ட பயங்கர சூழ்நிலையிலும் பிள்ளைகளை பரிசுத்த மாக வளர்த்த பெருமை இந்தத் தாயாரைச் சாரும் என்று நிச்சயம் கூறலாம்.

**3. கணவன் தன் மகத்தான பணிகளைச் செய்ய பெரும் உதவி செய்த தாய்**

முழு உலகத்திற்குத் தனி மனிதனாகச் சென்று பிரசங்கிக்க வேண்டிய மிகப்பெரிய ஊழியமும், பேழையைக் கட்ட வேண்டிய பிரமாண்டமான பணியும் நோவாவிற்கு இருந்தது. எனவே பிள்ளைகளை கர்த்தருக்குப் பிரியமானவர்களாக உருவாக்கியது இந்த தாயே.

**4. தன் கணவன் சோர்ந்து போகாமலிருக்க உற்சாகப் படுத்திய மனைவி**

நோவா உலகமெங்கும் சென்று பிரசங்கித்த போதிலும் ஒருவரும் இவருடைய செய்தியை ஏற்றுக்கொள்ளவில்லை. சோர்வோடு வீட்டிற்குத் திரும்பும்போதெல்லாம் அவருடைய மனைவி அவரை உற்சாகப்படுத்தியிருக்க வேண்டும்.

பேழை கட்டுவதைப் பார்த்து மக்கள் பரிகாசம் செய்திருப்பார்கள். அதையெல்லாம் தாங்கிக் கொள்ளக்கூடிய மனிதனாக இருக்க அவருடைய மனைவி அவருக்கு ஆறுதலாக இருந்திருக்க வேண்டும்.

இந்த செய்தியை வாசிக்கும் சகோதர சகோதரிகளே! உங்கள் குடும்ப நிலை என்ன? உங்கள் பிள்ளைகள் நிலை என்ன? உங்கள் பிள்ளைகள் மற்றவர்களுடன் சேர்ந்து கெட்டுப் போயிருக்கி

றார்களா? அல்லது உங்கள் பிள்ளைகளுடன் சேர்ந்து பழகின பிள்ளைகள் கர்த்தருக்குப் பிரிய மான பிள்ளைகளாக மாறியிருக்கிறார்களா? மற்ற வர்கள்மேல் பழிபோட்டு நமது பிள்ளைகளை பாதுகாக்க முயற்சிக்கிறீர்களா?

அன்றைய சூழ்நிலையில் நோவாவின் பிள்ளை கள் கர்த்தருக்குப் பயந்து வாழ முடிந்ததென்றால் நிச்சயமாக எந்த சூழ்நிலையிலும் உங்கள் பிள்ளைகள் பரிசுத்தமாக வாழ முடியும். நீங்கள் எப்படிப்பட்ட அஸ்திபாரம் உங்கள் பிள்ளை களுக்குப் போட்டிருக்கின்றீர்கள் என்பதைப் பொ றுத்து இது அமையும்.

**சகோதரரே!**

நோவாவைப்போல முழு உலகமும் சென்று ஊழியம் செய்தாலும், பேழை கட்டும் பணியைப் போன்ற பிரமாண்டமான தொழில் செய்தாலும் உங்கள் குடும்பத்தைக் கட்டி எழுப்பும் குடும்பத் தலைவனாக இருக்கின்றீர்களா? உங்கள் குடும்பம் சரியில்லை என்றால், ஊழியம் செய்து என்ன பயன்? என்ன வேலை செய்து சம்பாதித்து என்ன லாபம்? மனைவியும் பிள்ளைகளும் சரியில்லை யென்றால் அதற்கு சாக்குப்போக்குச் சொல்ல முயற்சிக்க வேண்டாம். குடும்பத்தைப் பாதுகாக்க பேழை கட்டுவதில் கவனம் செலுத்துங்கள்.

**சகோதரரிகளே!**

பிள்ளைகளைப் பெற்றெடுத்த தாய்மார்களே, உங்கள் பிள்ளைகளைக் கர்த்தருக்குப் பிரியமாக வளர்த்திருக்கின்றீர்களா? உங்கள் பிள்ளைகள் என்ன படித்திருக்கிறார்கள், எவ்வளவு சம்பாதித் திருக்கின்றார்கள் என்பதல்ல முக்கியம். உள்நாடா? வெளிநாடா? என்பதல்ல கேள்வி. இரட்சிக்கப்பட்டு கர்த்தருக்குப் பிரியமான பரிசுத்த வாழ்க்கை வாழ்கிறார்களா? உங்கள் கணவர் சோர்ந்து வரும் போது தைரியமூட்டுகிறீர்களா? வேதனையுடன் வரும்போது ஆறுதலான வார்த்தைகளைப் பேசு கிறீர்களா?

**நோவாவின் மருமக்கள்**

அந்த பொல்லாத உலகத்தில் நோவாவின் மகன்களுக்கு ஏற்ற பெண்ணை எப்படி கண்டுபிடித் தார்கள் என்பது ஆச்சரியம். ஆனாலும் நோவா வின் மருமக்களும் பேழைக்குள் பிரவேசிக்கும் தகுதி பெற்றிருந்தார்கள்.

**மாமனார், மாமியார்களே!**

உங்கள் மருமக்களை எப்படித் தேர்வு செய் தீர்கள்? அவர்களின் ஆவிக்குரிய வாழ்க்கையைக் கண்டு தேர்வு செய்தீர்களா? அல்லது எவ்வளவு பணம் கிடைக்கும் என்று பணத்தை முன்வைத்து தெரிந்தெடுத்தீர்களா? இன்று உங்கள் குடும்பம் ஆவிக்குரிய நிலையில் எப்படி இருக்கிறது?

## நோவா குடும்பத்தினர் முழுவதும் பேழைக்குள் பாதுகாக்கப்பட்டனர்

**கர்த்தர் நோவாவை நோக்கி, நீயும் உன் வீட்டார் அனைவரும் பேழைக்குள் பிரவேசியுங்கள், இந்தச் சந்ததியில் உன்னை எனக்கு முன்பாக நீதிமானாகக் கண்டேன் (ஆதி.7:1).**

**நீயும் உன்னோடகூட உன் மனைவியும் உன் குமாரரும் உன் குமாரரின் மனைவிகளும் பேழையை விட்டுப் புறப்படுங்கள் (ஆதி.8:16).**

**பின்பு தேவன் நோவாவையும் அவன் குமாரரையும் ஆசீர்வதித்து, நீங்கள் பலுகிப் பெருகி பூமியை நிரப்புங்கள் என்றார் (ஆதி.9:1).**

## இதை வாசிக்கும் நண்பர்களே!

உங்கள் குடும்பம் முழுவதும் கிறிஸ்துவாகிய பேழைக்குள் பிரவேசித்து விட்டீர்களா? இது ஒன்றே நிலைத்து நிற்கும் ஆசீர்வாதம். பேழைக்கு வெளியே நிற்கும் கணவனை, மனைவியை, பிள்ளைகளை உள்ளே கொண்டுவர ஆவன செய்யுங்கள். உலகம் அழிவிற்கு என்று நியமிக்கப்பட்டுள்ளது. கிறிஸ்துவுக்கு வெளியே நிற்கும் குடும்பங்கள் நித்திய ஆக்கினை அடைவார்கள். உங்கள் குடும்பத்திலுள்ள எந்த நபரும் கிறிஸ்துவுக்குள் வராமலிருந்தால், உங்கள் பிரதான வேலை அவர்களை இரட்சிப்பிற்குள் கொண்டு வருவதாயிருக்கட்டும்.

**நோவா - ஷைலா குடும்ப வாழ்க்கையிலிருந்து கற்றுக்கொள்ளும் காரியங்கள்:**

* நம் குடும்பம் தேவ கிருபை பெற்றதாக இருக்க வேண்டும்.
* குடும்பத் தலைவன் தேவனோடு நடக்கும் பரிசுத்தவானாக இருக்க வேண்டும்.
* முழு உலகமும் கெட்டுப்போனாலும் நம் குடும்பம் பரிசுத்தமாய் வாழ வழிசெய்ய வேண்டும்.
* முழுக் குடும்பமும் சபையாகிய பேழைக்குள் இருக்க வேண்டும்.
* தேவ செய்தியை பிறருக்குக் கொடுக்கும் குடும்பமாயிருக்க வேண்டும்.
* யாரும் கீழ்ப்படியாவிட்டாலும் சோர்வில்லாமல் ஊழியம் செய்ய வேண்டும்.
* பிள்ளைகளை கர்த்தருக்குப் பிரியமாய் வளர்க்க வேண்டும்.
* தன் கணவனுக்கு தைரியமூட்டின ஷைலா.
* கர்த்தருக்குப் பிரியமான மருக்களை கண்டு பிடிக்க வேண்டும்.
* முழுக்குடும்பமும் அழிவினின்று பாதுகாக்கப் பட வேண்டும்.



# ஆபிரகாம் - சாராள்

முற்பிதாக்களின் அட்டவணையில் முன்னணியில் நிற்பவர் ஆபிரகாம். முதலில் அவர் பெயர் ஆபிராம்; மனைவி பெயர் சாராய். இவர்களிடமிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்கள் ஏராளமுண்டு. வேதாகமம் எழுதப்படுவதற்கு பல நூற்றாண்டுகளுக்கு முன் வாழ்ந்தவர்கள். இவர்கள் பெயர்களை ஆபிரகாம், சாராள் என்று கர்த்தர் மாற்றினார் (ஆதி.17:5,15).

ஒரு நாள் கர்த்தர் ஆபிரகாமைச் சந்தித்து நீ இந்த இடத்தைவிட்டு நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்திற்கு போ என்றார். அப்போது ஆபிரகாமுக்கு 75 வயது (ஆதி.12:4). அப்படியானால் சாராளுக்கு 65 வயது (ஆதி.17:17). ஆபிரகாம் தான்

போகுமிடம் இன்னதென்று அறியாமல் புறப்பட்டுப் போனார் (எபி.11:8). சாராளும்கூடச் சென்றாள்.

**ஆபிரகாமிடமிருந்து கற்றுக்கொள்ளும் நல்ல பாடங்கள்:**

1. ஆபிரகாம் தேவ அழைப்பைப் பெற்றபோது தான் எங்கே போகிறோம் என்று தெரியாத போதிலும் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து புறப்பட்டுப் போனார். ஆபிரகாமின் விசுவாசம் ஆச்சரியமானது.

2. ஆபிரகாம் தன் மனைவியை தன்னுடன் கூட்டிச் சென்றார். பிள்ளை இல்லாத மலடிதானே என்று அலட்சியப்படுத்தவில்லை. இன்று பிள்ளையில்லாத கணவன் மனைவிக்குள் சண்டைகளைப் பார்க்கிறோம். ஆபிரகாம் தன் மனைவியை குறை கூறவில்லை. அவளை அலட்சியப்படுத்தவில்லை. அவளை மிக பட்சமாய் நடத்தினார்.

3. ஆபிரகாம் கர்த்தருக்கு பலிபீடம் கட்டி கர்த்தரை தொழுதுகொண்டார். தனக்கு கர்த்தர் ஒரு பிள்ளையைத் தரவில்லையே என்று குறை கூறவில்லை. ஆண்டவரைத் தேடுவதில் கவனம் செலுத்தினார்.

4. கர்த்தர் தனக்கு வாக்குப் பண்ணினது உடனே கிடைக்காவிட்டாலும் ஆபிரகாம் கர்த்தரை விசுவாசித்தார். விசுவாசத்தில் பலவீனமாக இருக்கவில்லை, சோர்ந்து போகவில்லை (ரோமர் 4:18-22).

## 5. சாராள் சொல்லுக்கு ஆபிரகாம் கீழ்ப்படிந்தார் (ஆதி.16:2)

தனக்கு இனி குழந்தை பெற வாய்ப்பில்லை என்று எண்ணியதால் சாராள் தன் கணவருக்கு தன் வீட்டு வேலைக்காரியை மறுமனையாட்டி யாகக் கொடுத்தாள். மேலான வெளிப்பாடும் வசன முமுள்ள இக்காலத்திலே இது தவறானதுதான். ஆனால் அக்காலத்திலே இப்படிப்பட்ட பழக் கங்கள் நடைமுறையில் இருந்தன. ஆபிரகாம் தன் மனைவி சொல்லுக்குக் கீழ்ப்படிந்தார்.

ஆகார் கர்ப்பவதியாகி தன் எஜமாட்டியை அலட்சியமாக நடத்தினபோது சாராள் வேதனைப் பட்டாள். ஆபிரகாம் சாராளைப் பார்த்து... உன் விருப்பம் எதுவோ அதைச் செய் என்றார். சாராள் அவளை கடினமாக நடத்தினபோது, ஆகார் ஊரை விட்டு ஓடிவிட்டாள். பின் கர்த்தர் சொன்னபடி திரும்ப வந்தாள்.

இந்த விஷயத்தில் ஆபிரகாம் தன் மனைவி சாராளுக்கு மதிப்புக்கொடுத்து நடந்துகொண்டது பாராட்டுக்குரியது. இந்த சந்தர்ப்பத்தில் ஆபிர காமின் வயது 85, சாராளின் வயது 75. இந்த கிழவி சொல்வதைக் கேட்டு வாலிபப் பெண்ணான ஆகாரை விட்டுவிடுவதா என்று ஆபிரகாம் நடந்து கொள்ளவில்லை.

**6. ஆபிரகாமின் பக்தி பாராட்டுக்குரியது**

99 வயதிலும் கர்த்தரை முகங்குப்புற விழுந்து வணங்கினார் ஆபிரகாம் (ஆதி.17:3,17).

**7. ஆபிரகாமின் விருந்தோம்பல் ஆச்சரியமானது**

வனாந்தரத்தில் வாழ்ந்துவந்த காலத்தில் தன்னிடத்தில் வந்த மூன்று புருஷர்களையும் கண்டபோது 99 வயதான ஆபிரகாம் அவர்களை வரவேற்க எதிர்கொண்டு ஓடி தரைமட்டும் குனிந்து அன்புடன் வரவேற்றார். வேகமாய்ப் போய் சாராளை உணவு தயாரிக்கச் சொல்கிறார். 99 வயதிலும் மாட்டு மந்தைக்கு ஓடுகிறார். நல்ல கன்றைப் பிடித்து வேலைக்காரனிடம் கொடுத்து சமையல் பண்ணச் சொல்கிறார்.

ஏராளமான வேலைக்காரர்கள் இருந்தபோதிலும் தானே ஓடி ஒரு இளங்கன்றை பிடித்துக் கொடுத்தார். வேலைக்காரர்கள் சரியில்லாத மாட்டை சமைத்துவிடக் கூடாது என்பதில் கவனம் செலுத்தினார். ஆயத்தப்படுத்தின விருந்தை விருந்தாளிகள் சாப்பிட்டபோது இவர் பணிவிடை செய்யும் ஆர்வத்தில் மரத்தடியில் நின்றுகொண்டிருந்தார் (ஆதி.18:2-8).

குடும்பத் தலைவர்கள் என்ற முறையில் கணவன்மாரே 4,000 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த ஆபிரகாமிடம் கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்கள் ஏராளமுண்டு.

**8. ஆபிரகாம் தன் சொந்தக்காரர்களுக்காக எடுத்த பிரயாசங்கள் பெருந்தன்மையானது**

தன் சகோதரன் மகன் லோத்தை தன்னோடு கூட்டிவந்து பராமரித்தார். இரு மேய்ப்பர்களுக்குள்ளும் பிரச்சனை உண்டானபோது லோத்திடம் மனவருத்தத்துடன் நடந்துகொள்ளாமல் நீ உனக்கு விருப்பமான இடத்தைத் தெரிந்துகொள் என்று விட்டுக்கொடுத்தார். லோத்தையும் அவனுக்குண்டான யாவற்றையும் அந்நிய ராஜாக்கள் சிறைப்பிடித்துச் சென்றபோது அந்த ராஜாக்களை எதிர்த்து போரிட்டு லோத்தை மீட்டுக்கொண்டு வந்தார். லோத்து நம்மைவிட்டுப் பிரிந்துபோனவன் தானே போய் அழியட்டும் என்று எண்ணவில்லை.

தேவன் சோதோமை அழிக்க திட்டமிட்ட போது தன் சொந்தக்காரன் லோத்து அங்கே இருப்பதை மனதில்கொண்டு தேவனிடம் பரிந்து பேசி அவனைக் காப்பாற்ற முயற்சி பண்ணினது ஆபிரகாமின் பெருந்தன்மையைக் காட்டுகிறது.

**9. தன் மனைவியை கெடுக்க முயற்சித்தவனுக்காக பரிந்துபேசி ஜெபித்த ஆபிரகாம்**

சாராளைத் தன் சகோதரி என்று சொன்னதினாலே அபிமெலேக்கு என்ற அரசன் அவளை தனக்கு மனைவியாக்க விரும்பி அரண்மனைக்கு கூட்டிச் சென்றான். கர்த்தர் அவனுக்குத் தரிசனமாகி உண்மையை வெளிப்படுத்தினார். உண்மை

யை மறைத்த ஆபிரகாமையும் சாராளையும் அபிமெலேக்கு கடிந்து கொண்டான். கர்த்தர் அவன் வீட்டாருடைய கர்ப்பத்தை அடைத்திருந்தார். ஆபிரகாம் எந்த மனக் கசப்புமில்லாமல் அபிமெலேக்கு வீட்டாருக்காக பரிந்து பேசி ஜெபித்தான். கர்த்தர் ஆபிரகாமின் ஜெபத்தைக் கேட்டு அவர்களைக் குணமாக்கினார்.

**10. ஆபிரகாமின் விசுவாசத்தின் உச்ச நிலை**

தன் முதிர்வயதிலே தன் ஒரே மகனான ஈசாக்கை பலியிடும்படி கர்த்தர் சொன்னபோது ஆபிரகாமுக்கு ஏன் என்று விளங்காவிட்டாலும் கர்த்தருக்கு கீழ்ப்படிந்தார். இச்செயலிலிருந்து ஆபிரகாமின் விசுவாசத்தின் உச்ச நிலையைக் காண்கிறோம். எந்த பெரிய பரிசுத்தவானும் இந்த விஷயத்தில் தயக்கம் காட்டியிருப்பான்.

அதிகாலையில் ஆபிரகாம் கர்த்தர் சொன்னதை நிறைவேற்ற புறப்பட்டார். மோரியா மலையில் பலிபீடம் கட்டி தன் மகனை அதிலே கிடத்தி பலியிட ஆயத்தமானபோது கர்த்தர் அதைத் தடுத்து ஆபிரகாமின் கீழ்ப்படிதலையும், விசுவாசத்தையும் பாராட்டினார். ஆபிரகாமின் தேவன் என்று அவர் தன்னை அழைக்க வெட்கப்படவில்லை. தேவனுடைய மிகச்சிறந்த தளபதியாக ஆபிரகாம் பிரகாசித்தார்.

### 11. தன் மனைவி சாராள் 127 வயதில் மரித்தபோது ஆபிரகாம் அவளுக்காக புலம்பி அழுதார்

இப்போது ஆபிரகாமுக்கு வயது 137. இந்த வயதிலும் தன் மனைவி 127 வயதில் மரித்தபோது புலம்பினார். கண்ணீர்விட்டு அழுதார் என்பது மனைவியின் மேலுள்ள அன்பையும், பாசத்தையும் வெளிப்படுத்துகிறது. பாட்டிதானே போய்ச் சேர்ந்துவிட்டாள் என்று தாத்தா ஆபிரகாம் எண்ணவில்லை.

வாலிப வயதில் மரித்தால்கூட தன் மனைவிக்காக அழாத சில கல் நெஞ்சக்காரர்கள் இன்றும் இருக்கிறார்கள். இவள் போனால் இன்னொருத்தி என்ற மனப்பான்மையில் நடந்துகொள்ளும் அன்பற்ற ஆண்கள் பலருண்டு.

### 12. தன் மகன் ஈசாக்கை பக்தியுள்ளவனாக வளர்த்திருந்தார்

100 வயதில் பெற்றெடுத்த மகன் ஈசாக்கு பல கோடி சொத்துக்குச் சொந்தக்காரன். இப்படிப்பட்ட செல்லப் பிள்ளையை ஒழுக்கமாக, நீதிமானாக, நேர்மையுள்ளவனாக ஆளாக்கினது, ஆபிரகாம் ஒரு நல்ல தகப்பன் என்பதை வெளிப்படுத்துகிறது. செல்லப் பிள்ளைகள் என்று பாராட்டி கெட்டு குட்டிச் சுவரான பிள்ளைகளை ஏராளம் பார்க்கலாம். கேட்டதை எல்லாம் கொடுத்து ஊதாரித்தனமான நிலையில் வளர்ந்து நிற்கும் வாலிபர்கள் பலருண்டு.

**13. தன் மகன் கர்த்தருக்குப் பயந்த பெண்ணை மணமுடிக்க கர்த்தரின் வழிநடத்துதலை நாடினார்**

விக்கிரக ஆராதனை நிறைந்த கானானியரில் தன் மகனுக்கு பெண் பார்க்க விரும்பவில்லை. அழகு, பணம் அந்தஸ்திற்கு மதிப்புக் கொடுக்க வில்லை. கர்த்தருக்குப் பயந்த பெண் மருமகளாக வரவேண்டும் என்பதே ஆபிரகாமின் ஜெபம். ஆபிரகாமின் ஜெபத்தின்படி, வாஞ்சையின்படி ஏற்ற மருமகளை கர்த்தர் ஈசாக்கிற்குக் கொடுத்த தைப் பார்த்து மனநிறைவு பெற்றார் ஆபிரகாம்.

ஆபிரகாம் ஓர் நல்ல குடும்பத் தலைவன். இதை வாசிக்கும் சகோதரர்களே! விசுவாசிகளின் தகப்பனான ஆபிரகாமின் வாழ்க்கையிலிருந்து கற்றுக்கொள்ளும் பாடங்களை நாமும் பின்பற்று வோமாக.

## சாராள்

ஆபிரகாமின் மனைவியாகிய சாராளிடமிருந்து நல்ல காரியங்கள் பலவற்றை நாம் கற்றுக்கொள்ள முடியும்.

**1. குடும்பத்தில் தேவசித்தம் நிறைவேற தியாகம் செய்தாள்**

கர்த்தர் ஆபிரகாமை அழைத்தபோது ஆபிர காமுக்கு வயது 75. சாராளுக்கு வயது 65. ஊர் என்ற பட்டணத்தைவிட்டு புறப்பட்டுப்போக ஆபிர காமுக்கு அழைப்பு வந்தபோது சாராள் எதிர்ப்போ,

மறுப்போ ஒன்றும் சொல்லாமல் கணவனுடன் சென்றாள். நல்ல வசதியாக வாழ்ந்த குடும்பம் அந்த வசதிகளையெல்லாம்விட்டு நாடோடிகள்போல அலைந்து திரிய ஒரு பெண்ணுக்கு எவ்வளவு கஷ்டமாயிருந்திருக்கும் சிந்தித்துப் பாருங்கள். கர்த்தர் சித்தம் செய்யத் தன்னை முற்றிலும் அர்ப்பணித்த சிறந்த பெண்மணி சாராள்.

தேவ அழைப்பிற்கு தன் கணவனை கீழ்ப்படியவிடாமல் தடுக்கும் மனைவிகள் பலருண்டு. அருமை சகோதரிகளே! தேவசித்தம் உங்கள் குடும்பத்தில் நிறைவேற எந்தத் தியாகத்தையும் செய்ய நீங்கள் ஆயத்தமா?

தான் போகும்இடம் இன்னதென்று அறியாமல் புறப்பட்டுப் போனான் ஆபிரகாம் (எபி.11:8). ஆனாலும் சாராளும் தைரியமாய்க் கூட சென்றாள். இந்த சூழ்நிலையில் இந்தக் காலத்தில் பல பெண்கள் என்ன செய்திருப்பார்கள்? அத்தான், நீங்கள் வேண்டுமானால் போய் வாருங்கள். வனாந்திரத்தில் அலைந்து திரிய என்னால் முடியாது என்று சொல்லியிருப்பார்கள். எந்த ஊருக்குப் போகிறோம் என்றுகூட தெரியாமல் புறப்பட்டாள்.

**2. தன் கணவனின் உயிரைக் காப்பாற்ற எதையும் செய்ய ஆயத்தமாயிருந்தாள்**

சாராள் 65 வயதிலும் மிக அழகாக இருந்தாள். தன்னைவிட பலவான்கள் தன்னைக் கொன்று

விட்டு சாராளை மனைவியாக்கிக் கொள்ளக்கூடாது என்ற பயம் ஆபிரகாமுக்கு இருந்தது. எகிப்திற்குப் போனபோது பார்வோனிடம் தான் ஆபிரகாமின் சகோதரி என்று பொய் சொல்லும்படி சாராளிடம் கூறினான். பின்பு அபிமெலேக்கிடமும் அவ்வித மே கூறும்படி சொன்னான் (ஆதி.12:10-20, 20:1-7).

சாராள் பொய் சொன்னாள் என்று வேதம் கூற வில்லை. ஆனால் பார்வோன் அரண்மனைக்கு அவள் அழைத்துக்கொண்டு போகப்பட்டபோதும், அபிமெலேக்கிடம் அவள் சென்றபோதும் கற்பிற்கு களங்கம் ஏற்படும் என்று தெரிந்தும் தன் கணவ னைப் பாதுகாக்க அவள் அமைதியாயிருந்தது ஆச்சரியமானது. தன் கணவன்மேல் அவள் எவ்வளவு அன்பும், பாசமும் வைத்திருந்தாள் என்பதை இது காட்டுகிறது.

### 3. ஆகாரை மறுமனையாட்டியாகக் கொடுத்த சாராளின் பெருந்தன்மை

இந்தக் காலத்தில் நமக்குக் கொடுக்கப்பட்டுள்ள வேத வெளிச்சம் அதிக பிரகாசமானது, உன்னதமானது. வேதாகமம் எழுதப்பட்டதற்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த இவர்கள் காலத்தில் ஒருவருக்கு பல மனைவிகள் என்ற பழக்கம் சாதாரணமானது. தனக்கு இனி குழந்தை பிறக்கும் என்ற நம்பிக்கையில்லாத நிலையில் தன் அடிமைப் பெண்ணாகிய ஆகாரை ஆபிரகாமுக்கு

மறுமனையாட்டியாகக் கொடுத்தாள் சாராள். இக் காலத்தில் இது தவறுதான். ஆனால் சாராளே இதை மனப்பூர்வமாகச் செய்தது அவளுடைய பெருந்தன்மையைக் காட்டுகிறது. தன்னைத் திருமணம் செய்ததால் ஆபிரகாமுக்கு சந்ததி இல்லாமல் போகிறதே என்ற ஆதங்கம் அவள் உள்ளத்தில் இருந்திருக்க வேண்டும்.

**4. கர்த்தருக்கும் தூதருக்கும் விருந்து படைத்த சாராள்**

தன் வீட்டிற்கு வந்தது கர்த்தரும் தூதர்களும் என்று அறியாமலேயே அவர்களை மிக அன்புடன் உபசரித்தாள் சாராள். கிட்டத்தட்ட இப்போது சாராளுக்கு 90 வயது. ஆனாலும் வேலைக்காரர்களை சார்ந்திராமல் சாராளே 3 படி மாவு எடுத்து பிசைந்து அப்பம் சுட்டாள். கர்த்தருக்கும், தூதர்களுக்கும் விருந்து கொடுத்த பெரிய சிலாக்கியத்தைப் பெற்றாள் சாராள்.

**5. 90 வயதிலும் குழந்தையைப் பெற்றெடுக்க தன்னை ஒப்புக் கொடுத்த சாராள்**


இந்த வயதில் எனக்கு இனி இன்பம் உண்டாயிருக்குமோ என்று சொன்னாலும், கர்த்தரின் சித்தம் தன்னில் நிறைவேற சாராள் தன்னை பூரணமாய் ஒப்புக்கொடுத்தாள். பிள்ளைப்பேறு நின்றுபோன காலத்திலும் கர்த்தர் அவளுக்கு அற்புதம் செய்தார். கர்த்தர் வாக்குப் பண்ணினபடியே ஈசாக்கைப் பெற்றெடுத்தாள்.

சாராளின் சந்ததி இன்றுவரை 4000 ஆண்டுகளாக வாழ்ந்து வருகிறது. இதை வாசிக்கும் சகோதரிகளே! சாராளிடமிருந்து கற்றுக்கொண்ட நல்ல பண்பாடுகளை நீங்களும் பின்பற்றுங்கள். இந்த தம்பதிகளிடம் காணப்பட்ட குறைகளை வேதம் மூடி மறைக்கவில்லை, அப்படிப்பட்ட குறைகள் உங்களிடம் காணப்பட்டால் அதை மூடி மறைக்காமல் அறிக்கை செய்து விட்டுவிடுங்கள்.

**ஆபிரகாம் - சாராள் குடும்பத்திலிருந்து கற்றுக் கொள்ளும் காரியங்கள்:**

- போகுமிடம் இன்னதென்று அறியாதிருந்தும் புறப்பட்டுச் சென்ற ஆபிரகாமின் விசுவாசம் ஆச்சரியமானது.
- வசதியான ஊரையும் வாழ்க்கை முறையையும் விட்டு வனாந்தர வாழ்க்கைக்கு செல்ல கர்த்தருக்குக் கீழ்ப்படிந்த குடும்பம்.
- பரிசுத்தக் குடும்பமாயிருந்தபோதிலும் ஆபிரகாம் தன் குறைகளை மறைக்காமல் வாழ்ந்த வெளிப்படையான வாழ்க்கை.

- தன் மனைவியை பறிக்க முயற்சித்தவனுக்காகவும் கசப்பில்லாமல் பரிந்துபேசி ஜெபித்த பெருந்தன்மை.
- கர்த்தர் வாக்குப் பண்ணினதை உடனே கொடாவிட்டாலும் சோர்ந்து போகாமல் கர்த்தரைப் பின்பற்றின வாழ்க்கை.
- 127 வயதான மனைவி இறந்தபோதும் புலம்பி அழுத ஆபிரகாமின் அன்பு.
- கர்த்தருக்குக் கீழ்ப்படிய தன் ஒரே மகனையும் பலிசெலுத்த ஆயத்தமான ஆபிரகாமின் அர்ப்பணிப்பு.
- தன் மகன் ஈசாக்கிற்கு திருமணம் செய்ய தேவ சித்தத்தை நாடினது.
- தன் கணவன் உயிரைக் காப்பாற்ற எதையும் செய்ய ஆயத்தமான சாராளின் உத்தமம்.
- தள்ளாத வயதிலும் அந்நியரை உபசரிக்க ஓடி ஓடி வேலைசெய்த முறை.



# ஈசாக்கு - ரெபெக்காள்

பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான்களின் குடும்பங்களில் முன்னணியில் நிற்பது ஈசாக்கு குடும்பம். ஆபிரகாமுக்கு 100 வயதானபோது ஈசாக்கு பிறந்தான். எனவே மிகுந்த செல்லமாக வளர்க்கப்பட்டிருப்பான். ஒரு பெரிய செல்வந்தர் குடும்பத்தில் பிறந்தவனாக இருந்தபோதிலும் பரிசுத்தவானாக திகழ்ந்தான்.

தன்னையே பலியிடப் போகிறார் தகப்பன் என்று அறிந்தபின்பும், பலிபீடத்தில் படுத்திருந்தது ஈசாக்கின் அர்ப்பணிப்பை காண்பிக்கிறது. திருமண வாழ்விற்கு முன்பே நல்ல பண்புகளுடன் வளர்க்கப்பட்டவர்கள் திருமண வாழ்வில் மகிழ்ச்சியுடன் நிறைவுடன் இருப்பார்கள்.

**ஈசாக்கிடம் காணப்பட்ட நல்ல பண்புகள்:**

**1. ஜெபிக்கிற வாலிபனாக இருந்தான்**

கோடிக்கணக்கான செல்வத்திற்கு ஒரே வாரிசாக வளர்ந்து வந்தபோதிலும் ஜெபிக்கிற வாலிபனாக இருந்தான்.

> **ஈசாக்கு சாயங்கால வேளையிலே தியானம் பண்ண வெளியிலே போயிருந்தான்** (ஆதி. 24:63).

உலகப்பிரகாரமான ஆசீர்வாதங்கள் ஏராளம் இருந்தாலும் தேவனுடைய ஒத்தாசை தேவை என்று உணருகின்ற கணவன்மார் நிச்சயம் ஊக்கமாய் ஜெபிக்கிறவர்களாயிருப்பார்கள். இதை வாசிக்கும் சகோதரர்களே! உங்கள் ஜெப வாழ்க்கை எப்படி இருக்கிறது? ஏதாவது தேவை இருந்தால் மட்டுமே கர்த்தரைத் தேடுகிறவர்களாக இருக்கின்றீர்களா? வியாதி வரும்போது மட்டுமே டாக்டரைத் தேடுகிற நிலையில் உங்கள் ஜெபம் இருக்கிறதா?

தன் வாழ்க்கைத் துணையைத் தெரிந்துகொள்ள தேவனை முற்றிலும் சார்ந்திருந்தான். அந்த விஷயத்தில் பக்தியுள்ள தன் தகப்பன் ஆபிரகாமையும் தன் வீட்டு விசாரணைக்காரனாக இருந்த எலியேசரையும் சார்ந்திருந்தான். தன் கண்ணுக்குப் பிரியமானவளாக இருக்க வேண்டும் என்று பெண் பார்க்க ஊர் ஊராய் சுற்றி அலையவில்லை. கர்த்தர் ஏற்றத் துணையைத் தருவார் என்று முழு நிச்சயமாய் நம்பி ஜெபித்தான்.

**2. ஈசாக்கு தன் மனைவிக்கு ஏற்ற கணவனாக நடந்துகொண்டான்.**

ஈசாக்கு தன் மனைவியாகிய ரெபெக்காளுடன் எப்போதும் ஜாலியாக இருந்தான்.

**ஈசாக்கு தன் மனைவியாகிய ரெபெக்காளோடே விளையாடிக் கொண்டிருந்தான் (ஆதி.26:8).**

ஜெப வீரனாக இருந்தவன் மனைவியை எப்போதும் சந்தோஷப்படுத்துகிறவனாகவும் இருந் தான். ஜெப வீரர்கள் என்று சொல்லுகிற சில ஆண்கள் வீட்டில் மனைவியுடன் தாராளமாக சிரித்துப்பேச மாட்டார்கள். மௌனச்சாமிகள்போல நடந்து கொள்ளுவார்கள்.

**ஈசாக்கு அவளை (ரெபெக்காளை) மனைவியாக்கிக் கொண்டு அவளை நேசித்தான் (ஆதி.24:67).**

தன் மனைவியினிடத்தில் உண்மையான அன்பு கொண்டு அவளை பட்சமாய் நடத்தின கணவ னாக இருந்தான்.

**3. ஈசாக்கு கடினமாய் உழைத்து தன் குடும்பத் தை நடத்தினான்**

**ஈசாக்கு அந்தத் தேசத்தில் விதை விதைத்தான், கர்த்தர் அவனை ஆசீர்வதித்ததினால் அந்த வருஷத்தில் நூறுமடங்கு பலன் அடைந்தான் (ஆதி.26:12).**

ஈசாக்கு சோம்பேறியல்ல. கர்த்தருடைய ஆசீர்வாதம் அவன் கையிட்டு செய்த எல்லா

வேலையிலும்கூட இருந்ததால் 100 மடங்கு ஆசீர்வதிக்கப்பட்டான்.

குடும்பத் தலைவர்களே! நீங்கள் கடினமாய் உழைக்கிறவர்களாகவும் இருக்க வேண்டும். தேவன் உங்களை ஆசீர்வதிக்கக்கூடிய விதத்தில் அவரை அனுதினமும் தேடி அவருக்கு உண்மை யுள்ளவர்களாகவும் நடந்துகொள்ள வேண்டும்.

**ஈசாக்கு பலிபீடம் கட்டி கர்த்தரைத் தொழுது கொண்டான் (ஆதி.21:25).**

கர்த்தர் அவனுக்குத் தரிசனமாகி பல ஆசீர் வாதங்களை அவனுக்கு வாக்குப் பண்ணினார் (ஆதி.26:2-5,24,25). கர்த்தர் ஈசாக்குடன் இருப்பதை அவனைச் சுற்றியிருந்தவர்கள் கண்டு அவனுடன் சமாதான உடன்படிக்கை பண்ண வந்தார்கள் (ஆதி. 26:28,29).

## ஈசாக்கிடம் காணப்பட்ட சில குறைகள்

தன் பிள்ளைகளிடம் சற்று பாரபட்சம் காட்டி னான். யாக்கோபைவிட ஏசாவிடம் அதிக பட்சமா யிருந்தான். அதற்கு சொல்லப்பட்ட காரணம் வேடிக்கையானது. ஏசா வேட்டையில் வல்லவன். சமையலிலும் கெட்டிக்காரன். தான் வேட்டையாடி யதை ருசியாக சமைத்து தகப்பனுக்குக் கொடுப் பான். அந்த ருசியான சாப்பட்டினிமித்தம் ஏசாவை அதிகம் நேசித்தான் (ஆதி.25:27,28). ஈசாக்கு சாப்பாட்டுப் பிரியன் என்று தெரிகிறது.

பெற்றோர்கள் பிள்ளைகளிடம் பாரபட்சமாய் நடந்துகொள்ளக்கூடாது. ஒரு பிள்ளையைவிட மற்றப் பிள்ளையிடத்தில் மேலான சில காரியங்களைக் கண்டு அவர்கள்மேல் சற்று அதிக பாசம் கொள்ளும் சந்தர்ப்பங்கள் வரலாம். ஆனாலும் இது எல்லாப் பிள்ளைகளுக்கும் தெரியக்கூடிய அளவில் நடந்துகொள்வது நல்லதல்ல. பிள்ளைகளுக்குள் இதனால் பிரச்சனைகள் உருவாக வழி ஏற்படும்.

தன் உயிருக்கு ஆபத்து ஏற்படும் எனப் பயந்து ரெபெக்காளை தன் மனைவி என்று சொல்லாமல் சகோதரி என்று பொய் சொன்னான். மனைவி என்று சொன்னால் தன்னைக் கொன்றுவிட்டு அவளை தூக்கிக்கொண்டு போய்விடுவார்கள் என்று எண்ணினான். சகோதரி என்று சொன்னால் இவனைக் கொல்லாமல் அவளை கூட்டிக்கொண்டு போய் விடுவார்கள்.

தன் மனைவிக்கு வரும் பிரச்சனையைப் பற்றி கவலைப்படாமல் தன் உயிரைப்பற்றி அதிக அக்கரை காட்டினது சரியான செயலல்ல. நல்ல மனிதர்களிடமும் விரும்பத்தகாத காரியங்கள் சில இருக்கலாம் என்பதற்கு இது ஓர் உதாரணம்.

**ரெபெக்காளிடம் காணப்பட்ட நல்ல பண்புகள்:**

மிக சிறந்த பெண் ரெபெக்காள். வாலிப வயதி

லேயே சிறந்த நற்குணங்கள் பல அவளிடம் இருந் தன. தோற்றத்தில் மிக அழகானவளாக இருந்தாள். அழகான பெண்கள் எல்லாம் குணத்தில் சிறந்தவர் களல்ல. இவள் அழகாயிருந்தாள், பண்பானவளாக இருந்தாள்.

குடிக்கக் கொஞ்சம் தண்ணீர் தா என்ற முதிய வருக்கு தண்ணீர் கொடுத்ததோடு உமது ஒட்டகங் களுக்கும் குடித்துத் தீருமட்டும் அவைகளுக்கும் தண்ணீர் கொடுப்பேன் என்று கூறினாள். குழா யைத் திறந்துவிட்டு தண்ணீர் கொடுக்கும் கால மல்ல அது. தண்ணீர் துரவிற்குள் இறங்கி ஏற வேண்டி இருந்தது. 10 ஒட்டகங்களுக்கும் தண்ணீர் ஊற்றுவது பெரிய வேலை.

இதை வாசிக்கும் சகோதரிகளே! அந்நியரை உபசரிக்கும் பண்பு, கடின உழைப்பு அவளிடம் இருந்தது. அந்நியரை உபசரிப்பதில் எப்படி இருக் கின்றீர்கள்? குடும்பத்தாரையும் நண்பர்களையும் உபசரிப்பதிலே சலிப்படைகிறீர்களா? கடினமாய் உழைக்கிறீர்களா?

ரெபெக்காளுக்கு சில மணி நேரத்தில் திருமணம் நிச்சயமாகி விட்டது. மணமகனை இன்னும் நேரில் பார்க்கவில்லை. யாருக்கு தண்ணீர் கொடுத்தாளோ அவருடன் இப்போது புறப்பட வேண்டும். இவரு டன் போகிறாயா என்று அவளிடம் கேட்டபோது போகிறேன் என்று பதிலளித்தாள் (ஆதி.24:58).

ரெபெக்காளின் விசுவாசம், துணிவு, பாராட்டுக் குரியது. முன்பின் அறிமுகமில்லாதவர்களுடன் நீண்ட பயணத்திற்கு ஆயத்தமாகி விட்டாள். தன் உள்ளத்தில் இது கர்த்தரின் வழிநடத்துதல் என்று திட்டமாக உணர்ந்திருந்தாள்.

ஈசாக்கு தூரத்தில் நடந்து வருவதைப் பார்த்த போது ஒட்டகத்தைவிட்டு இறங்கினாள். இது அவள் ஈசாக்குமீது கொண்டிருந்த மரியாதையைக் காட்டுகிறது (ஆதி.24:65). ரெபெக்காளை திருமணம் செய்த உடன் ஈசாக்கு தன் தாய் இறந்த துக்கம் நீங்கி ஆறுதல் அடைந்தான் (ஆதி.24:67). ரெபெக் காள் தன் கணவனின் துயரத்தை துடைத்து ஆறுதலளிக்கும் மனைவியாயிருந்தாள். கனிவான வார்த்தைகளாலும், அன்பின் செயல்களாலும், கணவனின் துக்கத்தை நீக்கிவிட்டாள். நற்பண்புள்ள எந்த மனைவியும் இதையே செய்வாள்.

**ரெபெக்காளிடம் காணப்பட்ட சில குறைகள்:**

ஏசாவைவிட யாக்கோபை அதிகம் நேசித் தாள். இந்த பாசத்தால் யாக்கோபு ஈசாக்கை ஏமாற்றி ஆசீர்வாதத்தைப் பெற வழியும் சொல் லிக் கொடுத்தாள். ஈசாக்கு வேட்டைக்குச் சென்று மிருகங்களை அடித்து சமையல்பண்ணும் முன்பாக, வீட்டிலிருந்த ஆட்டை அடித்து சமையல் பண்ணி இது வேட்டையாடினது என்றும், நான் ஏசா என்றும், யாக்கோபு பொய் சொல்ல ஆலோசனை

கூறினாள். தன் கணவனை ஏமாற்ற வழி முறைகளை சொல்லிக் கொடுத்தாள்.

யாக்கோபு தன் தகப்பனுடைய ஆசீர்வாதத்தைப் பெற வேண்டும் என்ற எண்ணத்தில் செய்த தவறுகள் இவை. யாக்கோபு தாயின் சொல் கேட்டு தகப்பனின் ஆசீர்வாதத்தை தவறான வழியில் பெற்றாலும் வீட்டைவிட்டு ஓடவேண்டிய நிலை ஏற்பட்டது.

வேதத்தின் மகத்துவத்தில் ஒன்று பரிசுத்தவான்களின் குறைகளையும் மறைக்காமல் வெளிப்படுத்தியது. அவர்களின் நல்ல பண்புகளை எழுதியுள்ள வேளையில் அவர்களிடம் காணப்பட்ட குறைகளை மறைக்க முயற்சிக்கவில்லை.

இதை வாசிக்கும் கணவன்மாரே! சகோதரிகளே! உங்களிடம் நல்ல பண்புகள் பல இருக்கின்றன. உங்களிடமுள்ள குறைகளை மறைக்க முயற்சிக்காமல், திருந்த ஆவன செய்யுங்கள்.

---

**ஈசாக்கு - ரெபெக்காள் குடும்பத்திலிருந்து கற்றுக் கொள்ளும் காரியங்கள்:**

- பெரிய செல்வந்தர் குடும்பத்தில் பிறந்த ஒரே மகனாக இருந்தபோதிலும், பரிசுத்தமாய் வாழ்ந்த ஈசாக்கு.

- தகப்பன் தன்னைப் பலியிடப்போவதாக அறிந்தும், தன்னை தகப்பனுக்குக் கீழ்ப்படித்திய பண்பு.
- வாலிப வயதிலும் தனித்துப்போய் ஜெபித்த ஈசாக்கு.
- தன் வாழ்க்கைத் துணையை தானே தேட முயற்சி யாமல் தேவ சித்தத்திற்கு ஒப்புக்கொடுத்தது.
- ஈசாக்கு மனைவியுடன் விளையாடி மகிழ்ச்சி யாயிருந்தது.
- ஈசாக்கு கடினமாய் உழைத்தான் - கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்டான்.
- பிள்ளைகளிடம் பட்சபாதம் காட்டியது நமக்கு ஓர் எச்சரிப்பு.
- குடிக்க தண்ணீர் கேட்டவனுக்கு, அவன் ஒட்ட கங்களுக்கும் தண்ணீர் ஊற்றிய தாராள உள்ளம் கொண்ட ரெபெக்காள்.
- கர்த்தரின் சித்தம் அறிந்து முன்பின் தெரியாத எலியேசருடன் புறப்பட ஆயத்தமான அவளின் கீழ்ப்படிதல்.
- வயதான கணவனுடைய பெலவீனத்தைப் பயன்படுத்தி யாக்கோபை ஏசாவாக நடிக்கச் சொன்னது நமக்கு எச்சரிப்பு.



# யாக்கோபு - ராகேல்

யாக்கோபு என்ற பெயர் பின்பு 'இஸ்ரவேல்' என்று மாற்றப்பட்டது. ஆபிரகாமின், ஈசாக்கின் சந்ததியார் இன்று இஸ்ரவேலர் என்றே அழைக் கப்படுகின்றனர். இது யாக்கோபின் சிறப்பு. யாக் கோபு வாலிப வயதில் சில தவறுகளைச் செய் தான். அதனால் பாடுகளையும் அனுபவித்தான்.

பசியுடன் வந்த தன் சகோதரனுக்கு அப்பத் தையும், பயற்றங் கூழையும் கொடுத்து சேஷ்ட புத்திர பாகத்தை அபகரித்தான். மூத்த மகனுக்கு சொத்தில் இரட்டிப்பான பங்கு கொடுக்கப்பட்டு வந்தது. இதற்கு "சேஷ்ட புத்திர பாகம்" (மூத்த மகன் பாகம்) என்று பெயர்.

ஈசாக்கிற்கு இருந்த சொத்துகள் ஏராளம். ஏசா மூத்தவன். எனவே அவனுக்கு இரட்டிப்பான பங்கு

உண்டு. அதை ஏமாற்றி வாங்கினான் யாக்கோபு. தகப்பனிடம் ஏசாபோல நடித்து தகப்பனின் ஆசீர் வாதத்தையும் ஏமாற்றி வாங்கிக்கொண்டான்.

எப்படியாவது சம்பாதிக்க வேண்டும். எந்த வழியிலாவது பணத்தை சேகரிக்க வேண்டும் என்ற எண்ணமுடையவர்களாக இருக்கும் வாலி பர்கள் பிற்காலத்தில் அதற்கான தண்டனையை அனுபவியா்மல் போகமாட்டார்கள்.

### யாக்கோபு அனுபவித்த பாடுகள்

1) தன் சகோதரன் தன்னைப் பழிவாங்கி விடுவான் என்று பயந்து பெற்றோரையும் பிறந்த வீட்டை யும் விட்டு வெளியேறவேண்டிய நிலை ஏற்பட்டது.

2) மாமன் வீட்டில் மாட்டிக்கொண்டான். அக்கால வழக்கப்படி பெண்ணுக்கு ஏராளமான பரிசு களைக் கொடுத்துத் திருமணம் செய்ய யாக்கோ பிடம் பணமில்லை. எனவே ராகேலுக்காக 7 வருடம் மாமன் வீட்டில் வேலைக்காரனாயிருக்க ஒப்புக்கொண்டான். வேலைக்கார மருமகனுக்கு மரியாதை கிடைக்குமா?

3) ஏழு வருட கடின உழைப்பிற்குப் பின்பு ராகே லுக்குப் பதில் லேயாளைக் கொடுத்து யாக் கோபை ஏமாற்றினான் லாபான். தாய் தகப்பனை ஏமாற்றும் வாலிபரெல்லாம் ஏமாற்றப்படுவது பெண் கொண்ட மாமனார் வீட்டில்தான்.

வாலிபரே! பெற்றோரையும், உடன் பிறந்தவர் களையும் ஏமாற்றி முன்னேற நினைக்கிறீர்களா? தகப்பனை அடிக்கிறவன், மாமனாரால் அடிபடு வான். தாயை அவமதிக்கிறவன், மாமியாரால் அவமதிக்கப்படுவான். இது சாபமல்ல, உண்மை. மனிதன் எதை விதைக்கிறானோ அதையே அறுப் பான். யாக்கோபுக்கு லாபான் வஞ்சனை செய்து பத்துமுறை அவன் சம்பளத்தை குறைத்தான் (ஆதி.31:7,41).

**யாக்கோபு தேவன்மேல் பற்றுதலான வாலிபன்**

முன்னேறத் துடித்து சில தவறுகளைச் செய்த போதிலும், அவன் தேவன்மேல் அதிக பற்றுத லாக இருந்தான். கர்த்தர் அவனுக்கு பல முறை தரிசனமானார். யாக்கோபு பிரயாணம் பண்ணி ஓரிடத்தில் படுத்தபோது கர்த்தர் தரிசனமாகி அவனுக்கு பல வாக்குத்தத்தங்களைக் கொடுத் தார். காலையில் யாக்கோபு எழும்பி கர்த்தருக்குப் பொருத்தனை பண்ணினான் (ஆதி.28:11-22).

**யாக்கோபு - ராகேல் திருமணம்**

யாக்கோபு மாமன் வீட்டிற்குப் போகுமுன்பே வழியில் ஆடு மேய்த்துக் கொண்டிருந்த ராகேலை சந்தித்தான். ராகேலை நேசித்தான். ஈசாக்கு - ரெபெக்காள் திருமணம் பெரியோர்களால் நிச்ச யிக்கப்பட்டது. யாக்கோபு ராகேல் ஒருவரையொ ருவர் நேசித்து திருமணம் செய்து கொண்டனர்.

ராகேலுக்காக லாபானிடம் மொத்தம் 14 வருடம் வேலை செய்தான். அவள் பேரில் இருந்த பிரியத்தினாலே அந்த வருஷங்கள் அவனுக்குத் கொஞ்ச நாளாகத் தோன்றினது (ஆதி.29:20).

இந்த அன்பு கடைசிவரை இருந்தது. இடையில் லேயாள் வந்தாள், பில்காள் வந்தாள், சில்பாள் வந்தாள். கோத்திரப் பிதாக்கள் பிறந்தார்கள். குடும்பம் பெருகிவிட்டது. அக்கால வழக்கப்படி பல திருமணங்களை செய்துகொண்டான். பலதார மணங்களுக்குத் தேவன் காரணரல்ல. ஆதாமுக்கு ஏவாளை மட்டுமே மனைவியாகக் கொடுத்தார். பலதார மணம் பிற்காலத்தில் வந்த பழக்கம்.

**யாக்கோபு கடின உழைப்பாளி**

குடும்பம் பெரிதான போதிலும் தன் குடும்பத்தை நடத்த கடின உழைப்பு உழைத்தான். தனக்கு இருந்த மனைவிகளை வேலைக்குப் போகச் சொல்லி குடும்பம் நடத்தவில்லை. அவனே பாடுபட்டான்.

> **பகலிலே வெயிலும் இரவிலே குளிரும் என்னைப் பட்சித்தது. நித்திரை என் கண்களுக்குத் தூரமாயிருந்தது. இவ்விதமாய் பாடுபட்டேன் (ஆதி. 31:40).**

இதுவே யாக்கோபின் சாட்சி. குடும்பத்தின் தேவைகள் பெருகும்போது கடின உழைப்பு உழைத்து குடும்பத்தை நடத்த வேண்டியது கணவனின் கடமை.

## யாக்கோபு ஜெப வீரன்

தன் குடும்பத்துடன் யாக்கோபு பிரயாணப் பட்டு வரும்போது யாப்போக்கு நதிக்கரையில் இரவு முழுவதும் போராடி ஜெபித்தான். தேவ ஆசீர்வாதத்தை நாடி ஜெபித்தான். தேவன் அவன் பெயரை இஸ்ரவேல் என்று மாற்றினார். எத்தனா யிருந்த அவன் தேவனுடைய பிரபு என்று உயர்த் தப்பட்டான். இதை உறுதிசெய்து மறுபடியும் தேவன் அவனுக்குத் தரிசனமாகி அவர் பெயரை இஸ்ரவேல் என்று உறுதிப்படுத்தினார் (ஆதி.35:9,10).

## ராகேல்: வாலிப வயதில் கடினமாய் உழைத் தாள்

> **வாலிப வயதிலே தன் தகப்பனுடைய ஆடுகளை மேய்க்கும் வேலையைச் செய்து வந்தாள் ராகேல்** (ஆதி.29:9).

திருமண வயதிற்கு வந்துள்ள பெண்கள் எத் தனைபேர் இன்று இப்படி கடின உழைப்புக்கு ஆயத்தமாயிருக்கிறார்கள்? ராகேல் தகப்பனுக்குக் கீழ்ப்படிகிறவளாக இருந்தாள். ஆடு மேய்க்கும் கடின வேலையை மனமுவந்து செய்து வந்தாள். இது அவள் பிற்கால வாழ்விற்கு மிகவும் உதவி செய்தது.

## தன் பரிசுத்தத்தை பாதுகாத்துக் கொண்டாள்:

யாக்கோபு தன்மேல் உயிரையே வைத்திருந்த போதிலும் ஏழு வருடமும் தவறு செய்யாமல் தன்னை

பாதுகாத்துக் கொண்டாள். தன்னை விரும்பும் ஆண் தன் வீட்டிலேயே தங்கி இருந்தபோதிலும் பரிசுத்த வாழ்க்கை வாழ்ந்தாள்.

**ராகேல் நல்ல தாய்**

யோசேப்பையும் பென்யமீனையும் பெற்றாள். யோசேப்பு மிக முன்மாதிரியான மகனாக வளர ராகேல் பெரிதும் உதவி செய்திருக்க வேண்டும். பார்வோனுக்கு அடுத்த ஸ்தானத்தில் ஒரு பிரதம மந்திரி நிலைக்கு உயர்த்தப்பட்டான். ஆரம்ப நாட்களில் தாயின் பக்தியுள்ள வாழ்க்கை அவனுக்கு நல்ல வித்திட்டது என்பது கவனத்திற்குரியது.

**குடும்பப் பிரச்சனை வந்தபோது கணவனுக்கு உறுதுணையாய் நின்றாள்**

தன் தகப்பன் லாபான் தன் கணவனை சம்பளத்தில் வஞ்சிப்பதைப் பார்த்து வேதனைப்பட்டாள். 20 வருடமாய் தகப்பனுடன் இருந்த அவள் தன் கணவன் அங்கிருந்து புறப்படத் திட்டமிட்ட போது அவளும் அவனுடன் புறப்பட ஆயத்தமானாள். எங்களுடைய அப்பா வீட்டிலேயே இருப்பேன். நீர் வேண்டுமானால் போய்வாரும் என்று சொல்லவில்லை (ஆதி.31:14-16).

**ராகேலிடத்தில் காணப்பட்ட சில குறைகள்:**

ராகேல் தனக்குக் குழந்தை பிறக்கவில்லை என்று கண்டபோது கர்த்தரை நோக்கி ஜெபிக்

காமல் தன் சகோதரிமேல் பொறாமை கொண்டாள். எனக்குப் பிள்ளை கொடும் இல்லாவிட்டால் சாகி றேன் என்று புருஷனிடம் சண்டையிட்டாள் (ஆதி. 30:1). தகப்பன் வீட்டைவிட்டு புறப்பட்டபோது, தன் தகப்பனுடைய சிலைகளைத் திருடிக் கொண் டாள் (ஆதி.31:19).

திருடினதும் தப்பு. கர்த்தர்மேல் நம்பிக்கை வைக்காமல் சிலையின்மேல் நம்பிக்கை வைத் ததும் தப்பு. தகப்பன் அந்த சிலைகளைத் தேடின போது ஒட்டகச் சேனத்தின்கீழ் மறைத்து வைத்து அதின்மேல் உட்கார்ந்துகொண்டாள். பெண்களுக் குரிய வழிபாடு எனக்கு உண்டாகி இருக்கிறது. அதினால் எழுந்திருக்கவில்லை என்று தகப்ப னிடம் பொய் சொன்னாள்.

அருமை சகோதரிகளே! தகப்பன் வீட்டுப் பொருளானாலும் அவரிடம் சொல்லாமல் ஒரு பொருளை எடுப்பது திருட்டுதான். அந்த திருட் டை மறைத்து பொய் சொல்வதும் சரியல்ல.

ராகேல் குறுகின காலம் வாழ்ந்து மரித்தாள். அவள் கல்லறையை இன்றும் காணலாம். எருசலே முக்கும் பெத்லகேமுக்கும் இடையில் ராகேலின் கல்லறை இருக்கிறது.

**யாக்கோபு - ராகேல் குடும்ப வாழ்க்கையிலிருந்து கற்றுக்கொள்ளும் காரியங்கள்:**

- முன்னேற வேண்டும் என்ற வாஞ்சையுள்ளவனாயிருந்தான் யாக்கோபு.
- தன் சகோதரனையும் தன் தகப்பனையும் ஏமாற்றினது நமக்கு எச்சரிப்பு.
- தகப்பனை, சகோதரனை ஏமாற்றினவன் மாமனால் ஏமாற்றப்பட்டது ஒரு பாடம்.
- தன் அன்புக்குரிய ராகேலுக்காக 14 வருடம் வேலை செய்தான்.
- பகல் இரவு பாராமல் கடினமாய் உழைத்தான்.
- தேவனோடு பொருத்தனை பண்ணினான் யாக்கோபு.
- யாக்கோபு நல்ல ஜெப வீரன். தேவனோடு போராடி ஜெபித்தான்.
- வாலிப வயதில் ஆடு மேய்த்து கடின உழைப்பினால் முன்னேறினாள் ராகேல்.
- குடும்பப் பிரச்சனை வந்தபோது தன் கணவனுக்கு உறுதுணையாய் நின்றாள் ராகேல்.
- ராகேல் தகப்பனுடைய சிலைகளை எடுத்ததும், அவனிடம் பொய் சொன்னதும் நமக்கு எச்சரிப்பு.



# யோசேப்பு

**யோ**சேப்பின் குடும்ப வாழ்க்கையைக் குறித்து வேதாகமத்தில் அதிக விளக்கமில்லை. அவனுக்கு பார்வோன் ஓன் பட்டணத்து ஆசாரியனாகிய போத்திபிராவின் மகளான ஆஸ்நாத்தை மனைவியாகக் கொடுத்தான் என்று கூறப்பட்டுள்ளது (ஆதி. 41:45). ஆஸ்நாத்தைக் குறித்து அதிகம் கூறப்படவில்லை. ஆனால் யோசேப்பு திருமணத்திற்கு முன்பும் பின்பும் எப்படி வாழ்ந்தான் என்று தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

## திருமணத்திற்கு முன் யோசேப்பு

யாக்கோபுக்கும் ராகேலுக்கும் பிறந்த யோசேப்பு தன் சிறுவயதிலேயே தாயை இழந்துவிட்டான். தன் தம்பி பென்யமீன் பிறந்தவுடனே ராகேல் இறந்துவிட்டாள். தாயில்லாத நிலையில்

தகப்பனின் அன்பிற்கும் பாசத்திற்கும் உரிய மகனாக யோசேப்பு வளர்ந்து வந்தான். யாக்கோபு தன் பிள்ளைகள் யாவரையும்விட யோசேப்பை அதிகம் நேசித்தான். அவனுக்கு பல வருணமான ஆடைகளை உடுத்தி மகிழ்ந்தான் (ஆதி.37:3).

யோசேப்பு சிறு வயதிலேயே கர்த்தருக்குப் பிரியமாக வாழ்ந்து வந்தான். தன் சகோதரர்கள் செய்யும் தவறுகளை தகப்பனுக்கு எடுத்துக் கூறினான். யாக்கோபு இவனை அதிகமாய் நேசித்ததாலும் சகோதரர்கள் செய்யும் தவறுகளை யோசேப்பு தன் தகப்பனுக்கு சொல்லி வந்ததாலும் அவர்கள் இவனை பகைத்தார்கள். ஏற்கெனவே தாயின் அன்பை இழந்த அவனுக்கு சகோதரர்களின் அன்பும் இல்லாமல் போயிற்று.

யோசேப்பு வாலிப வயதிலும் அதிகம் ஜெபிக்கிறவனாய் இருந்திருக்க வேண்டும். கர்த்தர் அவனுக்கு பல தரிசனங்களைக் கொடுத்தார்.

தேவ தரிசனங்களையும், வெளிப்பாடுகளையும் பெற முதிர்வயதடைய வேண்டும் என்று சொல்வதற்கில்லை என்பதற்கு அடையாளமாக யோசேப்பின் அனுபவம் இருந்தது. அவனுக்கு 17 வயதுதான். ஆனாலும் இனி நடக்கப்போகும் காரியங்களை கர்த்தர் அவனுக்கு தரிசனங்களிலே வெளிப்படுத்தினார்.

## இரண்டு சொப்பனங்கள்

1) தன் சகோதரனின் அரிக்கட்டுகள் தன் அரிக் கட்டை வணங்கினது.

2) சூரியன், சந்திரன் பதினொரு நட்சத்திரங்கள் தன்னை வணங்கியது. அதாவது அவன் சகோ தரர்களும், பெற்றோரும் அவனை வணங்கும் நிலையில் கர்த்தர் அவனை உயர்த்துவார் என்ற பொருள் கொண்ட சொப்பனங்களைக் கண்டான்.

எல்லா சொப்பனங்களையும் எல்லாரிடமும் உடனே சொல்லிவிடக் கூடாது என்பதற்கு எச்சரிப் பாகவும் இதை எடுத்துக் கொள்ளலாம். கர்த்தர் தனக்குக் காட்டின சொப்பனங்களை சகோதரர்களி டம் பகிர்ந்து கொண்டதினால் அவர்கள் அவன் மேல் பொறாமைப்பட்டார்கள். வாலிபனாக இருந்த படியால் மனந்திறந்து ஒளிவுமறைவின்றி உள்ளதை சொன்னதினால் அநேகருடைய பகையை சம்பா தித்துக் கொண்டான்.

ஆடுகளை மேய்க்கும் சகோதரர்களைப் பார்த்துவர தகப்பன் அவனை அனுப்பினார். அவன் சகோதரர்கள் அவனை கொலை செய்ய திட்டமிட்டனர். அவனை ஒரு குழியிலே போட் டார்கள். பின்பு மீதியானியரிடம் 20 வெள்ளிக் காசுக்கு விற்றுப்போட்டார்கள். மீதியானியர் எகிப்து அரசன் பார்வோனின் உயர் அதிகாரியான போத்தி பாரிடம் அவனை விற்றார்கள். வாலிப வயதிலேயே

அவன் இரண்டு பேர்களிடம் அடிமையாய் விற்கப்பட்டான். அடிமையைக் கொன்றாலும் கேள்வியில்லை என்ற நிலை இருந்தது.

போத்திபாரின் மனைவி பாவம் செய்ய அவனைக் கட்டாயப்படுத்தினபோதிலும் அவன் சம்மதியாமல் ஓடிப்போனான். அவள் அவன்மீது வீண்பழி சுமத்தியதால் யோசேப்பு சிறைச்சாலையில் அடைக்கப்பட்டான். 17 வயதில் அடிமையாய் விற்கப்பட்ட அவனுக்கு 30 வயது வரையிலும் சிறைச்சாலை வாழ்க்கை (ஆதி.41:46). தான் தவறு செய்திருந்தால் போத்திபார் வீட்டில் நல்ல சம்பளத்துடன் பதவி உயர்வு பெற்று வாழ்ந்திருப்பான். தான் செய்யாத தவறுக்காக சுமார் 13 ஆண்டுகள் ஜெயிலில் இருந்தான்.

ஆயிரம் எண்ணங்கள் அவன் மனதில் ஓடியிருக்கும். கர்த்தர் என்னை மறந்து விட்டாரா, உண்மையாயிருக்கும் எனக்கு ஏன் இந்த வாழ்க்கை என்று அங்கலாய்த்திருக்கலாம். சிறைச்சாலையிலும் கர்த்தர் யோசேப்போடே இருந்தார் (ஆதி.39:21, 23). ஆனாலும், ஒரு மாதத்திலோ, ஒரு வருடத்திலோ அவனை வெளியே கொண்டுவந்து விடவில்லை. எல்லாவற்றிற்கும் கர்த்தர் ஒரு நேரம் வைத்திருப்பார். அவருடைய பலத்த கைக்குள் அடங்கி இருப்பவர்களை கர்த்தர் ஏற்ற காலத்திலே உயர்த்துவார். கர்த்தர் ஏற்ற வேளையில் எல்லாவற்றையும் நேர்த்தியாய்ச் செய்வார்.

அந்த சிறைச்சாலையிலும் யோசேப்பு இரண்டு கைதிகளின் சொப்பனங்களுக்கு விளக்கங்களைக் கொடுத்தான். பார்வோனுக்கு கர்த்தர் இரண்டு சொப்பனங்களைக் கொடுத்து, அதற்கு யாராலும் விளக்கமளிக்க முடியாதபோது, யோசேப்பிற்கு அவைகளின் வெளிப்பாட்டைக் கொடுத்தார்.

யோசேப்பு பார்வோனின் சொப்பனத்திற்கு விளக்கமளித்தது மட்டுமல்ல, மேற்கொண்டு என்ன செய்ய வேண்டும் என்ற தேவ ஆலோசனை யையும் கூறினான் (ஆதி.41:25-37). ஒரு சில மணி நேரத்தில் அடிமையாய், சுமார் 13 ஆண்டுகள் சிறைச்சாலையிலிருந்த ஒரு கைதி எகிப்து பேரரச னான பார்வோனுக்கு அடுத்த ஸ்தானத்திற்கு உயர்த்தப்பட்டான். போத்திபாரைப் போன்ற ஆயிரக்கணக்கான அதிகாரிகளுக்கு மேலாக உயர்த்தப்பட்டான்.

அருமையான வாலிப தம்பி, தங்கைகளே! கர்த்தர் உங்களை உயர்த்தும்படி அவருடைய பலத்த கரத்திற்குள் அடங்கி இருங்கள். அவருக்குப் பிரியமாய் வாழுங்கள். அதற்காக என்ன பாடு களையும் அனுபவிக்கவும் ஆயத்தமாகுங்கள். யாரும் கற்பனையிலும் எதிர்பார்க்காத உயர்வை கர்த்தர் உங்களுக்குத் தருவார்.

**எகிப்து பேரரசு முழுமைக்கும் யோசேப்பு அதிகாரி யானான் (ஆதி.41:43).**

யோசேப்பிற்கு திருமணம் நடந்தது. அரசனே அவனுக்குப் பெண் பார்த்து ஒழுங்கு செய்தான். அவன் மனைவி ஆஸ்நாத் ஆசீர்வதிக்கப்பட்ட பெண்ணாக இருந்திருக்க வேண்டும். யோசேப்பைக் கணவனாகப் பெற்றது அவள் பாக்கியம். மனைவிகள் ஒவ்வொருவரும் தன் கணவனைக் குறித்து இவ்விதம் எண்ணக்கூடிய விதத்தில் கணவன்மார் நடந்துகொள்ள வேண்டும்.

## திருமணத்திற்கு பின் யோசேப்பு

யோசேப்பு தன் குடும்பத்தை எப்படி நடத்தினான் என்று விளக்கமாகக் கூறப்படவில்லை. அவனுக்குப் பிறந்த மனாசே, எப்பிராயீம் இருவரையும் கர்த்தருக்குப் பிரியமாக வளர்த்தான். அவர்கள் இருவரும் கோத்திரப் பிதாக்களாக யாக்கோபினால் ஏற்றுக்கொள்ளப்பட்டார்கள்.

## யோசேப்பு தன் தகப்பனான யாக்கோபின் ஆசீர்வாதத்தைப் பெற்றான்

எகிப்தின் உயர்ந்த பதவிக்கு வந்தபின்பும் தன் தகப்பனை மறந்து விடவில்லை. தன் தகப்பனை அழைத்துவர வாகனங்களையும் ஆட்களையும் அனுப்பி யாக்கோபை எகிப்திற்குக் கூட்டி வந்தான். தன் இரதத்தில் ஏறிச்சென்று தகப்பனை சந்தித்து அவன் கழுத்தை கட்டிக்கொண்டு வெகுநேரம் அவன் கழுத்தைவிடாமல் அழுதான் (ஆதி.46:29) என்று கூறப்பட்டுள்ளது. யோசேப்பு தன் தகப்

பனை எவ்வளவாய் நேசித்தான் என்பதை இது காட்டுகிறது.

**திருமணமான சகோதரரே!**

உங்கள் அப்பா அம்மாவை இப்படி பாசத்துடன் நடத்துகிறீர்களா? திருமணத்திற்குப் பின் தன் பெற்றோரைப்பற்றி அக்கரையில்லாத ஆண்கள் அநேகர் உண்டு. திருமணத்திற்குப் பின்பும் பெற்றோரை நேசிக்கவேண்டும், பராமரிக்க வேண்டும், செய்யவேண்டிய கடமைகளைச் செய்ய வேண்டும்.

யாக்கோபு யோசேப்பையும், அவன் பிள்ளைகளையும் ஆசீர்வதித்தான். இந்த ஆசீர்வாதமும் நமக்குத் தேவை. தகப்பனை, தாயை நோகப் பண்ணி அவர்களை கண்ணீர்விட வைக்கும் பிள்ளைகள் ஆசீர்வதிக்கப்பட மாட்டார்கள். பெற்றோரிடம் சில குறைகள் காணப்பட்டாலும் அதை பெரிதுபடுத்தாதபடி அவர்களுக்கு உகந்த பிள்ளைகளாக நடந்து அவர்களுடைய ஆசீர்வாதத்தைப் பெற வேண்டும்.

**யோசேப்பு தனக்கு தீமை செய்த சகோதரருக்கும் நன்மை செய்தான்**

யோசேப்பு கண்ட சொப்பனத்தின்படியே அவன் சகோதரர்கள் அவனுக்கு முன் விழுந்து அவனை வணங்கினார்கள். தன்னை கொலை செய்ய முயற்சித்தவர்கள்தான் இவர்கள். தன்னை 20 வெள்ளிக்காசுக்கு விற்றவர்கள்தான் இந்த

சகோதரர்கள். ஆனாலும் அவர்களை பழிவாங்க விரும்பவில்லை. கொலை செய்ய நினைத்தவர்கள் தரையிலே முகங்குப்புற விழுந்து கிடக்கிறார்கள். அடிமையாய் விற்கப்பட்டவன் இன்று அரச அரண்மனையில் வாழ்கின்றான். இந்தத் தண்ட னையே போதும்.

யோசேப்பு உள்ளத்தில் கசப்பு, வெறுப்பு, பகை உணர்வு இல்லை. நீங்களல்ல, கர்த்தரே என்னை இங்கே கொண்டு வந்தார். எல்லாம் நன்மைக்கு ஏதுவாக நடந்துள்ளது என்று அதை நன்மையாக எடுத்துக் கொண்டான் யோசேப்பு.

சகோதரர்களே! திருமணமான பின்பும் உங்கள் சகோதர சகோதரிகளுக்கு நன்மை செய்யுங்கள். அவர்கள் உங்களுக்குத் தீமை செய்தவர்களாக இருந்திருந்தாலும் அதையெல்லாம் மறந்து அவர் களுக்கு நன்மை செய்யுங்கள். இன்று நீங்கள் கர்த்தரால் உயர்த்தப்பட்டு நல்ல நிலையில் இருக் கிறீர்கள். உங்கள் சகோதர சகோதரிகளுக்கும் நன்மை செய்ய மறவாதிருங்கள்.

**யோசேப்பின் குடும்ப வாழ்க்கையிலிருந்து கற்றுக் கொள்ளும் காரியங்கள்:**

- சிறுவயதிலேயே கர்த்தருக்குப் பிரியமான வாலிபனாய் விளங்கினான்.
- தேவ தரிசனங்களைப் பெற்ற வாலிபனாய் திகழ்ந்தான்.
- வாலிப வயதில் வந்த சோதனைகளை மேற் கொண்டான்.
- செய்யாத தவறுக்காக பல ஆண்டுகள் சிறைத் தண்டனை பெற்றபோதும் சோர்ந்து போகவில்லை.
- தேசத்தைப் பாதுகாக்க அரசனுக்கு தேவ ஆலோசனை கூறும் கிருபை பெற்றான்.
- தீமை செய்த சகோதரர்களுக்கு நன்மை செய்தான்.
- சகோதரர்களுக்கு பாடம் புகட்ட சிறந்த நிகழ்ச்சிகளை உருவாக்கினான்.
- தகப்பனுடைய ஆசீர்வாதங்களைப் பெற்றான்.
- யோசபேப்பு முழுக் குடும்பத்தையும் பாதுகாக்க வழி செய்தான்.
- தீமை செய்தவர்கள்மேல் கசப்பு, பகை கொள்ள வில்லை.



# மனோவா, சிம்சோன்

**ம**னோவா என்ற தேவ மனுஷனுக்கும் அவன் மனைவிக்கும் பிள்ளையில்லாமலிருந்தது. கர்த்தர் அவர்களுக்குக் குழந்தை பாக்கியத்தைத் தர திட்ட மிட்டு, அதை அவர்களுக்கு வெளிப்படுத்தின விபரம் விசேஷமானது. இதை நியாதிபதிகளின் புத்தகத்தில் 13ம் அதிகாரத்தில் வாசிக்கின்றோம் (நியா.13-16 அதிகாரங்கள்)

**மனோவாவின் மனைவிக்கு தேவ தரிசனம்**

அவள் குழந்தையில்லாமலிருந்தபோதிலும் நன்கு ஜெபித்து வந்திருக்க வேண்டும். ஏனெனில் கர்த்தருடைய தூதனானவர் முதலாவது அவளுக்குத்தான் தரிசனமானார். அவளுக்குச் சில கட்டளைகளை, ஆலோசனைகளைக் கொடுத்தார்.

**1. அவளுக்குக் கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தம்**

**இதோ, பிள்ளைபெறாத மலடியான நீ கர்ப்பந் தரித்து, ஒரு குமாரனைப் பெறுவாய்** (நியா. 13:3).

இனி குழந்தை பிறக்காது என்ற நிலையிலிருந்த அவளுக்குக் கர்த்தர் ஒரு அற்புதம் நடக்கும் என்று வாக்குப் பண்ணினார். ஒரு குமாரனைப் பெறுவாள் என்று திட்டமாக முன்னுரைத்தார். மனோவாவின் மனைவி ஊக்கமாக ஜெபித்திருக்க வேண்டும். அந்த ஜெபத்திற்குப் பலனாக கர்த்தர் ஒரு குமாரனை வாக்குப் பண்ணினார்.

**2. அவளைக் குறித்து கொடுக்கப்பட்ட கட்டளை**

**நீ திராட்ச ரசம் குடிக்கக்கூடாது. மதுபானம் குடிக்கக்கூடாது. தீட்டான ஒன்றையும் புசிக்கக் கூடாது** (நியா.13:4).

ஒரு தாயானவள் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்ற கட்டளை இது. தாயானவள் நல்ல பழக்கவழக்கமுடையவளாக இருந்தால் பிள்ளைகளும் அந்த பழக்கத்தில் வளருவதற்கு உதவிசெய்யும். “தாயைப்போல பிள்ளை” என்பது வழக்குச் சொல்.

**3. பிள்ளையை வளர்க்கும் விதத்தைக் குறித்து கொடுத்த கட்டளை**

அவன் தலையின்மேல் சவரகன் கத்தி படலாகாது. அந்தப் பிள்ளை பிறந்ததுமுதல் தேவனுக்கென்று நசரேயனாயிருப்பான்.

கர்த்தருக்கென்று நசரேயப் பொருத்தனை பண்ணுவதைக் குறித்து எண்ணாகமம் 6ம் அதிகாரத்தில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது (எண்.6:1-21). குறிப்பாக நசரேய விரதத்தைக் குறித்து 3 கட்டளைகள் கொடுக்கப்பட்டுள்ளன.

1) திராட்ச ரசம், மதுபானம் பண்ணக்கூடாது. திராட்சப் பழத்தில் செய்த எந்தப் பொருட்களையும் புசிக்கக்கூடாது.
2) தலைமயிரை கத்தரிக்காமல் வளரவிடவேண்டும்.
3) தன் பெற்றோர், இனத்தாருடைய பிரேதத்தைத் தொட்டு தன்னை தீட்டுப்படுத்தக்கூடாது. அதாவது செத்ததொன்றையும் தொடக்கூடாது.

இவை ஆவிக்குரிய அர்த்தமுள்ளவை. அவைகளைப் பற்றிப் பின்பு பார்ப்போம். இவை மூன்றையும் நசரேய விரதமிருந்த சிம்சோன் மீறினான் என்பதை அறிவோம்.

பிள்ளைகளைப் பெற்றெடுக்கும் பெற்றோர் அந்தப் பிள்ளைகளை எவ்விதம் கர்த்தருக்குப் பிரியமாய் வளர்க்க வேண்டுமென்ற கட்டளைகளை வேதத்திலிருந்து கற்றுக்கொள்ள வேண்டும். அன்று கர்த்தரே நேரில் வந்து கூறவேண்டிய அவசியம் ஏற்பட்டது. இன்றைக்கு நமது கைகளில் கொடுக்கப்பட்டுள்ள பரிசுத்த வேதாகமத்தில் தெளிவான போதனைகளைக் காண்கிறோம். பெற்றோர்

இதில் கவனம் செலுத்தினால் பிள்ளைகள் ஆசீர்வாதமான நிலையில் வளருவார்கள்.

**4. பிள்ளைகளின் எதிர்காலத்தைக் குறித்த வெளிப்பாடு**

> **அவன் இஸ்ரவேலைப் பெலிஸ்தரின் கைக்கு நீங்கலாக்கி ரட்சிக்கத் தொடங்குவான்** (நியா. 13:5).

அடிமைத்தனத்திலுள்ள மக்களை விடுதலையாக்கும் இரட்சகனாவான். அவன் இஸ்ரவேலை நியாயம் விசாரித்து ஆளுகை செய்வான் என்ற செய்தி கொடுக்கப்பட்டது. தேசத்தை நடத்திச் செல்லும் தலைவர்கள் உருவாவது குடும்பங்களில் தான் என்பதை மறந்துவிடக்கூடாது.

அருமைத் தாய்மார்களே! உங்களுக்கு கர்த்தர் தரும் பிள்ளைகள் பெரிய தலைவர்களாய் மாறலாம். எழுப்புதல் பிரசங்கியார்களாய் உருவாகி சபைகளில் பெரிய அசைவை உண்டாக்கலாம். உங்கள் பிள்ளைகளைக் குறித்து கர்த்தர் வைத்துள்ள திட்டம் பெரிது.

தான் கண்ட தரிசனத்தைத் தன் கணவன் மனோவாவிடம் அவள் பகிர்ந்து கொண்டபோது மனோவா கர்த்தரை நோக்கி விண்ணப்பம் பண்ணினான். தனக்கும் அந்தத் தரிசனம் வேண்டும் என்று வேண்டினான். கர்த்தர் அவன் ஜெபத்தைக் கேட்டு மறுபடியும் தரிசனம் கொடுத்து காரியங்களை

விளக்கிக் கூறினார். கர்த்தர் உரைத்தபடியே சிம்சோன் பிறந்தான்.

## சிம்சோனின் ஆரம்ப காலம்

மனோவாவும் அவன் மனைவியும் சிம்சோனை தங்களுக்குக் கிடைத்த பெரிய பொக்கிஷமாக எண்ணி வளர்த்து வந்தனர்.

> **அந்தப் பிள்ளை வளர்ந்தது; கர்த்தர் அவனை ஆசீர்வதித்தார்** (நியா.13:24).
>
> **கர்த்தருடைய ஆவியானவர் அவனை ஏவத் துவக்கினார்** (நியா.13:25).

சிம்சோனின் ஆரம்பம் நன்றாகவே இருந்தது. கர்த்தர் வாலிப வயதிலே அவனை ஆசீர்வதித்தார். கர்த்தருடைய ஆவியானவருடைய நடத்துதல் அவனுக்கு இருந்தது. மிகச் சிறந்த பராக்கிரமசாலியாக விளங்கினான். தேசத்திற்கு உகந்த தலைவனாவதற்கான சகல தகுதிகளும் அவனுக்கு இருந்தன. தேசத்தை முன்னின்று நடத்த கர்த்தரால் தெரிந்து கொள்ளப்பட்ட சிம்சோன் பெண்கள் விஷயத்தில் பெலவீனனாகக் காணப்பட்டான்.

## பெலிஸ்திய பெண்ணை திருமணம் செய்ய விரும்பினான்

தங்களை ஆளுகை செய்யும் புறஜாதிய பெண்ணொருத்தியிடம் பழக ஆரம்பித்தான். அவளை நேசித்தான். அவளுடன் தொடர்பு கொண்டான். அவளையே திருமணம் செய்ய தீர்மானித்தான்.

பெற்றோர் அதை விரும்பவில்லை. புறஜாதிப் பெண் வேண்டாம் என்று தடுத்தனர். ஆனால் அவன் பெற்றோருக்குக் கீழ்ப்படியவில்லை.

**அவள் என் கண்ணுக்குப் பிரியமானவள், அவளை யே எனக்குக் கொள்ளவேண்டும் என்றான்** (நியா. 14:3).

ஒரு வாலிபன் ஒரு வாலிபப் பெண்ணை விரும்புவது தவறு அல்ல. ஆனால் அவள் விக்கிரக வணக்கம் செய்யும் புறஜாதிப் பெண் என்று தெரிந் தும் அவளைத் திருமணம் செய்ய விரும்பியதற்குக் காரணம் கண்களின் இச்சை, கர்த்தருக்குப் பிரிய மில்லாத ஒன்றில் கவர்ச்சியைக் காண ஆரம் பிக்கும்போதுதான் வழி தவறுகிறது. வாழ்க்கை கெடுகிறது.

கீழ்ப்படியாத மகனுடைய தவறான தீர்மானத் திற்கு பெற்றோரும் ஒத்துப்போனது பெரிய தவறு. முரண்டு பிடித்த சிம்சோனுடன் மனோவாவும் அவன் மனைவியும் பெண் பார்க்க திம்னாத்திற்குப் புறப்பட்டனர். செல்லம் கொடுத்து வளர்த்த அவர் களால் அவனை திருத்த இயலவில்லை.

நசரேய விரதத்தை ஒரு குறிப்பிட்ட வருடங் களுக்கு கடைப்பிடித்து நடக்கும்போது தேவனு டைய விசேஷித்த வல்லமை அவன்மூலம் வெளிப் படும். இந்த மூன்று பிரமாணங்களையும் கடைப் பிடித்துவந்த சிம்சோன் சிறிது காலம் கழித்து இவைகள் யாவற்றையும் மீறினான்.

திம்னாத்து என்றாலே "திராட்சத் தோட்டங்கள் நிறைந்த ஊர்" என்று பொருள் (நியா.14:5). பெலிஸ்தரின் வீட்டிற்குச் சென்று புறஜாதிப் பெண்மேல் ஆசை வைத்தான். திராட்ச ரசத்தையும், மதுவையும் விலக்க வேண்டியவன் அவைகளை விரும்பிக் குடிக்கும் பெலிஸ்தியருடன் விருந்து உண்டான். யாதொரு பிரேதத்தண்டை போகக்கூடாதவன் சிங்கத்தைக் கொன்று சில நாட்களுக்குப் பின்பு அதன் உடலில் இருந்த தேன் கூட்டிலிருந்து தேனை எடுத்துச் சாப்பிட்டான் (நியா.14:8,9).

தலைமுடியை சவரம் பண்ணக்கூடாது. ஆனால் தெலீலாளின் மடியில் தூங்கின அவன் மொட்டையடிக்கப்பட்டான். தேவனின் சிறப்பான பெலன் அவனைவிட்டு நீங்கிற்று.

தேவனுக்கென்று பிரித்தெடுக்கப்பட்ட வாலிபர்கள் தங்கள் பிரதிஷ்டையை காத்துக்கொள்ளும் போதுதான் தேவ பெலனில் கர்த்தருக்காக பெரிய காரியங்களைச் சாதிக்க முடியும்.

இந்த செய்தியை வாசிக்கும் வாலிபர்களே! கர்த்தர் கிருபையாய் உங்கள் பெற்றோருக்கு உங்களை பிள்ளையாகக் கொடுத்தார். விசுவாசக் குடும்பத்தில் பிறந்து வளர்ந்து கர்த்தருக்காக அரிய பெரிய காரியங்களைச் சாதிக்க வேண்டிய நீங்கள் பெலன் குன்றிப் போயிருக்கக் காரணமென்ன? உங்களுக்கு தேவபெலன் இல்லையே! உங்களுக்குக்

கர்த்தர் கொடுத்த தேவ வல்லமை எடுபட்டுப் போயிற்றே! ஏன்?

**நசரேய பிரதிஷ்டைப் பிரமாணங்களின் ஆவிக்குரிய கருத்துக்கள் என்ன!**

**1. நீ திராட்ச ரசம் குடிக்கக் கூடாது. திராட்சப் பழ சம்பந்தமான எதையும் புசிக்கக்கூடாது.**

உலக மனிதர்கள் இன்பம், இனிமை என்று எண்ணும் பாவங்களைச் செய்து அதனால் கிடைக்கும் அற்ப சந்தோஷத்தை நாடிச் செல்லக்கூடாது. வாலிபர்கள் மகிழ்ச்சியாக இருப்பதற்குக் கர்த்தர் எதிர்ப்பானவரல்ல. உலக வாலிபர்களைவிட விசுவாச வாலிபர்கள் அதிக மகிழ்ச்சியோடு இருக்கவே கர்த்தர் விரும்புகிறார்.

ஆனால் அந்த மகிழ்ச்சி கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து அவர் சித்தம் செய்யும்போது உண்டாகும் மெய்யான மகிழ்ச்சி. அந்த பரிசுத்த மகிழ்ச்சிக்கு ஈடாக எதுவுமே இல்லை. பாவம் செய்து அதனால் வரும் சந்தோஷம் தற்காலிகமானதே. அந்த மகிழ்ச்சிக்கு ஊடே குற்ற உணர்வும் இருக்கும்.

**2. யாதொரு பிரேதத்தையும் தொடக்கூடாது**

இது உயிரற்ற அந்தகாரக் கிரியைகளைக் குறிக்கிறது. எபி.6:1ல் செத்த கிரியைகளுக்கு நீங்கலாகும் மனந்திரும்புதல் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. கனியற்ற அந்தகாரக் கிரியைகள் என்று எபேசி

யர் 5:11ல் பார்க்கிறோம். அதாவது எந்தப் பயனும், நன்மையுமில்லாத பேச்சுகள், செயல்கள். சிலர் மணிக்கணக்கில் உட்கார்ந்து பேசுவார்கள், அந்தப் பேச்சில் ஒரு நன்மையுமிருக்காது. வாலிபர்கள் அநேகர் இவ்வித கனியற்ற, பயனற்ற பேச்சுகளில் நாள்முழுவதும் செலவிடுவார்கள். இதுபோக தெருத்தெருவாகச் சுற்றுவார்கள், யாருக்கும் எந்த நன்மையுமில்லாத செயல்களில் ஈடுபடுவார்கள்.

பல சபைகளில் வாலிபர்களை எந்த ஒரு காரியத்திற்கும் பயன்படுத்தாமலிருப்பது வேதனையான காரியம். இவர்கள் அனுபவமில்லாதவர்கள் என்று ஒதுக்கி விடுகிறார்கள். எனவே எதையாகிலும் செய்ய வேண்டும் என்று துடிக்கும் வாலிபர்கள் எங்கேயோ போய் எதையோ செய்கிறார்கள்.

**3. தலைமுடியை சவரம் பண்ணக்கூடாது, முடியை வளரவிட வேண்டும்**

நசரேய விரதமிருப்பவனைக் கண்டால் யாவரும் எளிதில் கண்டு கொள்ளக்கூடிய அளவில் அவன் தோற்றம் இருக்கும். அவன் மற்ற வாலிபர்களை விட வித்தியாசமானவன். பல வேளைகளிலும் மற்றவர்கள் பரியாசம்பண்ணும் நிலையில் இருப்பான். ஆனால் இதை அவன் கர்த்தருக்காக செய்ய வேண்டும்.

விசுவாச வாலிப தம்பிகள், தங்கைமார் மற்ற எல்லா வாலிபர்களையும்விட வித்தியாசமாக இருப்

பார்கள். தோற்றத்திலும், பேச்சிலும், செயலிலும் வித்தியாசமாயிருப்பார்கள். என்ன இவன் பெரிய சாமியார்போல நடந்துகொள்ளுகிறான், பெரிய பக்த னாக மாறிவிட்டான் என்ற பரியாசப் பேச்சுகளை யும் கேட்கவேண்டி வரலாம். ஆனாலும் கர்த்தருக் காக அவைகளைத் தாங்கிக் கொள்ள வேண்டும்.

அருமைத் தம்பிமார்களே, தங்கைமார்களே! அரசியலுக்காக வாலிபர்கள் பயன்படுத்தப்படு கிறார்கள். செத்த உயிரற்ற கொள்கைகளுக்காக வாலிபர்கள் தங்கள் வாழ்க்கையையே அர்ப்பணிக் கிறார்கள். மூடத்தனமான சடங்காச்சாரங்களுக்கும், மதகோட்பாடுகளுக்கும் தங்களை ஒப்புக்கொடுத்து வாழ்கிறார்கள். நீங்கள் இயேசுவுக்காக கொஞ்சம் பாடு அனுபவிக்க வெட்கப்பட வேண்டாம்.

**சிம்சோனின் பிந்திய காலம்**

தேசத்தை ஆளவேண்டியவன், தேவ வல்ல மையை, இழந்து கண்கள் பிடுங்கப்பட்டு மாவ ரைக்கும் வேலைக்கு வந்துவிட்டான். ஒரு சிறு பையன் அவனை நடத்தும் நிலைக்கு ஆளானான் (நியா.16:21,26). பிறருக்கு வேடிக்கைக் காட்டும் கோமாளியாகக் கருதப்பட்டான்.

எவ்வளவு வேதனை! பெற்றோருக்கும், தேசத் திற்கும் வேதனை! கர்த்தருக்கும் வேதனை! கடைசி யில் தேவ பெலனைப் பெற்று ஆயிரக்கணக்கான பெலிஸ்தரைக் கொன்று தானும் மரித்தான். தேசத்

தை முன்னின்று நடத்தவேண்டிய நியாயாதிபதியாக இருந்தவன் பரிதாபமான மரணத்தை சந்தித்தான்.

**பிள்ளைகளைப் பெற்றுவிட்டால் போதாது பெற்றோரே!**

எப்படிப்பட்ட நிலையில் வளர்த்து ஆளாக்கினீர்கள் என்று கவனியுங்கள். பிள்ளைகளை கர்த்தருக்காக வளர்க்க கவனம் செலுத்துங்கள். உங்கள் வாலிபப் பிள்ளைகளுக்காக தினமும் ஜெபியுங்கள்.

**வாலிபர்களே!**


நீங்கள் இயேசுவுக்குத் தேவை. அரசாள வேண்டிய நீங்கள் பாவத்திற்கு அடிமையாகி கண்களை இழந்து வேடிக்கைக் காட்டும் பரிதாப நிலைக்கு வரவேண்டாம். கர்த்தர் உங்களை வழி நடத்துவாராக.

---

**மனோவா, சிம்சோன் குடும்பத்திலிருந்து கற்றுக் கொள்ளும் காரியங்கள்:**

- குழந்தையில்லா தம்பதியினருக்குக் கர்த்தர் தரிசனமாகும் அளவிற்கு ஜெப வீரர்களாயிருந்தனர்.
- குழந்தை பிறக்கும் முன்பாகவே அதை எப்படி வளர்ப்பது என்ற விதிகளைக் கர்த்தரிடமிருந்து பெற்றுக்கொண்டனர்.

- இஸ்ரவேலை ஆளுகை செய்யும் நியாயாதி பதியாக அவனை வளர்த்தனர்.
- அவனை ஆரம்ப முதலே கண்டிப்புடன் வளர்க் காதது நமக்கு ஓர் எச்சரிப்பு.
- விக்கிரக ஆராதனை செய்துவந்த பெலிஸ்திய பெண்ணை சிம்சோன் விரும்பினது ஒரு எச்சரிப்பு.
- மகன் செய்த தவறுக்கு பெற்றோரும் துணை போனது நமக்கு ஓர் எச்சரிப்பு.
- பிரதிஷ்டையை பலமுறை சிம்சோன் மீறினது ஓர் எச்சரிப்பு.
- தேசத்தை முன்நடத்த வேண்டியவன் கண்களை இழந்து மாவாட்டினது ஓர் எச்சரிப்பு.
- எச்சரிப்பாக இருக்க பல வாய்ப்புக்கள் கிடைத் தும் அதை அலட்சியப்படுத்தியது ஓர் எச்சரிப்பு
- வாலிப வயதிலேயே அகால மரணமடைந்தது வேதனை.



# நகோமி (மாமியார்), ரூத் (மருமகள்)

ரூத்தின் புத்தகம் ஓர் குடும்ப சூழ்நிலையை விளக்கும் அருமையான புத்தகம். தாவீது அரசனின் முற்பிதாக்களை விளக்கும் புத்தகம். பெத்லெகேம் என்ற ஊரில் எலிமெலேக்கு-நகோமி என்ற தம்பதியினர் வாழ்ந்து வந்தனர். இவர்களுக்கு இரண்டு குமாரர்கள் இருந்தனர். தேசத்தில் பஞ்சம் உண்டானபோது இவர்கள் மோவாப் தேசத்திற்குச் சென்றுவிட்டனர். "பெத்லெகேம்" என்றால் "அப்பத்தின் வீடு" என்று பொருள். மோவாப் என்றால் முறைகேடான சந்ததி. அப்பத்தின் வீட்டை விட்டு பஞ்சம் பிழைக்க முறைகேட்டிற்குப் போய் விட்டார்கள் இந்த குடும்பத்தினர்.

இக்கட்டு, பிரச்சனை வரும்போது கர்த்தரை விட்டு முறைகேடான காரியங்களில் ஈடுபடும்

குடும்பங்கள் இன்றும் உண்டு. மோவாபிற்குப் போன எலிமெலேக்கு அங்கேயே மரித்தான். நகோமி விதவையானாள். அவளுடைய இரண்டு பையன்களும் மோவாபிய பெண்களைத் திருமணம் செய்தனர். சில ஆண்டுகளில் இந்த இரண்டு மகன் களும் மரித்துவிட்டனர். நகோமியும் விதவை. அவளு டைய இரண்டு மருமக்களும் விதவைகளானார்கள். ஒருத்தி பெயர் ஓர்பாள், மற்றவள் பெயர் ரூத்.

முறைகேடான காரியங்களைச் செய்து, தேவ சித்தத்திற்குப் புறம்பான நிலையில் அந்நிய நாட்டுப் பெண்களை மணந்து அவலநிலை அடைந் தது இந்தக் குடும்பம். மூன்று விதவைகளுடன் அடுத்த கட்டம் ஆரம்பமானது. இஸ்ரவேல் நாட்டில் பஞ்சம் தீர்ந்தது. கர்த்தர் செழிப்பைக் கட்டளையிட்டார் என்று கேள்விப்பட்டாள் நகோமி.

## நகோமி நல்ல மாமியார்

அந்நிய நாட்டிற்கு வந்து விதவையானாள் நகோமி. தன் இரண்டு குமாரரையும் இழந்துவிட் டாள். இப்படி நடந்தால் சில குடும்பங்களில் மாமி யார்கள் மருமக்களை சபிப்பார்கள். உன்னைத் திருமணம் செய்ததால்தான் என் மகன் செத்துப் போனான். நீ சாபமானவள். நீ என்றைக்கு என் வீட்டில் காலெடுத்து வைத்தாயோ அன்றைக்கே என் குடும்பத்திற்கு சாபம் வந்துவிட்டது என்று வசைபாடும் மாமியார்கள் பலருண்டு.

நகோமி தங்கமான மாமியார். நீங்கள் என் மகன்களுக்கு தயை செய்தீர்கள். எனக்கும் தயை செய்தீர்கள். கர்த்தர் உங்களுக்கு நிச்சயம் தயை செய்வார் என்று ஆறுதலாகப் பேசினாள் (ரூத் 1:8). மாமியார்களே! மருமக்களை இப்படி ஆசீர்வதித்துப் பேசுகிறீர்களா? அதுமட்டுமல்ல, தன் மருமக்களைப் பார்த்து உங்கள் தாய்வீட்டிற்குத் திரும்பப் போங்கள். நீங்கள் மறுமணம் செய்து மகிழ்ச்சியான வாழ்க்கை நடத்த கர்த்தர் உங்களுக்கு உதவி செய்வார் என்றாள். எவ்வளவு அருமையான மாமியார் இவள்!

எனக்குப் பணிவிடை செய்ய வாருங்கள் என்று அழைக்கவில்லையே. எத்தனை மாமியார்கள் இன்று மருமக்களை வேலைக்காரிபோல நடத்துகிறார்கள். வேலைக்காரிகளைவிட கேவலமாக நடத்தும் மாமியார்களும் உண்டு. இவளோ தன் மருமக்களை முத்தமிட்டாள். இன்றுள்ள மாமியார்கள் மருமக்களைக் கடித்து குதறிவிடுகிறார்களே! இவளோ தன் சொந்த மக்களைப்போல இவர்களை அன்புடன் நடத்தினாள்.

**மருமகளாகிய ரூத்**

நீ உன் தாய்வீட்டிற்குப் போய்விடு என்று மாமியார் சொன்னபோது ரூத் சத்தமிட்டு அழுதாள். அன்பான மாமியாரே உங்களைவிட்டு எப்படி நான் பிரிந்துபோக முடியும் என்று அழுதாள் ரூத். இந்தக் காலத்து ரூத்துகள் கதையே வேறு. தன்

அம்மா வீட்டிற்குப் போகமுடியவில்லையே என்று தான் அழுகிறார்கள். அல்லது மாமியாரைப் பார்த்து உன் புருஷன் வீட்டிற்குப் போ என்று விரட்டி விடுகிறார்கள். ரூத் மிக அருமையான மருமகள்.

மாமியார் போகும் இடத்திற்கு நானும் போவேன். மாமியார் தங்கும் இடத்தில் நானும் தங்குவேன். மாமியார் சொந்தக்காரர்கள் என் சொந்தக் காரர்கள். மாமியார் ஆராதிக்கும் தேவனை நானும் ஆராதிப்பேன். மாமியார் மரிக்கும் இடத்தில் நானும் மரிப்பேன் (ரூத்.1:16,17).


இன்றுள்ள மருமகள் மாமியாரை கல்லறைக்கு அனுப்பாமல் விடமாட்டேன் என்றல்லவா சபதம் பண்ணுகிறாள்! மாமியாருடன் மரிப்பேன் என்று கூறும் மருமகளைப் பார்க்க முடியுமா?

அன்பான வாசகர்களே! குடும்பப் பிரச்சனைகளில் மிக முக்கியமானவைகளில் ஒன்று மாமியார் - மருமகள் பிரச்சனை. குடும்பங்களில் ஏற்றத் தாழ்வுகள் ஏற்படலாம். அது குடும்ப உறவைப் பாதிக்கக்கூடாது.

**நகோமி, ரூத் குடும்ப வாழ்க்கையிலிருந்து கற்றுக் கொள்ளும் காரியங்கள்:**

- பஞ்சம் பிழைக்க அப்பத்தின் வீடாகிய பெத்லகேமைவிட்டு முறைகேடான மோவாபிற்குப் போனது வேதனைக்குரியது.

- தவறான இடத்திற்குப் பிழைக்கப் போனதால் கணவனையும், மகன்களையும் இழந்தாள் நகோமி.
- தனக்கு ஏற்பட்ட தீமைகளுக்கு மருமக்கள்மேல் பழிபோடாத நல்ல மாமியார் நகோமி.
- எனக்குப் பணிவிடை செய்ய வாருங்கள் என்று அழைக்காமல் நீங்கள் போய் மறுமணம் செய்து வாழுங்கள் என்று வாழ்த்தின நல்லவள் நகோமி.
- போ என்று கட்டாயப்படுத்தியும் நான் போக மாட்டேன், உங்களுடன்கூடவே சாகும்வரை இருப்பேன் என்று சொன்ன அருமையான மருமகள் ரூத்.
- கதிர் பொறுக்கியாவது மாமியாரை காப்பாற்ற முன்வந்தாள் ரூத்.
- போவாஸ் ரூத்தை தவறாக நடத்தவில்லை.
- தான் பணக்காரராக இருந்தும் ஏழ்மையிலிருந்த ரூத்தை திருமணம் செய்ய முன்வந்த பண்பாளன் போவாஸ்.
- விதவையான மருமகள் நல்வாழ்வு வாழ வழிசெய்தவள் நகோமி.
- மோவாபிய பெண்ணான ரூத் பரிசுத்த கோத் திரத்துத் தாயாக மாறினது தேவ கிருபை.



# அன்னாள், சாமுவேல்

அன்னாளின் கணவன் எல்க்கானா. அன்னாளுக்கு குழந்தை இல்லை. குழந்தையற்ற நிலை கணவனைவிட மனைவியை அதிகம் பாதிக்கிறது. மலடி என்ற வார்த்தையை அவளால் தாங்கிக்கொள்ள முடியாது. இப்படிப்பட்ட நிலையில் கணவன்மார் மனைவியை குறைகூறுவது உண்டு. மனதில் புண்படும்படி குத்திப் பேசுவதும் உண்டு. எல்க்கானா அப்படிச் செய்யவில்லை.

தன் மனைவியினிடத்தில் மிகுந்த அன்புள்ளவனாக இருந்தான். அவளுக்கு இரட்டிப்பான நன்மைகளைச் செய்தான். மற்றவர்கள் அவளை மனமடிவாகப் பேசினபோது, அன்னாளே அழாதே, பத்துப் பிள்ளைகளைப் பார்க்கிலும் நான் உனக்கு அதிகமல்லவா என்று ஆறுதலாகப் பேசினான்.

கணவன்மாரே! உங்கள் மனைவியிடம் உண்மையான அன்பும் பாசமும் உடையவர்களாக இருக்கிறீர்களா? அன்பு வார்த்தையிலும், செயலிலும் நிச்சயம் வெளிப்படும். உங்கள் சகோதரிகளைவிட இனத்தாரைவிட இரட்டிப்பான அளவு உங்கள் மனைவியை நேசிக்கிறீர்களா? இரட்டிப்பான பங்கு கொடுக்கிறீர்களா? அன்பான வார்த்தைகளைப் பேசி ஆறுதல்படுத்துகிறீர்களா?

## அன்னாள் ஊக்கமாக ஜெபித்தாள்

சகோதரிகளே! உங்கள் வாழ்க்கையின் தேவைகள் பூர்த்தி செய்யப்படாமலிருக்கும்போது சோர்ந்துபோய்விடக் கூடாது. ஊக்கமாக விசுவாசத்துடன் ஜெபிக்க வேண்டும். ஜெபத்தின்மூலம் எல்லா நன்மைகளையும் தேவனிடமிருந்து பெற்றுக் கொள்ள முடியும். அன்னாள் கண்ணீருடன் ஜெபித்தாள். பொருத்தனை பண்ணி ஜெபித்தாள். தன் இருதயத்தை தேவ சமூகத்தில் ஊற்றிவிட்டாள் (1 சாமு.1:10-15).

இப்படி ஜெபிக்கிற தாய்மார்க்ளுக்காக கர்த்தரைத் துதிக்கின்றேன். ஜெபித்த பின்பு அன்னாள் துக்கமுகமாக இருக்கவில்லை (1 சாமு.1:18). இது அவளுடைய விசுவாசத்தைக் காட்டுகிறது. கர்த்தர் தன் ஜெபத்திற்கு நிச்சயம் பதிலை அளிப்பார் என்று விசுவாசித்தாள். கர்த்தர் கிருபையாய் அவளுக்கு ஒரு மகனைக் கொடுத்தார். அவனுக்கு சாமுவேல் என்று பெயரிட்டாள்.

## அன்னாள் தன் பொருத்தனையை நிறை வேற்றினாள்

அவள் பொருத்தனை பண்ணினபடியே சாமுவேல் சிறு பையனாக இருக்கும்போதே அவனை தேவனுடைய சேவைக்காக கொண்டுபோய் விட்டு விட்டாள். பிள்ளையில்லாமலிருந்த அவளுக்கு கர்த்தர் பிள்ளையைக் கொடுத்தபோது அவனை தன்னுடன் வைத்துக்கொள்ள விரும்பி இருப்பாள். ஆனாலும் கர்த்தருக்கு வாக்குக்கொடுத்த பொருத்தனையை நிறைவேற்றுவதில் உண்மையுள்ளவளாக இருந்தாள்.

பொருத்தனைபண்ணி ஜெபித்த சகோதரிகளே! கர்த்தர் உங்கள் ஜெபத்திற்கு பதிலளித்தபின் பொருத்தனைகளை நிறைவேற்றினீர்களா? சாமுவேல் இன்னும் மிக சிறு பையனாகத்தான் இருந்தான். ஆனாலும் ஆலயத்தில் ஊழியம் செய்ய ஆசாரியனான ஏலியிடம் அவனை ஒப்படைத்து விட்டு வந்துவிட்டாள். இது தாய்மாருக்கு எளிதான காரியமல்ல. பலி செலுத்த வருடந்தோறும் ஆலயத்திற்குப் போகும்போதுதான் அவனை அவள் பார்த்தாள் என தெரிகிறது. அவனுக்கு ஒரு சின்ன சட்டையைத் தைத்துக்கொண்டு கொடுப்பாள் (1 சாமு.2:19). பிரதிஷ்டையும் மன உறுதியுமுடைய தாயாக இருந்தாள்.

கர்த்தரின் சேவை செய்ய தன் மகனை ஒப்புக் கொடுத்தபோது கர்த்தர் அவளுக்கு மூன்று குமார

ரையும், இரண்டு குமாரத்திகளையும் கொடுத்தார். அன்னாளின் கண்ணீரெல்லாம் ஆனந்தக் கண்ணீராய் மாறிற்று.

## சிறுவன் சாமுவேலைப் பற்றி வேதம் கூறுவதென்ன?

***சாமுவேல் சிறுவயதிலும் கர்த்தரைப் பணிந்து கொண்டான்*** (1 சாமு.2:1).

***சாமுவேல் கர்த்தருடைய சந்நிதியிலே வளர்ந்தான்*** (1 சாமு.2:21).

***சாமுவேல் கர்த்தருக்கு பணிவிடை செய்து கொண்டிருந்தான்*** (1 சாமு.3:1).

எவ்வளவு அருமையான மகன். இதை வாசிக்கும் பெற்றோரே! உங்கள் பிள்ளைகளைப் பற்றி இப்படி சாட்சி கூறமுடியுமா? உங்கள் பிள்ளைகளுக்கு சிறுவயதிலேயே ஜெபம் பண்ண, வேதம் வாசிக்கக் கற்றுக் கொடுக்கிறீர்களா? கர்த்தருக்குப் பணிவிடை செய்யும் ஆர்வத்தை ஊட்டுகிறீர்களா?

## சிறுவன் சாமுவேலுடன் கர்த்தர் பேசினார்
(1 சாமு.3:4,6,8,11)

சர்வ வல்லமையுள்ள ஆண்டவர், வானத்தையும், பூமியையும் படைத்தவர். சிறுவன் சாமுவேலை பெயர்சொல்லி அழைத்து, அவனுக்கு தேவசெய்தியைக் கொடுத்தார் என்பது எவ்வளவு ஆச்சரியமானது. சிறுவன்தானே என்று அவனை விட்டுவிடவில்லை. கர்த்தர் இன்றும் நம் பிள்ளைகளுடன்

பேச ஆயத்தமாயிருக்கிறார். கர்த்தரின் சத்தம் கேட்கும் நிலையில் நமது பிள்ளைகள் ஊக்கமாய் ஜெபிக்கிறவர்களாக இருக்க வேண்டும்.

**சாமுவேல் வளர்ந்தான். கர்த்தர் அவனுடனே கூட இருந்தார்** (1 சாமு.3:19).

அவன் கர்த்தருடைய தீர்க்கதரிசி என்று நாடே அறிந்துகொண்டது. கர்த்தர் தமது வார்த்தையினாலே சாமுவேலுக்கு தம்மை வெளிப்படுத்தினார் (1 சாமு.3:20,21).

சாமுவேல் இஸ்ரவேலை நியாயம் விசாரித்தான். அவனுடைய தலைமையிலே இஸ்ரவேலர் நிர்வாகம் பண்ணப்பட்டனர். சாமுவேல் ராஜாக்களை அபிஷேகிக்கும் சிலாக்கியம் பெற்றான். சவுலை அபிஷேகித்து ராஜாவாக்கினான். பின்பு தாவீதை அபிஷேகித்து ராஜாவாக்கினான். தேவன் அவனை அவ்வளவாய் கனப்படுத்தி உயர்த்தினார்.

## சாமுவேலின் பிள்ளைகள் கர்த்தரைப் பின்பற்றவில்லை

சாமுவேல் தேசத்திற்கெல்லாம் நியாயாதிபதியாக இருந்தான். ஆனால் அவனுடைய பிள்ளைகளான யோவேலையும், அபியாவையும் சரியாய் வளர்த்ததாக தெரியவில்லை. இவர்களை தேசத்தின் நியாயாதிபதிகளாய் நியமித்தான். ஆனால் அவர்கள் லஞ்சம் வாங்கி நியாயத்தைப் புரட்டிப் போட்டனர் (1 சாமு. 8:1-3).

பல பரிசுத்தவான்களின் குடும்பங்களில் காணப்படும் பரிதாப நிலை இது. பரிசுத்தவான் களின் பிள்ளைகள் தங்கள் பெற்றோரைப்போல கர்த்தரைப் பின்பற்றாமல் வழிதவறிப் போய்விடு கிறார்கள்.

## இதை வாசிக்கும் பெற்றோரே!

உங்கள் ஜெபத்தினால், நேர்மையினால், நீதி யினால், தியாகத்தினால் கர்த்தர் இன்று உங்கள் குடும்பத்தை ஆசீர்வதித்து உயர்த்தி இருக்கின்றார். ஆனால் இன்று உங்கள் பிள்ளைகள் வழிதவறிப் போகக் காரணமென்ன? உங்கள் குடும்பத்திற்கு நேரம் எடுக்காமல் வெளி ஊழியத்தை முக்கியப் படுத்தி குடும்பத்தை அலட்சியம் செய்ததால் வந்த வேதனை இது.

ஆரம்ப முதலே பிள்ளைகளை கர்த்தருக்குப் பிரியமாய் வளர்க்கக் கவனம் செலுத்துங்கள். குடும்பம் சரியில்லாமல் ஊழியம் செய்து, நிர்வாகம் பண்ணி பயன் இல்லை. கர்த்தர் உங்கள் ஒவ்வொரு வருக்கும் ஞானத்தைத் தர ஜெபிக்கிறேன்.

**அன்னாள், சாமுவேல் குடும்பத்திலிருந்து கற்றுக் கொள்ளும் காரியங்கள்:**

- அன்னாள் மலடியாக இருந்தபோதிலும் எல்க்கானா அவள்மீது மிகுந்த அன்புள்ளவனாயிருந்தான்.
- அன்னாள் சோர்ந்து போகாமல் விசுவாசத்துடன் பொருத்தனைபண்ணி ஜெபித்தாள்.
- சாமுவேல் சிறு பையனாக இருந்தபோதே பொருத்தனையை நிறைவேற்ற அவனை தேவ பணிவிடைக்கு அர்ப்பணித்தாள்.
- வருடம் ஒரு தடவை மட்டும் அவனைப் பார்த்து வந்தது அவளுடைய அர்ப்பணிப்பையும் உறுதியையும் காட்டுகிறது.
- மூத்த மகனை கர்த்தர் பணிக்குக் கொடுத்த அன்னாளுக்குக் கர்த்தர் இன்னும் பல பிள்ளைகளைக் கொடுத்து ஆசீர்வதித்தார்.
- சாமுவேல் சிறுவயதிலேயே தேவசமூகத்தில் வளர்ந்தான். தேவ அழைப்பை நேரடியாகப் பெற்றான்.
- தேவனுடைய தீர்க்கத்தரிசி என்று தேசம் முழுவதும் பெயர்பெற்றான். ராஜாக்களை அபிஷேகம் பண்ணும் சிலாக்கியம் பெற்றான்.
- சாமுவேல் தன் பிள்ளைகளை சரியாக வளர்க்காதது நமக்கு ஓர் எச்சரிப்பு.



# ஏலியின் குடும்பம்

1 சாமுவேல் புத்தகத்தின் முதல் சில அதிகாரங்களில் ஏலியின் குடும்பத்தைக் குறித்து விளக்கப்பட்டுள்ளது. ஏலி தேவனுடைய ஆலயத்தில் ஊழியம் செய்துவந்த தேவ ஊழியன். அவனுக்கு ஓப்னி, பினெகாஸ் என்ற இரு குமாரர் இருந்தனர். தேவனுக்கு ஊழியம் செய்யும் அருமையான வாய்ப்பைப் பெற்ற குடும்பம். தேவசமூகத்தில் தினமும் தரித்திருக்கத்தக்க சிலாக்கியம் பெற்றிருந்தனர். ஆனாலும் ஏலியின் பிள்ளைகள் துன்மார்க்கமாய் நடந்தனர். ஏலி தன் பிள்ளைகளை கண்டிப்புடன் வளர்க்கவில்லை என்று தேவன் வேதனைப்பட்டார்.

## ஏலியின் பிள்ளைகள் செய்த பாவம்

**1. பேலியாளின் மக்களாய் இருந்தனர்** (1 சாமு.2:12)

அதாவது துன்மார்க்கராயிருந்தனர். ஆவிக்

குரிய பெற்றோருக்குப் பிள்ளைகளாய் பிறப்பது எவ்வளவு சிலாக்கியம். அந்த சிலாக்கியத்தைப் பெற்றிருந்தும் அதன்படி நடவாமல் பாவ வாழ்வில் வாழ்ந்துவந்தனர் ஓப்னி, பினெகாஸ்.

**2. அவர்கள் கர்த்தரை அறியவில்லை** (1 சாமு.2:12)

எல்லா மக்களையும்விட கர்த்தரை அதிகமாய் நெருங்கி வாழ்ந்து வந்தஇவர்கள் கர்த்தரை அறி யாத புறஜாதி மக்களைப் போல வாழ்ந்தது எத்தனை வேதனை. அநேக ஊழியருடைய பிள்ளைகள் இந்த நிலையில்தானிருக்கின்றனர் என்பது கசப் பான உண்மை.

**3. கர்த்தருக்குக் காணிக்கை செலுத்துமுன் பலவந்த மாய் எடுத்துக்கொள்ளுதல்**

கர்த்தருக்குக் காணிக்கை செலுத்தினபின்பு ஆசாரியனுக்குரியது கொடுக்கப்படுவது வழக்கம். ஆனால் கர்த்தருக்குரியதை பலியாக செலுத்தும் முன்பதாகவே பலவந்தமாக எடுத்துக்கொள்ளும் கொள்ளைக்கூட்டமாக செயல்பட்டனர் ஏலியின் பிள்ளைகளும் வேலைக்காரரும்.

கர்த்தருக்கு ஒழுங்காக தசமபாகம் காணிக்கை கொடுக்காமல் தங்கள் பிள்ளைகளுக்கு செலவு செய்யும் எந்தப் பணமும் இந்த நிலையில் உள்ளது தான். ஊழியத்திற்குக் கொடுக்கப்பட்ட பணத்தை ஊழியத்திற்குச் செலவு செய்யவிடாமல் ஊதாரித் தனமாய் செலவு செய்யும் ஊழியரின் பிள்ளைகள் மேலும் தேவனுடைய கோபாக்கினை நிச்சயம் வரும்.

**அந்த வாலிபரின் பாவம் கர்த்தருடைய சந்நிதியில் மிகவும் பெரியதாயிருந்தது** (1 சாமு.2:17).

4. **ஆசரிப்புக் கூடாரத்தின் வாசலில் கூடுகிற பெண் களுடன் விபச்சாரம்** (1 சாமு.2:22)

கர்த்தரைத் தொழுதுகொள்ள திரள்கூட்டம் மக்கள் இஸ்ரவேல் நாட்டின் பல பலபகுதிகளிலிருந்தும் வருவார்கள். இப்படிப்பட்ட கூட்டத்தில் வரும் பெண்களுடன் தகாத உறவு வைத்துக் கொண்டார்கள். இது ஜனங்கள் மத்தியில் பேசப்பட்டது.

5. **தகப்பனுக்குக் கீழ்ப்படியாதவர்களாயிருந்தார்கள்** (1 சாமு.2:25)

ஏலி தன் பிள்ளைகளின் பாவங்களைக் குறித்து கேள்விப்பட்டான். அவர்களிடம் இதைக்குறித்துப் பேசினான். ஆனால் அவர்கள் தகப்பனை மதிக்கவில்லை. அவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படியவில்லை.

சிறு வயதிலேயே பிள்ளைகளை ஒழுங்காக வளர்க்காத பெற்றோர்கள் யாவரும் சந்திக்கும் பரிதாப நிலை இதுதான். ஒழுங்கற்று வளர்ந்தவர்களிடம் திமிர் கூடிவிடும். கீழ்ப்படிதல் இருக்காது. அவன் அழிவிற்கு ஆயத்தமாகிவிட்டான் என்று அர்த்தம். சிலர் இந்த நிலையில்தான் பிரசங்கியார்களுக்கு கடிதம் எழுதி, காணிக்கை அனுப்பி என் மகனுக்காக ஜெபியுங்கள் என்று புலம்புவார்கள். நீ உன் பிள்ளைக்கு ஏற்ற காலத்தில் புத்திசொல்ல தவறவிட்டுவிட்டபின்பு புலம்பி என்ன பயன்?

எந்த பிரசங்கியார் ஜெபம் பண்ணினாலும் அவன் திருந்தாத நிலைக்குப் போய்விட்டானே!

**ஏலியின் பாவமென்ன?**

மேற்போக்காய் பார்த்தால் ஏலி நல்லவன் போல் தோன்றலாம். தன் பிள்ளைகளுக்கு புத்தி சொன்னான் அல்லவா என்று அநேகர் கேட்கலாம். கர்த்தர் அவனைக் குறித்துச் சொல்வதைக் கவனியுங்கள். கர்த்தர் அவனுக்கு இரண்டுபேர் மூலம் எச்சரிக்கைக் கொடுத்தார்.

தேவமனுஷன் ஒருவன் திட்டமாய் தீர்க்கதரிசனம் உரைத்தான் (1 சாமு.2:27-36). தேவனுடைய மனுஷன் ஒருவன் ஏலியிடம் வந்தான் என்று 1 சாமு.2:27ல் கூறப்பட்டுள்ளது. கர்த்தர் இந்த தேவமனுஷன்மூலம் எச்சரிப்புக் கொடுத்தார். இவன் பெயர் என்ன என்று சொல்லப்படவில்லை.

**ஏலியின் பாவங்கள்**

**1. என் பலியை, காணிக்கையை உதைக்கிறாய்** (1 சாமு.2:29)

தேவசமூகத்தில் மக்கள் பயபக்தியுடன் செலுத்தின காணிக்கையை இவன் மதிக்கவில்லை. அலட்சியப்படுத்தினான்.

> **என் வாசஸ்தலத்திலே செலுத்தும்படி நான் கட்டளையிட்ட என் பலியையும், என் காணிக்கையையும், நீங்கள் உதைப்பானேன்?** (1 சாமு. 2:29).

**2. காணிக்கைகளைக் கொண்டு தன்னைக் கொழுக்கப் பண்ணினான்** (1 சாமு.2:29)

மக்கள் தியாகம் பண்ணிக்கொடுக்கிற காணிக்கைகளை எவ்வளவு பயபக்தியுடன் செலவு செய்ய வேண்டும்? காணிக்கைகளில் பிரதானமானவைகளை எடுத்து தங்கள் ஆடம்பர வாழ்க்கைக்கு செலவு செய்தனர்.

மக்கள் தியாகம் பண்ணி தசமபாகம், காணிக்கை கொடுக்கின்றனர். அவர்களில் சிலர் இன்னும் வாடகை வீட்டில் இருந்துகொண்டு சந்தோஷமாக தியாகம் பண்ணி தசமபாகம் கொடுக்கின்றனர். இப்படிப்பட்ட மக்களிடம் வாங்கும் பணத்தை போதகர்கள் குடும்பம் எப்படி கவனமாய் செலவு செய்ய வேண்டும்? அவசியமான பொருட்களை வாங்கினால் பரவாயில்லை. ஆடம்பர வாழ்விற்கும் இப்படிப்பட்ட ஏழைகளின் பணம் செலவானால் வேதனை உண்டாகாதா?

வெளிநாடுகளிலிருந்து காணிக்கை அனுப்பும் அநேகர் அந்த நாட்டு நிலையில் ஏழைகள்தான். அந்த ஏழ்மை நிலையிலும் தியாகம் பண்ணி வெளிநாட்டு ஊழியர்களுக்குக் காணிக்கை அனுப்புகிறார்கள். இங்கே பல சந்தர்ப்பங்களிலும் அந்தப் பணம் ஆடம்பர செலவுகளுக்கே பயன்படுத்தப்படுகிறது.

**3. கர்த்தரைவிட தன்பிள்ளைகளை அதிகம் மதித்தான்** (1 சாமு.2:29)

பிள்ளைகள் மேல் அன்பாயிருப்பது தவறு அல்ல. கர்த்தரைவிட பிள்ளைகளை அதிகம் நேசிக்கும் நிலை வந்துவிட்டால் பிள்ளைகளுக்கு ஆபத்து வந்துவிட்டது என்று கூறலாம். கர்த்தரைவிட பிள்ளைகளை அதிகம் நேசிக்கும்போது, பணமும் பிரயாசமும் அவர்களுக்காகவே செலவாகும்.

> **என் ஜனமாகிய இஸ்ரவேலின் காணிக்கைகளிலெல்லாம் பிரதானமானவைகளைக் கொண்டு உங்களைக் கொழுக்கப்பண்ணும்படிக்கு, நீ என்னைப்பார்க்கிலும் உன் குமாரரை மதிப்பானேன் என்கிறார்** (1 சாமு.2:29).

**4. பிள்ளைகளை அடக்கி வளர்க்காத ஏலி** (1 சாமு. 3:13)

ஏலி தன் பிள்ளைகளுக்குப் புத்தி சொன்னது போல எழுதப்பட்டிருந்தாலும், கண்டித்து வளர்க்காத ஒரு தகப்பனாயிருந்தான். அவர்களை அடக்கி வளர்க்காதது பாவமாக கருதப்பட்டது. சாமுவேல் என்ற சிறுவன் மூலமும் கர்த்தர் ஏலியை எச்சரித்தார்

**பெற்றோர்களே! ஊழியர்களே!**

உங்கள் சாட்சி என்ன? நான் சொல்லித்தான் பார்க்கிறேன். அவன் கேட்கமாட்டேங்கிறான் என்று சாக்குப்போக்குச் சொல்லி தப்பிக்கலாம் என்று எண்ண

வேண்டாம். நரகத்திற்குப் பிள்ளைகளை ரெடி பண்ணிவிட்டீர்கள் என்று உணர்ந்து கொள்ளுங்கள்.

தண்ணீரில் கைகழுவினதால் பிலாத்து யோக்கியனல்ல. கூடியிருந்தவர்களினிமித்தம் தன் வாக்கை காப்பாற்ற யோவான்ஸ்நானகனின் தலையை தட்டில் கொண்டுவரச் சொன்ன ஏரோது குற்றமற்றவனல்ல. நரகத்திற்கு நேரே போகிறான் என்று தெரிந்த பின்பும் ஏனோ தானோ என்று இருந்து கொண்டு சாக்குப்போக்கு சொல்ல வேண்டாம். தப்ப முடியாது. முழுக்குடும்பத்திற்கும் ஆபத்து வருகிறது. எச்சரிக்கை

## நியாயத்தீர்ப்பு

1) ஓப்னி, பினெகாஸ் பெலிஸ்தியரால் கொல்லப்பட்டனர்.
2) ஏலி பிடரி முறிந்து செத்தான்.
3) இஸ்ரவேலைவிட்டு தேவமகிமை விலகிப்போயிற்று - இக்கபோத்

**ஏலியின் குடும்பத்திலிருந்து கற்றுக்கொள்ளும் காரியங்கள்:**

- தேவனுக்கு ஊழியம் செய்த ஏலி பிள்ளைகளை சரியாக வளர்க்கவில்லை.
- தகப்பனுக்குக் கீழ்ப்படியாத பிள்ளைகளாக இருந்தார்கள் அவன் மக்கள்.

- கர்த்தர் பலமுறை எச்சரித்தும் பிள்ளைகளைக் கண்டிப்புடன் நடத்தாமல் அவர்கள் இஷ்டத் திற்கு விட்டுவிட்டான்.
- தேவனுக்கு விரோதமாக பாவம் செய்ய துணிகரம் கொண்ட பிள்ளைகளாயிருந்தனர்.
- கர்த்தரின் காணிக்கைகளைக் கொண்டு ஆடம்பர செலவு செய்தனர்.
- கர்த்தரைவிட தன் பிள்ளைகளை அதிகம் மதித்ததாக கர்த்தர் வேதனைப்பட்டார்.
- கர்த்தரின் பலியையும் காணிக்கையையும் அலட்சியப்படுத்திய குடும்பம்.
- கர்த்தரின் உடன்படிக்கைப் பெட்டி எதிரிகளிடம் போகக் காரணமான குடும்பம்.
- ஒரே நாளில் பிள்ளைகள் கொல்லப்பட்டனர். ஏலியும் மரித்தான்.
- தேவமகிமை இஸ்ரவேலைவிட்டுப் போக காரணமான குடும்பம்.



# சூனேமில் கனம்பொருந்திய பெண்

இந்தக் குடும்பத்திலிருந்த பெண்ணுக்கு "கனம் பொருந்தியவள்" என்ற பட்டத்தை வேதம் கொடுத்துள்ளது பாராட்டுக்குரியது. இந்தப் பெண் நல்ல செல்வாக்குடைய குடும்பத்தின் தலைவியாக இருந்திருக்க வேண்டும். செல்வம் நிறைந்த குடும்பத்திலுள்ள பெண்களில் பலர் கனத்திற்குரியவர்களாக இருப்பதற்குப் பதில் தலைக்கனம் உள்ளவர்களாக இருப்பதைப் பார்க்கிறோம். இவள் சகல நற்பண்புகளுமுள்ளவளாக இருந்தாள் என்பதை இவள் சரித்திரம் விளக்குகிறது.

## தேவ மனிதனை வருந்தி உபசரித்தாள்

எலிசா தீர்க்கதரிசி இவள் ஊருக்குப் போயிருந்தபோது அவனை தன் வீட்டிற்கு வந்து சாப்பிடும்படி வருந்திக் கேட்டுக்கொண்டாள். சில பெண்

களுக்கு தங்கள் வீட்டிற்கு விருந்தினர் வருவதே பிடிக்காது. அப்படியே தப்பித்தவறி வந்துவிட்டாலும் அன்பற்ற உபசரணையைப் பார்த்து வந்தவன் ஓடியே போவான். ஒரு தடவை எங்கள் வீட்டிற்கு வாருங்கள் என்று சிலர் அழைப்பார்கள். ஆனால் என்றைக்கு வரவேண்டும் என்று திட்டமாய் சொல்ல மாட்டார்கள். ஒரு வருடம் கழித்து அதே நபரைப் பார்க்கும்போது ஒரு தடவை எங்கள் வீட்டிற்கு வாருங்கள் என்று ஏனோதானோ என்று அழைப்பார்கள்.

இவள் எலிசாவை விருந்து சாப்பிட அழைத்தாள், வருந்திக் கேட்டுக்கொண்டாள் என்று கூறப்பட்டுள்ளது. அதாவது இவள் அழைத்தபோது எலிசா இப்போது வர வசதி இல்லை என்று மறுத்திருக்கலாம். ஆனால் இவள் விடவில்லை. கண்டிப்பாக வாருங்கள் என்று பலமுறை அழைத்து, நல்ல உணவு கொடுத்திருக்க வேண்டும்.

நமது பொருளாதார நிலைக்கு ஏற்றபடி விருந்து இருக்க வேண்டும். சில ஏழைகள் நல்ல விருந்து கொடுப்பார்கள். சில செல்வந்தர்கள் மிக சாதாரண உணவு கொடுப்பார்கள். தேவ மக்களுக்கு நாம் எப்போதும் சிறப்பானதைச் செய்ய வேண்டும். விருந்துக்கு அழைத்துவிட்டு கஞ்சத்தனம் காட்டக்கூடாது. கடன் வாங்கி விருந்து கொடுக்கக்கூடாது. நமக்கு நல்ல வசதி இருக்கும்போது சிறப்பான விருந்து கொடுக்க வேண்டும்.

குறிப்பாக பரிசுத்தவான்களுக்கு மிக நல்ல விருந்து கொடுத்தால் கர்த்தர் நம்மை ஆசீர்வதிப்பார்.

## எலிசா பலமுறை இந்த வீட்டிற்கு வந்து உணவு உண்டான்

ஒருதடவை உணவு கொடுத்ததோடு நின்று விடவில்லை. மறுபடியும் நீங்கள் வரவேண்டும். எப்போதெல்லாம் இந்த ஊருக்கு வருகிறீர்களோ அப்போதெல்லாம் எங்கள் வீட்டிற்கு வரவேண்டும் என்று அவள் அழைத்திருக்க வேண்டும். எலிசாவும் இந்த பெண்ணின் அன்பின் உபசரணையைக் கண்டு பல தடவை இங்கே வர ஆரம்பித்தான்.

சிலர் ஒரு தடவை விருந்து கொடுத்ததோடு தங்கள் உபசரணையை முடித்துக்கொள்வார்கள். விருந்துக்குப் போகிறவர்களும் மறுபடியும் அந்த வீட்டிற்குப் போக விரும்பமாட்டார்கள். ஆனால் சூனேம் சகோதரி மிகச் சிறந்தவள்.

## எலிசாவை பரிசுத்தவான் என்று கண்டு கொண்டாள்

தன் வீட்டிற்கு வரும் ஆட்கள் எப்படிப்பட்டவர்கள் என்று பகுத்தறியும் தன்மை அநேக பெண்களுக்கு உண்டு. இவளும் அப்படிப்பட்டவள்தான். ஆட்களை நிதானிக்கத் தெரியாத பெண்கள் பலர் பிரச்சனையில் மாட்டிக்கொள்வார்கள். தன் வீட்டிற்கு வருகிற ஊழியக்காரர் எப்படிப்பட்டவர், அவர் சரியான உபதேசமுள்ளவரா, சரியான வாழ்வு வாழ்ப

வரா என்று நிதானிக்கத் தெரியாமல் வம்பில் மாட்டிக்கொள்ளுகிற பெண்கள் உண்டு. தவறான போதனையில் சிக்கி சத்தியத்தை விட்டு, சபையை விட்டு விலகிப்போன பெண்களுமுண்டு.

சுவிசேஷகர் என்ற பெயரில் சிலர் வருவார்கள், தீர்க்கதரிசி என்ற பெயரில் வருகிற ஆண்களும் பெண்களுமுண்டு. எச்சரிப்பில்லாமல் சரியாய் நிதா னிக்காமல் வீட்டிற்குள் அனுமதித்து வினையை விலைக்கு வாங்காதீர்கள். இந்தப் பெண் எலிசா வை பரிசுத்தவான் என்று நன்கு புரிந்து கொண்டு உபசரித்தாள்.

## எலிசா தன் வீட்டில் தங்க ஓர் அறையை கட்டினாள்

எலிசா தீர்க்கதரிசிக்கு விருந்து கொடுத்து ஆசீர்வாதங்களைப் பெற்றுப் பழகிப்போன அவள் எலிசா ஒரு தனி ஆள், அவருக்கு வீடு, குடும்பம் கிடையாது. எனவே நம் வீட்டில் தங்கலாமே என்ற நல்ல எண்ணம் அவளில் உருவாயிற்று. உணவு கொடுப்பது கொஞ்ச செலவுதான். மாடியில் அறை கட்டுவது அதிக செலவானது. ஆனாலும் தன் செல் வத்தை அதற்கு செலவு செய்வது தனக்கு ஆசீர் வாதம் என்று உணர்ந்தாள். இப்படிச் செய்ய வேண்டுமென்று எலிசா கேட்கவில்லை. தேவை யை அறிந்து, உணர்ந்து செயல்பட்ட குணசாலி யான பெண் இவள்.

## கணவனை மதித்த கனம் பொருந்திய மனைவி

இவள் நல்ல திறமையுள்ளவளாக இருந்தாள். இவளுடைய கணவனுடைய திறமை, அறிவைவிட இவளுடைய செயல்பாடு சிறந்ததாகத் தெரிகிறது. ஆனாலும் குடும்பத்திற்குத் தலைவன் கணவன் என்பதை அவள் மறக்கவில்லை. வரம்புமீறி செயல் படாத கனத்திற்குரியவளாகத் திகழ்ந்தாள். சில திறமையுள்ள பெண்கள் கணவனை மதிப்பதில்லை. அவர் ஒரு பேதை, விபரம் தெரியாதவர் என்று சொல்லுவார்கள். விபரம் தெரியாத திறமையற்ற கணவனாக இருப்பதால்தான் இத்தனை வருடம் உன்னைவிட்டுப் போகாமல் இருக்கிறார் என்று நான் சொல்வதுண்டு.

## தேவைகளை முன்னறிந்து செயல்பட்டாள்

> **நாம் மெத்தையின் மேல் ஒரு சிறிய அறை வீட்டைக் கட்டி அதில் அவருக்கு ஒரு கட்டிலை யும், மேஜையையும், நாற்காலியையும், குத்து விளக்கையும் வைப்போம்** (2 இராஜா.4:10).

மாடி வீடு கட்டி, மாத வாடகைக்கு விட்டு வருமானத்தைத் தேடும் இந்தக் கால குடும்பத்திற்கு இவள் முற்றிலும் வித்தியாசமான பெண். பணத்தை விட பரிசுத்தவான்களை நேசித்த பெண் இவள்.

சிலர் வீடு கட்டுவார்கள். தேவையான பொருட் களை வைக்கமாட்டார்கள். சரியான கட்டில் இருக் காது, மேஜை, நாற்காலி இருக்காது, விளக்கு இருக்காது, பாத்ரூமில் பக்கெட் இருக்காது, டிப்பர்

இருக்காது. இந்தப் பெண் வாழ்ந்தது சுமார் 2600 வருடங்களுக்கு முன்பு. ஆனாலும் அந்தக் காலத்திலும் இவ்வளவு கவனமாக, யோசனையாக செயல்பட்டது ஆச்சரியமாயிருக்கிறது. வெறும் பாயும், தலையணையும் போதும் என்று எண்ணவில்லை.

## தன் தேவைகளை ஒருபோதும் வெளியே சொல்லாத பெருமாட்டி அவள்

இவ்வளவு நன்மைகளையும் எலிசா தீர்க்க தரிசிக்கு செய்தாலும் தனக்கிருந்த ஒரு பெரிய தேவையை அவள் சொல்லவேயில்லை. இவளுக்கு குழந்தையில்லாமலிருந்தது. பொதுவான இப்படிப் பட்ட நிலையில் எலிசாவைப் பார்த்த முதல் நாளிலேயே அவள் சொல்லியிருக்க முடியும். அப்படித் தான் யாரும் செய்வார்கள். அப்படிச் சொல்லியிருந் தாலும் தவறு ஒன்றுமில்லை. இத்தனை மாதங் களுக்குப் (அல்லது வருடங்கள்) பின்பும் அவள் தன் தேவையை சொல்லவே இல்லை.

எலிசா அவளை அழைத்து,

> **உனக்கு நான் என்ன செய்ய வேண்டும்? ராஜா வினிடத்திலாவது சேனாபதியினிடத்திலாவது உனக்காக நான் பேச வேண்டிய காரியங்கள் உண்டோ என்று கேட்டான்** (2 இரா.4:13).

அப்படிக் கேட்ட பின்பும் தன் தேவையை அவள் சொல்லவில்லை. நான் என் ஜனங்கள் மத்தியில் சுகமாகத்தான் வாழ்கிறேன் என்றாள். ஆச்சரியமான பெண் இவள். எலிசாவிற்கு அரண்

மனைவரை செல்வாக்கு இருந்தது. ஆனாலும் அவள் அப்படி ஒரு நன்மையை எதிர்பார்க்கவில்லை.

**கர்த்தர் உனக்கு குழந்தைப் பாக்கியம் தருவார்**

இவளுக்கு குழந்தை இல்லை என்பதை தன் வேலைக்காரன் மூலம் அறிந்துகொண்ட எலிசா "ஒரு பிராண உற்பத்தி காலத் திட்டத்திலே ஒரு குமாரனை அணைத்துக்கொண்டிருப்பாய்" என்று கூறினான். எலிசா அவளுக்காக ஜெபிக்கவில்லை. அவன் கண்ணைத் திறந்துகொண்டே தீர்க்கதரிசன மாக சொன்ன வார்த்தைகள் நிறைவேறிற்று. 10 மாதத்திலே கர்த்தர் அவளுக்கு ஒரு மகனை கொடுத்தார்.

குழந்தை இல்லை என்று கண்ணீர்விட்டு அழ வில்லை. எலிசாவே நீர் எனக்கு குழந்தை கிடைக்க ஜெபித்து குழந்தை கிடைத்தால் உமக்கு ஒரு அறை கட்டித் தருவேன் என்று நிபந்தனை விதிக்கவில் லை. தேவ மனுஷனுடைய இருதயத்தைக் குளிரப் பண்ணும்போது கேட்காமலேயே கர்த்தர் அற்புதம் செய்வார்.

**மகன் மரித்தபோதும் விசுவாசத்தை விட்டு விடவில்லை**

அவள் மகன் வளர்ந்து வந்தான். ஒருநாள் வியாதிப்பட்டு மரித்து விட்டான். மரித்த மகனை மாடியில் கட்டியிருந்த அறையில் எலிசாவின்

கட்டிலின்மேல் வைத்தாள், கதவை பூட்டினாள். நடந்ததை தன் கணவனிடம் சொல்லவில்லை. அவள் கணவன் இப்படிப்பட்ட அதிர்ச்சியை தாங்க முடியாதவனாக இருந்திருக்கலாம்.

எலிசாவிடம் போகத் தீர்மானித்து தன் கணவனிடம், ஒரு வேலைக்காரனும் பயணம் செய்ய கழுதையும் வேண்டுமென்று கேட்டாள். கணவனுக்கு ஒன்றுமே தெரியப்படுத்தாமலேயே எலிசாவிடம் போய் அவன் காலைப் பிடித்துக்கொண்டாள். எலிசா வந்து ஜெபித்து, செத்த பிள்ளை உயிர் பெறச் செய்தான்.

## சூனேமியாளின் பணிவு

எலிசாவிடம் போய் அவன் காலைப்பிடித்து மன்றாடினாள். பிள்ளை உயிர்பெற்றபின் எலிசாவின் பாதத்தில் விழுந்து தரைமட்டும் பணிந்தாள்.

இதை வாசிக்கும் சகோதரிகளே! இவளிடம் காணப்பட்ட பண்புகளில் உங்களிடம் ஏதாவது இருக்கிறதா? நற்பண்புகள் உங்களிடம் உருவாக உங்களைக் கர்த்தருக்கு அர்ப்பணியுங்கள்.

## சூனேமியாளின் கணவன்

இவனைப் பற்றி அதிக விளக்கம் ஒன்றுமில்லை (பல ஆண்களின் நிலையும் இதுதான்). ஆனால் தன் மனைவி செய்த நற்காரியங்களுக்கு இவனுடைய ஒத்துழைப்பு இருந்தது என்பது தெளிவு. எலிசாவிற்கு அடிக்கடி விருந்து பண்ணு

வதைக் குறித்து குறை சொல்லவில்லை. மேல் வீட்டில் ஓர் அறை கட்டி அதில் தேவையான பொருட்களை வைக்க மறுப்புச் சொல்லவில்லை. இந்த சூழ்நிலையில் பல கணவன்மார் இது வீண் செலவு என்று முணுமுணுப்பார்கள். உனக்கு என்ன இந்த எலிசாவிடம் இவ்வளவு பரிவு என்று சந்தேகத்தை எழுப்புவார்கள். இவன் அப்படிப்பட்டவனல்ல.

சூனேமியாளிடம் முன்நடத்திச் செல்லும் திறன் *(Leadership)* இருந்தது. அதை அறிந்து அங்கீகரித்து அதற்கேற்ற கணவனாக நடந்துகொண்டான். கணவன்மாரே, மனைவி யோசனையாய் செய்யும் காரியங்களைக் குறித்து மகிழ்ச்சியடைகிறீர்களா? அல்லது எரிச்சலடைகிறீர்களா? சந்தேகப்படுகிறீர்களா?

---

**சூனேமில் கனம்பொருந்திய பெண் குடும்பத்திலிருந்து கற்றுக்கொள்ளும் காரியங்கள்:**

- கனம்பொருந்திய பெண் என்று சாட்சி பெற்ற பெண் இவள்.
- ஊருக்குவந்த தீர்க்கத்தரிசியை வருந்தி அழைத்து விருந்து கொடுத்த சிறந்த பெண் இவள்.

- எலிசாவை பரிசுத்தவான் என்று பகுத்தறிந்த பரிசுத்தவாட்டி இவள்.
- தீர்க்கத்தரிசி தன் வீட்டில் தங்க மேல்மாடியில் ஓர் அறை கட்டினது இவளின் சிறந்த பண்பை வெளிப்படுத்துகிறது.
- தன் கணவன் விபரம் குறைந்தவனாக இருந்த போதிலும் அவனை மதித்தாள்.
- உனக்கு நான் என்ன உதவி செய்ய வேண்டும் என்று எலிசா கேட்டபோதும், தனக்கு ஒரு குழந்தை இல்லையென்று சொல்லாத அடக்க மான பெண்.
- மகன் திடீரென்று இறந்துபோன போதிலும் விசுவாசத்தை தளரவிடவில்லை, மனம் பேதலிக் காமல் உறுதியாயிருந்தாள்.
- தேவ உதவியை நாடி எலிசாவிடம் போய் அவன் காலைப்பிடித்த பாக்கியவதி.
- மரித்த மகன் உயிர்பெறும் வரை எலிசாவை விடவில்லை.
- தன் மனைவியின் தலைமைத்துவத்தை அலட்சி யப்படுத்தாதவன் அவள் கணவன்.



# வஸ்தி, எஸ்தர்

**அ**காஸ்வேரு என்ற அரசன் பெர்சியா (ஈரான்) தேசத்தை கி.மு.486-465 வருடங்களில் ஆட்சி செய்தான். இந்தியா முதல் எத்தியோப்பியா வரை 127 நாடுகளை அரசாண்டான். அவனுடைய பட்டத்து அரசியாக இருந்தவள் வஸ்தி. மிகமிக அழகானவள்.

ராஜா ஏழுநாட்கள் தன் பிரபுக்களுக்கும், பல்வேறு தேசங்களிலிருந்து வந்த சிற்றரசர்களுக்கும் விருந்து கொடுத்தான். கடைசி நாளில் தன் மனைவியாகிய வஸ்தியை எல்லாருக்கும் காண்பித்து பெருமைப்பட விரும்பினான். ஆனால் வஸ்தியோ அரசனின் கட்டளைக்கு கீழ்ப்படியாமல் முரண்டு பிடித்தாள். பெண்கள் முரட்டாட்டம் பண்ண ஆரம்பித்தாலே சண்டை ஆரம்பமாகிவிட்டது என்று அர்த்தம். பட்டத்து அரசி என்றால் அந்தரங்க

அறையில் ஒளிந்திருக்க வேண்டிய சாதாரண மனைவியல்ல. அவசியமாகும்போது எல்லாருக்கும் காட்சியளிக்க வேண்டிய கடமையுள்ளவள்தான்.

## வஸ்தியிடம் காணப்பட்ட தவறுகள்

பார்க்க அழகாயிருந்தாலும் புத்தி சரியில்லாத வளாக இருந்தாள். தன் புருஷனுக்கு கீழ்படியாத வளாக இருந்தாள். தன் கணவன் பேரரசன் என்று தெரிந்தும் அவனுக்கு தலைகுனிவை உண்டு பண்ணினாள். பெருமைக்காரி என்ற பெயரை சம்பாதித்து விட்டாள்.

## இதனால் கிடைத்த தண்டனை என்ன?

பட்டத்து அரசி என்ற உயர் அந்தஸ்தை இழந் தாள். இனி ராஜசமூகத்தில் வரக்கூடாது என்று கட்டளை பெற்றாள். புருஷனை மதியுங்கள் என்று தேசத்திற்கே சட்டம்வரக் காரணமானாள். பட்டத்து அரசியாக இன்னொரு பெண்ணை தேர்ந்தெடுக்க தீர்மானிக்கப்பட்டது.

## வஸ்தி ஆவி வேலை செய்யும் பெண்கள் இன்றும் உண்டு

கணவன் அன்போடு கேட்கும் காரியத்திற்கும் இணங்காமல் குஸ்திபோடும் வஸ்திகள் ஏராள முண்டு. நான் எவ்வளவு பெரிய அழகி என்று பெருமைப்பட்டு கெட்டுப்போகிற பெண்கள் உண்டு. புருஷனை அலட்சியப்படுத்தும் பெண்

களாக இருக்கிறீர்களா? கணவனுக்குப் பயன்படாத உன் அழகால் உனக்கு என்ன பயன்?

**மனைவிகளே, கர்த்தருக்குக் கீழ்ப்படிகிறதுபோல, உங்கள் சொந்தப் புருஷருக்குக் கீழ்ப்படியுங்கள்** (எபே.5:22) என்று வேதம் கூறுகிறதே!

சில பெண்கள் கர்த்தருக்கே கீழ்ப்படிவதில்லையே! புருஷனுக்குக் கீழ்ப்படிவார்களா? வஸ்தி ஆவி செயல்படும் பெண்களில் பலர் தன் கணவன் வேறு பெண்ணுடன் பழக ஆரம்பிப்பதைப் பார்த்து கண்ணீர் வடிக்கிறார்கள். வஸ்தி பட்டத்து அரசியின் அந்தஸ்தை இழந்து சாதாரண அரன்மனை தோழி நிலைக்கு கீழே தள்ளப்பட்டாள்.

சகோதரி! நீ உன் கணவனை ராஜாபோல மதித்தால்தான் நீ ராணியாக திகழமுடியும். கணவனை வேலைக்காரனைப்போல நடத்தினால் நீயும் தானாகவே வேலைக்காரி நிலைக்குத் தள்ளப்படுவாய். உன் கணவனால் உனக்கு கிடைத்த அந்தஸ்தை இழந்துவிடாதே! கணவனுக்கு இணங்கிப் போகத் தீர்மானியுங்கள்.

## எஸ்தர்

இவள் அந்நியநாட்டுப் பெண். யூத குலத்தைச் சேர்ந்தவள். அடிமைகளால் கொண்டுவரப்பட்ட யூத குடும்பத்தில் பிறந்தவள். ‘அத்சாள்’ என்பது அவளுடைய எபிரேயப் பெயர். ‘எஸ்டர்’ என்பது

பெர்சியப் பெயர். 'எஸ்தர்' என்பது கிரேக்கப் பெயர். பழைய ஏற்பாட்டுப் புஸ்தகங்களில் இரண்டு மட்டும் பெண்களின் பெயர்களைத் தாங்கி நிற்பது பெருமைக்குரியது. 1) ரூத் புஸ்தகம் 2) எஸ்தர் புஸ்தகம்.

எஸ்தர் தாய் தகப்பனற்ற அனாதை. மொர் தெகாய் என்பவனின் சித்தப்பா மகள் எஸ்தர். தாய் தகப்பனை இழந்த தன் சித்தப்பா மகளை தன் மகளாக புத்திரசுவீகாரம் எடுத்துக்கொண் டான். எஸ்தர் ரூபவதியும் சௌந்தரியமுடைய வளுமாயிருந்தாள் (எஸ்தர் 2:7). அவளுடைய அழகு இரட்டிப்பாய் சொல்லப்பட்டுள்ளது.

தேவனுடைய திட்டத்தின்படி இவள் பட்டத்து அரசியாக தேர்வு செய்யப்பட்டாள். ராஜாவின் கண்களில் இவளுக்கு இரக்கம் கிடைத்தது. அரசன் விரும்பக்கூடிய பெண்ணாக இருந்தாள். பார்க்க அழகாக இருக்கும் அநேகர் குணத்தில் அசிங்க மாயிருப்பார்கள். எஸ்தர் நல்ல பண்புகள் உள்ள வளாக இருந்தாள்.

## அரண்மனை விசாரிப்புக்காரன் யேகாயிடம் பணிவாய் நடந்துகொண்டாள்

இவளை அரண்மனையில் பராமரிக்க நியமிக் கப்பட்டிருந்த யேகாயிடம் இவள் பெருமையோடு நடந்துகொள்ளவில்லை. நல்ல பண்பான பெண் என்ற பெயரை சம்பாதித்துக் கொண்டாள்.

**மொர்தெகாயிடம் எப்போதும் பணிவுடன் நடந்துகொண்டாள்**

தன்னை எடுத்து வளர்த்த தன் பெரியப்பா மகன் மொர்தெகாயிடம் எப்போதும் பணிவுடனும் கீழ்படிதலுடனும் நடந்துகொண்டாள். பட்டத்து அரசியானபின்பும், அரண்மனை வாழ்வு கிடைத்த பின்பும் தன் அண்ணனும், வளர்ப்புத் தகப்பனுமாகிய மொர்தெகாயிடம் மிக பண்புடன் நடந்து கொண்டாள்.

சில பெண்கள் வசதியான வாழ்வு கிடைத்த பின்பு பெற்றோரையும், சொந்தக்காரர்களையும், தனக்கு உதவி செய்தவர்களையும் மதிக்க மாட்டார்கள். எஸ்தர் அப்படியல்ல.

**எதிரியை மடங்கடிக்க கணவனுக்கு விருந்து வைத்தாள்**

ஆமான் என்ற பொல்லாதவன் தன் யூத மக்களை அழிக்க திட்டமிட்டுவிட்டான் என்று அறிந்தபோது எஸ்தர் அழுது ஓலமிடவில்லை. காரியத்தை கச்சிதமாக செய்தாள். தன் கணவனை விருந்துக்கு அழைத்தாள்.

விருந்தாளிகளுக்குத்தானே விருந்து என்று எண்ணும் சகோதரிகளே! காரியத்தைச் சாதிக்க கணவனுக்கு விருந்து வைத்து பழகுங்கள். அழுது, புலம்பி, அடம்பிடித்து காரியத்தைச் சாதிக்கும் பெண்கள் உண்டு. கணவனும் வேண்டா வெறுப்

புடன் வேறு வழியில்லாமல் மனைவியைப் பிரியப் படுத்த சில காரியங்களை செய்வான்.

மனைவிகளே! கணவனுடைய விருப்பம் என்ன என்று உங்களுக்குத் தெரியும். அதைச் செய்து அவரைப் பிரியப்படுத்துங்கள். வெளியே போகும்போது மட்டும் அழகாக உடையணிந்து அலங்காரம் பண்ணிச் செல்கிறீர்களே! உங்களைத் தேடி வீட்டிற்கு வரும் கணவனுக்கு உங்கள் தோற றத்தில் விருந்து கொடுங்கள். அவர் விரும்பும் உணவை நேர்த்தியாகச் செய்யுங்கள். அவர் எதிர்பார்க்கும் காரியத்தைச் செய்து விருந்து படையுங்கள். நீங்கள் விரும்பும் காரியத்தை எளிதாக செய்து முடிக்கலாம்.

விருந்து சாப்பிட்டு பூரிப்படைந்த அரசன் எஸ்தர் ராஜாத்தியே உன் வேண்டுதல் என்ன? என் ராஜ்யத்தில் பாதி கேட்டாலும் தருவேன் என்றான். எஸ்தர் இந்த ஆமானைக் கொஞ்சம் கவனியுங்கள் என்றாள். ஆமான் சரித்திரம் அதோடு முடிந்தது. காரியத்தைச் சாதிக்கத் தெரிந்த பெண் எஸ்தர்.

இப்படி நடக்கத் தெரியாத பெண்கள்தான் எப்போதும் தங்கள் காரியத்தைச் சாதிக்க கணவ னுடன் சண்டை போடுவார்கள், வாக்குவாதம் பண்ணுவார்கள். கணவனுடன் பல நாட்கள், பல வாரங்கள் பேச மாட்டார்கள். கணவன் பேச்சுக்கு இணங்கமாட்டார்கள். இவர் நம்ம புருஷன்தானே,

இருபது வருடமாய் இவருடன்தானே வாழ்கிறேன், என்ன பெரிய உபசரணை இவருக்கு வேண்டிக் கிடக்கிறது என்று எண்ணாதிருங்கள்.

உங்கள் அன்பான பேச்சும், விருந்தும், புன் முறுவலும், பிறருக்கு மட்டும் என்று இராமல் உங்கள் கணவனுக்கும் பகிர்ந்து கொடுங்கள். மிக மகிழ்ச்சியான, ஆசீர்வாதமான குடும்ப வாழ்க்கை கிடைக்கும்.

**வஸ்தி, எஸ்தரிடமிருந்து கற்றுக்கொள்ளும் காரியங்கள்:**

- அழகாக இருப்பவர்களெல்லாம் நல்ல பண்புள் ளவர்கள் அல்ல என்பதற்கு வஸ்தி ஓர் எச்சரிப்பு.
- கணவனை அலட்சியப்படுத்தியதால் அரசி என்ற மேன்மையை இழந்தாள்.
- இனி அரசனின் சமூகத்தில் வரக்கூடாது என்ற கட்டளை பெற்றாள்.
- பெண்கள் கணவன்மாரை மதிக்க வேண்டும் என்ற சட்டம் கொண்டுவர காரணமானாள்.

- ❊ ஏழ்மை நிலையிலிருந்த எஸ்தர் கர்த்தரால் அரசியாக உயர்த்தப்பட்டாள்.
- ❊ அரண்மனை விசாரிப்புக்காரர்களிடம் பணிவாக நடந்துகொண்டாள்.
- ❊ தன் மக்களை மீட்க தன் உயிரையும் விட ஆயத்தமானாள் எஸ்தர்.
- ❊ காரியத்தை சாதிக்க கணவனுக்கு விருந்து வைத்தாள் எஸ்தர்.
- ❊ எதிரிக்கும் விருந்து வைத்து காரியத்தை கச்சித மாக முடித்தாள்.
- ❊ அரண்மனையிலிருந்தபோதும் தன் சொந்தக் காரரை மதித்து நடந்தாள்.



# யோபின் குடும்பம்

**வே**தாகமம் எழுதப்பட்ட காலத்திற்கு முன்பு வாழ்ந்தவன் யோபு. அதாவது மோசேயின் நாட்களுக்கு முன் முற்பிதாக்களின் காலத்தில் வாழ்ந்தவன் (கி.மு.2000க்கு முன்). யோபு எல்லாவிதத்திலும் ஆசீர்வதிக்கப்பட்டிருந்தான்.

**ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள் முதலிடம் பெறுகிறது** (யோபு 1:1)

யோபை அறிமுகம் செய்து வைக்கும் முறை நேர்த்தியானது. அவன் உத்தமன், சன்மார்க்கன், தேவனுக்குப் பயந்தவன், பொல்லாப்புக்கு விலகுகிறவன். ஒரு குடும்பத் தலைவன் இப்படிப்பட்டவனாக இருக்க வேண்டும். ஒருவன் என்ன படித்திருக்கிறான், என்ன உத்தியோகத்தில் இருக்கிறான் என்பதைத்தான் முதலில் கூறுவார்கள். ஒருவனு

டைய உண்மையான நிலையை வெளிப்படுத்துவது அவனுடைய ஆவிக்குரிய நிலைதான். ஒரு குடும்பத் தலைவன் ஆவிக்குரியவனாக இருந்தால் அந்தக் குடும்பம் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கும்.

> **கர்த்தர் யோபையும் அவன் வீட்டையும் அவனுக்கு உண்டான எல்லாவற்றையும் சுற்றி வேலியடைக்க வில்லையோ? அவன் கைகளின் கிரியையை ஆசீர் வதித்தீர்; அவனுடைய சம்பத்து தேசத்தில் பெரு கிற்று** (யோபு 1:10)

ஒரு குடும்பத் தலைவன் கர்த்தருக்குப் பயந்த உத்தமனாய், தன் நடத்தைகள் எல்லாவற்றிலும் சன்மார்க்கனாய் நடந்துகொள்ளும்போது நிச்சயம் கர்த்தர் அவன் குடும்பத்தை வேலியடைத்துக் காப்பார். அநேக பிள்ளைகள் கெட்டுப்போகக் காரணம் தகப்பன் சரியில்லாதது என்பது உண்மை. யோபு தன் குடும்பத்திற்காக பலி செலுத்தினான் (மோசேயின் பலிமுறைகளுக்கு முன்பு வாழ்ந் தவன் என்பதற்கு இதுவும் ஓர் ஆதாரம்). தன் பிள்ளைகள் பாவம் செய்துவிடக்கூடாது, தவறான எண்ணங் கொண்டவர்களாக இருக்கக் கூடாது என்பதில் கவனம் செலுத்தினான்.

## யோபிற்கு ஏழு குமாரர், மூன்று குமாரத் திகள் இருந்தார்கள்

பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்தரம். ஆண்டவர் இந்த ஆசீர்வாதத்தையும் அவனுக்குக்

கொடுத்திருந்தார். இந்தக் காலத்தில் பத்துப் பிள்ளைகள் என்பது கற்பனை செய்து பார்க்க முடியாதது. ஒன்றுக்குமேல் இப்போது வேண்டாம், ஒன்றுகூட வேண்டாம், நாமே குழந்தைகள், நமக்கேன் குழந்தைகள் என்ற தத்துவம் நிலவும் இக்காலத்திற்கு இந்த எண்ணிக்கை மிக அதிகம்தான். ஆனால் அக்காலத்தில் இது சர்வ சாதாரணம்.

## யோபின் சொத்துகள்

7000 ஆடுகள், 3000 ஒட்டகங்கள், 500 ஏர் மாடுகள், 500 கழுதைகள், திரளான பணிவிடைக்காரர் என்று பட்டியலிடப்பட்டுள்ளது. அக்கால சொத்துகள் இவை. ஆவிக்குரியவர்கள் என்றால் ஏழைகளாக இருக்க வேண்டும் என்று சிலர் தவறான கருத்துடையவர்களாக இருக்கின்றனர்.

பணக்காரர் பரலோக ராஜ்யத்திற்குள் வருவது அரிது. மரித்த பணக்காரன் பாதாளத்தில் தன் கண்களை ஏறெடுத்துப் பார்த்தான். ஏழை லாசரு பரலோகத்தில் ஆபிரகாமின் மடியில் கொண்டு போய் விடப்பட்டான் என்ற வசனங்களை மனதில் கொண்டு சிலர் இப்படிப்பட்ட கருத்திற்கு வந்து விடுகின்றனர்.

செல்வம் பெருகும்போது எச்சரிப்பாக வாழா விட்டால் கர்த்தரைவிட்டு விலகும் ஆபத்து உண்டு என்பது உண்மை. ஆனால் எல்லா செல்வந்தர்களும் கர்த்தரைவிட்டு விலகுவார்கள் என்பது

உண்மையல்ல. பண ஆசைதான் எல்லா தீமைக்கும் வேராக இருக்கிறது. சரியான ஆட்களிடம் பணம் இருந்தால் கர்த்தருடைய ராஜ்ய வளர்ச்சிக்கு அது உதவியாகவே இருக்கும் என்பது எக்காலத்திலும் உண்மை.

யோபு பெரிய செல்வந்தனாக இருந்தான். அதே சமயம் உத்தமனாக கர்த்தருக்குப் பயந்து வாழ்ந்து வந்தான். அவன் மனைவியைப் பற்றி அதிகம் சொல்லப்படவில்லை. அவள் சொன்ன ஒரு வாக்கியம் மட்டும்தான் அவளைப்பற்றி நாம் விளங்கிக்கொள்ள முடிகிறது.

**யோபுவின் குடும்பத்திற்கு ஏற்பட்ட பேரழிவு**

சாத்தானின் முயற்சியால், யோபிற்கு இருந்த அத்தனை செல்வங்களும் ஒரே நாளில் அழிந்தன. திடீரென்று ஏற்பட்ட விபத்தில் பத்துப் பிள்ளை களும் குடும்பமாக செத்தார்கள். யோபிற்கு கொடிய வியாதி உண்டாகி உருவழிந்து காணப்பட்டான். ஓர் துன்மார்க்கனுக்குக்கூட இப்படி வருவதை யாரும் விரும்ப மாட்டார்கள். பரிசுத்த வாழ்வு வாழ்ந்து வந்த யோபிற்கு இப்படி ஒரு நிலை ஏற்பட்டது.

**யோபின் மனைவி சொன்ன வார்த்தைகள்:**

**நீர் இன்னும் உம்முடைய உத்தமத்தில் உறுதியாய் நிற்கிறீரோ? தேவனைத் தூஷித்து ஜீவனைவிடும்**
(யோபு 2:9)

யோபின் மனைவியின் இந்த வார்த்தைகளை இரண்டு கோணத்தில் பார்க்கலாம்:

1) கர்த்தருக்கு உண்மையாயிருந்த தன் கணவனுக்கு ஏன் இந்த நிலை ஏற்பட்டது. இனியும் கர்த்தரைப் பின்பற்றி என்ன பயன் என்ற அவிசுவாசத்தில் கூறப்பட்ட வார்த்தைகளாக இருக்கலாம்.

2) தன் கணவன் அனுபவிக்கிற கொடிய வேதனையைக் கண்டு அவன் இந்த நிலையில் உயிர் வாழ்வதைவிட சாவதே மேல் என்ற விரக்தியில் கூறியிருக்கலாம்.

## அருமை சகோதரிகளே!

உங்கள் குடும்பத்தில் ஏற்பட்ட நஷ்டம், மரணம், வியாதி உங்களை நிலைகுலையச் செய்யலாம். உங்கள் கணவர் அனுபவிக்கும் வியாதியை எண்ணி சோர்பு வரலாம். ஆனால் எந்த நிலையிலும் கர்த்தரை விசுவாசிப்பதை விட்டுவிடாதிருங்கள். அந்த ஒரு காரியம்தான் உங்களுக்கு வெற்றியைத் தரும். நடக்கும் காரியங்கள் உங்களுக்கு விளங்காததாக இருந்தாலும் விசுவாசத்தை, நம்பிக்கையை விட்டுவிடாதிருங்கள்.

அதுமட்டுமல்ல, பாடுபடுகிற உங்கள் குடும்ப அங்கத்தினர்களுக்கு, உங்கள் கணவருக்கு இந்த இக்கட்டான வேளையில் ஆறுதல் சொல்லப் பழகுங்கள். வெந்த புண்ணில் வேலை குத்துவது போல் பேச வேண்டாம். விரக்தியான வார்த்தைகள்

வேதனையைக் கொண்டுவரும், அவிசுவாசத்தை வெளிப்படுத்தும்.

**அருமை சகோதரரே!**

இதுபோலவே மனைவி படும் வேதனைகளைப் பார்த்து சோர்வான வார்த்தைகளைப் பேசி அவர் களை புண்படுத்த வேண்டாம். வேதனையிலிருக் கிறவர்களுக்குத் தேவை ஆறுதல். ஆறுதல் சொல்லத் தெரியாவிட்டால் அதைரிய வார்த்தைகளை அலப் பாமல் அமைதியாகவாவது இருந்து விடுங்கள்.

கொஞ்சக்காலம் பாடு அனுபவித்த யோபு, பின்பு ஆரோக்கியமடைந்து இரட்டிப்பான ஆசீர்வாதம் பெற்றான்.

**கர்த்தர் யோபின் முன்னிலைமையைப் பார்க்கிலும் அவன் பின்னிலைமையை ஆசீர்வதித்தார்... யோபு நூற்று நாற்பது வருஷம் உயிரோடிருந்து, நாலு தலைமுறையாகத் தன் பிள்ளைகளையும் தன் பிள்ளைகளுடைய பிள்ளைகளையும் கண்டான்** (யோபு 42:12-17)

குடும்பத்திற்கு வரும் சோதனைகளை, பாடு களை பொறுமையுடன் சகித்து ஜெபித்து, தொ டர்ந்து கர்த்தருக்கு உண்மையோடிருந்தால் கர்த்தர் நிச்சயமாய் ஆசீர்வதிப்பார்.

**யோபின் குடும்பத்திலிருந்து கற்றுக்கொள்ளும் காரியங்கள்:**

- செல்வந்தனாக இருந்த யோபு பரிசுத்தவானாக வாழ்ந்து கர்த்தரால் சாட்சி பெற்றான்.
- என் சம்பாத்தியம் என்று சொல்லாமல் எல்லாம் கர்த்தர் கொடுத்தது என்று சாட்சி கூறினான்.
- அவன் குடும்பம் கர்த்தரால் வேலியடைத்துக் காக்கப்பட்டது.
- பரிசுத்தவானுக்கும் பாடுகள் உண்டு என்பது இவனுடைய வாழ்வின் பாடம்.
- எல்லாவற்றையும் இழந்தபோதிலும் கர்த்தரை குறைகூறாத பரிசுத்தவான்.
- கர்த்தர் கொடுத்தார், சாத்தான் எடுத்தான் என்று சொல்லாமல் கர்த்தர் எடுத்தார் என்று தைரியமாயிருந்தவன்.
- ஆறுதல் சொல்ல வேண்டிய மனைவி மனம் பேதலித்துப் பேசியது ஓர் எச்சரிப்பு.
- நண்பர்கள் அவனை குற்றம் சாட்டினபோது சோர்ந்துபோகாமல் பதிலளித்தவன்.
- குறைகூறின நண்பர்களுக்காக கர்த்தரிடம் பரிந்துபேசி மன்றாடினான்.
- சோதனையில் வெற்றியடைந்து இரட்டிப்பான ஆசீர்வாதம் பெற்றான்.



# சகரியா - எலிசபெத்து

**பு**திய ஏற்பாட்டில் கூறப்பட்டுள்ள முதல் குடும்பம் சகரியா - எலிசபெத்து குடும்பம். லூக்கா இந்த குடும்பத்தைக் குறித்து தெளிவாய் எழுதுகிறார்.

> **அவர்கள் இருவரும் கர்த்தரிட்ட சகல கற்பனைகளின்படியேயும் நியமங்களின்படியேயும் குற்றமற்றவர்களாய் நடந்து, தேவனுக்கு முன்பாக நீதியுள்ளவர்களாயிருந்தார்கள்** (லூக்.1:6).

இவர்கள் இருவரைப் பற்றியும் கூறப்பட்டுள்ள காரியங்கள் மூலம் இவர்கள் ஒரு நல்ல தரமுள்ள தம்பதிகள் என்பதை நன்கு விளங்கிக் கொள்ளலாம்.

## கர்த்தருடைய சகல கற்பனையின்படியும் நடந்துவந்தார்கள்

ஏனோதானோ என்ற வாழ்க்கை வாழாமல் ஓர் நல்ல பக்தியுள்ள வாழ்க்கை வாழ்ந்தார்கள்.

ஒரு சில கட்டளைகளைக் கைக்கொண்டவர்கள் என்று சொல்லாமல் தேவனுடைய எல்லாக் கட்ட ளைகளுக்கும் கீழ்ப்படிந்து வாழ்ந்தனர். கணவன்-மனைவி இருவரும் ஆவிக்குரிய வாழ்வில் ஒரு மனதுடன் இணைந்து வளர்வது எவ்வளவு ஆசீர் வாதமானது! தேவனுடைய எல்லாக் கட்டளை களுக்கும் கீழ்ப்படிந்து நடக்கும் தம்பதிகள் மெய் யாகவே ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்தான். எல்லாக் கட்டளைகளுக்கும் கீழ்ப்படிந்து நடக்கும் குடும்பம் என்று சாட்சி சொல்லக்கூடிய வாழ்வு வாழ்பவர் கள் குறைவே. இவர்கள் தேவனுடைய வசனத் திற்குக் கீழ்ப்படிந்து பரிசுத்தமாய் வாழ்ந்து வந்தனர்.

## எல்லா நியமங்களையும் கைக்கொண்டு வந்தனர்

நியமங்கள் என்பது ஒழுங்குகள், சட்டதிட் டங்கள். அதாவது, சட்டதிட்டங்களுக்குக் கீழ்ப் படிந்து நடந்தனர். சிலர் வசனத்திற்கு கீழ்ப்படிந்து பரிசுத்தமாய் வாழ்வார்கள். ஆனால் சில ஒழுங்கு களுக்குக் கீழ்ப்படிய மாட்டார்கள். சபையோடுள்ள காரியங்களில், அலுவலகத்திலுள்ள வேலை சம்பந்தமான காரியங்களில், பக்கத்து வீட்டுக்காரர் களுடன் பழகும் விஷயத்தில் சிலர் அறநெறித் தன்மையுடன் நடந்துகொள்வதில்லை.

சகரியாவும் எலிசபெத்தும் தேவனோடும், மனிதரோடும் நல்ல உறவில் இருந்தனர். இதை வாசிக்கும் அருமையான சகோதரனே, சகோதரியே

இப்படிப்பட்ட வாழ்க்கை வாழ உங்களை முழுவதும் ஒப்புக்கொடுங்கள்.

## குற்றமற்றவர்களாய் நடந்தனர்

தேவனுக்கு விரோதமான பாவம் செய்யவில்லை என்பது மட்டுமல்ல, மற்றவர்களுக்கு விரோதமான குற்றங்களையும் செய்யாமலிருப்பது அவசியம். பரிசுத்தமாய் வாழும் பலர் பிறருடைய குறைகளை பெரிதுபடுத்திப் பேசுவார்கள். பிறருடைய குற்றங்களை மற்றவர்களுக்கு விவரித்துப் பேசுவார்கள். குடும்பத்திற்குள்ளும் சமாதானமாய் இருக்கமாட்டார்கள். மனைவியிடம் எப்போதும் குற்றம் கண்டுபிடித்து சண்டை போடுவார்கள். கணவனை சந்தேகிப்பார்கள். கொடுக்கல் வாங்கலில் சரியாய் நடந்துகொள்ள மாட்டார்கள். எந்த விஷயத்திலும் குற்றமற்றவர்களாக நடக்க முயற்சிப்பது அவசியம்.

## பிள்ளையற்ற பெற்றோராயிருந்தனர் (லூக்.1:7)

இவ்வளவு பரிசுத்தமாய் வாழ்ந்த இவர்களுக்கு குழந்தை பாக்கியம் இல்லாதிருந்தது. இந்த நிலையிலுள்ள அநேகர் கர்த்தரை குறை கூறுவார்கள். ஆவிக்குரிய வாழ்வில் சோர்ந்து போவார்கள்.

## குழந்தையில்லாத பரிசுத்த பெற்றோரே!

சோர்ந்துபோகாமல் கர்த்தரைப் பற்றிக்கொள்ளுங்கள். கடவுளே இல்லை என்பவர்களுக்கும், கல்லையும், மரத்தையும் வணங்குபவர்களுக்கும்

கூட குழந்தை இருக்கின்றதே! கர்த்தர் நிச்சயம் குழந்தை பாக்கியத்தைத் தருவார்.

இப்படிப்பட்ட நிலையில் இருக்கும் பெண்ணை சிலர் மலடி என்று குறைகூறுவார்கள். குழந்தை இல்லாத கணவனைவிட மனைவிதான் அதிகம் பாதிக்கப்படுவாள். அநேகருடைய இழிச்சொல்லுக்கு ஆளாவாள். சில கணவர்மாரும் குழந்தை இல்லாத தற்கு தன் மனைவியை குறை கூறிப் பேசுவார்கள். அநேக சந்தர்ப்பங்களில் கணவனுடைய குறையி னால்தான் குழந்தை இல்லாமலிருக்கும்.

சில குடும்பங்களில் கணவனுடைய பெற்றோர் தங்கள் மகனுக்கு வேறு பெண்ணைத் திருமணம் செய்துவைக்க முயற்சிப்பார்கள். கணவன்மாரே குழந்தை இல்லாததற்காக உங்கள் மனைவியிடம் வெறுப்பைக் காட்டாதிருங்கள்.

## இருவரும் வயது சென்றவர்கள் (லூக்.1:7)

எத்தனையோ ஆண்டுகள் காத்திருந்தனர். ஆபிரகாமின் வாழ்க்கையை மனதில்கொண்டு எதிர்பார்ப்போடு வாழ்ந்திருக்கலாம். அல்லது குழந்தையைத் தர கர்த்தர் விரும்பவில்லை, பரவா யில்லை என்று கர்த்தர் சித்தத்திற்கு ஒப்படைத்து இருப்பதில் திருப்தியடைந்து வாழ்ந்திருக்கலாம்.

## சகரியா தொடர்ந்து தேவசந்நிதியில் ஊழியம் செய்துவந்தான்

ஆசாரிய வகுப்பைச் சேர்ந்த அவன் கர்த்தருக்கு ஊழியம் செய்துவந்தான். குழந்தை தராத ஆண்டவருக்கு ஊழியம் செய்து பயனென்ன என்று சோர்ந்துபோகவில்லை.

அருமை நண்பரே! உங்களுக்கு இன்று என்ன நடக்கிறது என்பதை வைத்து கர்த்தரை எடை போடக்கூடாது. வியாபார நோக்கத்தில் கர்த்தரை சேவிக்கக்கூடாது. நீங்கள் கர்த்தருக்கு ஊழியம் செய்வதும், கர்த்தருக்கு தாராளமாய் கொடுப்பதும் தொடரட்டும். மற்றவர்கள் என்ன சொன்னாலும் பரவாயில்லை. கர்த்தர் உண்மையுள்ளவர். உங்களை ஒருபோதும் மறக்கவே மாட்டார். அவர் வேளை என்ற ஒன்று உண்டு. அதில் அவர் தமது சித்தத்தை வெளிப்படுத்துவார்.

## சகரியா குழந்தைக்காக ஜெபிப்பதை நிறுத்தி விடவில்லை

**காபிரியேல் என்ற தூதன் சகரியாவிற்குத் தரிசனமாகி... உன் வேண்டுதல் கேட்கப்பட்டது (லூக். 1:13) என்றான்.**

அப்படியானால் சகரியா தொடர்ந்து ஜெபித்து வந்தான். பதில் கிடைக்கும்வரை ஜெபித்தான். எத்தனையோ ஆண்டுகள் ஜெபித்திருக்க வேண்டும். ஆலயத்தில் ஊழியம் செய்துவந்த நேரத்தில் தேவதூதன் தரிசனமாகி உனக்கு ஒரு குழந்தையைக் கர்த்தர் தருவார் என்ற நற்செய்தியை

அறிவித்தான். அதுமட்டுமல்ல அவனுக்கு என்ன பெயரிட வேண்டும் என்பதையும் (யோவான்) அறிவித்தான். பிறக்கப் போகும் யோவானின் வாழ்க்கை, ஊழியம் எப்படியிருக்கும் என்ற விளக்கமும் வெளிப்படுத்தப்பட்டது.

நமக்குப் பிறக்கும் ஒவ்வொரு பிள்ளைகளைப் பற்றியும் சரியான வெளிப்பாடு கிடைத்தால் எவ் வளவு நன்றாக இருக்கும்! பிள்ளைகளைப் பெற்று விட்டு பெயர் வைக்கப் படும்பாடு எவ்வளவு! இந்தப் பெற்றோருக்கு அந்தப் பிரச்சனையே இல்லை. இந்தக் குழந்தையைக் குறித்த சகல காரி யங்களும் பரலோகத்திலேயே திட்டமிடப்பட்டி ருந்தன! ஆமென்.

**சகரியாவின் அவிசுவாசம்**

இத்தனை ஆண்டுகளில் ஊக்கமாய் ஜெபித்து வந்த அவனுக்கு தேவதூதன் நேரில் வந்து சொல் லியும் நம்ப இயலாதவனாக இருந்தான். "நானும் என் மனைவியும் வயதானவர்களாக இருக்கின் றோமே, இதை நான் எதினால் அறிவேன்" என்று அடையாளம் கேட்டான். ஜெபித்தால் போதாது, விசுவாசத்துடன் ஜெபிக்க வேண்டும் என்பதற்கு சகரியா ஒரு உதாரணம். அவனுக்கு ஒரு அடை யாளம் கொடுக்கப்பட்டது. பிள்ளை பெறும்வரை நீ ஊமையாய் இருப்பாய் என்பதே அந்த அடை யாளம்.

வீட்டிற்குப் போய் மனைவியிடமும் சிலேட்டில் எழுதித்தான் காரியத்தை விவரித்திருப்பான். கர்த்தர் சொன்னபடியே எலிசபெத்து ஒரு மகனைப் பெற்றெடுத்தாள். என்ன பெயர் வைக்க வேண்டுமென்று சகரியாவிடம் கேட்டபோது எழுத்துப் பலகையில் "யோவான்" என்று எழுதினான். உடனே அவன் வாய் திறந்து பேசி, கர்த்தரைத் துதித்தான்.

அருமையான சகோதரனே, சகோதரியே! தொடர்ந்து ஜெபியுங்கள். பதில் கிடைக்கும்வரை ஜெபியுங்கள். தொடர்ந்து கர்த்தரை ஆராதியுங்கள். அவருக்கு ஊழியம் செய்யுங்கள். சந்தேகப்படாதிருங்கள். ஏற்ற காலத்தில் கர்த்தர் பதிலளிப்பார்.

**சகரியா - எலிசபெத்து குடும்ப வாழ்விலிருந்து கற்றுக்கொள்ளும் காரியங்கள்:**

- இருவரும் கர்த்தருக்குப் பிரியமான வாழ்வு வாழ்ந்தார்கள்.
- தங்களுக்குக் குழந்தை இல்லாத போதிலும் கர்த்தருக்குத் தொடர்ந்து ஊழியம் செய்து வந்தனர்.
- முதிர்வயதான போதிலும் குழந்தை வேண்டும் என்ற விண்ணப்பத்தை தொடர்ந்து ஏறெடுத்து வந்தனர்.

❊ குழந்தை கொடுக்கப்படும் என்ற நற்செய்தியை அறிவிக்கக் கர்த்தர் காபிரியேல் தூதனை இவனிடம் அனுப்பினது பெரிய சிலாக்கியம்.

❊ தாங்கள் ஜெபித்து வந்ததற்கு பதில் கிடைக்காத போது, அதை விசுவாசியாமலிருந்தது நமக்கு ஓர் எச்சரிப்பு.


❊ அவிசுவாசத்தின் தண்டனையாக ஊமையனானான்.

❊ அவன் அவிசுவாசித்த போதிலும் கர்த்தர் வாக்குப்பண்ணினதைக் கொடுத்தார்.

❊ மரியாளின் வாழ்த்துதலைக் கேட்டபோது எலிசபெத்தின் வயிற்றில் வளர்ந்துவந்த குழந்தை துள்ளிற்று. கர்ப்பத்திலிருக்கும்போதும் குழந்தை பரிசுத்த ஆவியானவரின் தொடுதலைப் பெற முடியும்.

❊ இயேசுவை உலகிற்கு அறிமுகம் செய்து வைக்கும் மகனைப் பெற்றாள்.

❊ எரிந்து பிரகாசிக்கும் விளக்காக விளங்கின மகன் அவன்.



# யோசேப்பு - மரியாள்

மிகவும் தனிச்சிறப்புப் பெற்ற குடும்பம் யோசேப்பு - மரியாள் குடும்பம்.

**யோசேப்பு**

இயேசுவைப் பெற்றெடுத்த தாயாகிய மரியாள் உலகமெல்லாம் போற்றப்படுகிறாள். ரோமன் கத்தோலிக்க சபையார் இயேசுவைவிட மரியாளை அதிகம் கனப்படுத்துகின்றனர். யோசேப்பு முக்கிய இடம் பெறுவதில்லை. ஆனால் யோசேப்பிடம் காணப்பட்ட நற்குணங்களை மறந்துவிடக்கூடாது.

**1. யோசேப்பு நீதிமான்** (மத்.1:19)

திருமணத்திற்கு ஆயத்தமாயிருந்த இந்த வாலிபனை பரிசுத்த வேதாகமம் நீதிமான் என்று சாட்சியிடுகிறது. இவர் வாலிப வயதிலே உண்மையும் நேர்மையுமாய் நடந்தவர். ஒழுக்கமுள்ளவர்.

இப்படிப்பட்ட சாட்சி பெறுவது ஒரு வாலிபனுக்கு எவ்வளவு பெருமை.

## 2. மரியாளை அவமானப்படுத்த விரும்பாதவர் (மத்.1:19)

உலக சரித்திரத்திலேயே மரியாளின் நிலை தனித்தன்மை வாய்ந்தது. மரியாள் பரிசுத்த கன்னிகையாய் வாழ்ந்தவள். காபிரியேல் தூதனை தேவன் மரியாளிடம் அனுப்பி...

**பரிசுத்த ஆவி உன்மேல் வரும்; உன்னதமானவருடைய பலம் உன்மேல் நிழலிடும். நீ கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாய்** என்ற செய்தியை அறிவித்தார் (லூக்.1:35,31).

உலகத்தில் இதற்கு முன்போ பின்போ ஏற்படாத ஒரு சிறப்பு அனுபவம் இது. இதன்படியே மரியாள் கர்ப்பமுற்றாள். இப்படிப்பட்ட நிலை ஏற்பட்டால் எந்த மணமகனும் ஏற்றுக்கொள்ள மாட்டான். குடும்பத்தாரிடமும் ஊராரிடமும் கூறி மணமகளை கேவலப்படுத்தி திருமணத்தை நிச்சயம் நிறுத்தி விடுவான். ஆனால் யோசேப்பு தங்கமான பண்பாளர். தனக்கென்று நியமிக்கப்பட்ட மரியாளை அவமானப்படுத்த விரும்பவில்லை. அமைதியான முறையில் அவளைத் தள்ளிவிட யோசித்தார்.

மனைவி செய்யும் சிறு தவறுகளையும் பெரிதுபடுத்திப் பேசுவோர் ஏராளமுண்டு. மனைவியை

சந்தேகித்து துன்பப்படுத்தும் கணவன்மார் உண்டு. மனைவி தவறு செய்யாதிருந்தும் தவறு செய்தது போல கற்பனை செய்துகொண்டு மனைவியையும் அவள் வீட்டாரையும் கேவலப்படுத்துவோர் பலர் உண்டு.

### 3. யோசேப்பு தேவ வெளிப்பாடு பெற்றான் (மத்.1:20)

கர்த்தருடைய தூதன் சொப்பனத்திலே யோசேப்பிற்கு வெளிப்பட்டு மரியாளை சந்தேகிக்க வேண்டாம். "**அவளிடத்தில் உற்பத்தியாயிருக்கிறது பரிசுத்த ஆவியானவரால் உண்டானது**" என்ற வெளிப்பாட்டைப் பெற்றான். திருமணத்திற்கு ஆயத்தமாகும் வாலிபர்கள் யாவரும் தங்கள் வாழ்க்கையைக் குறித்து வெளிப்பாடு உடையவர்களாய் இருப்பது மிக அவசியம்.

### 4. கர்ப்பமுற்றிருந்த மரியாளை யோசேப்பு திருமணம் செய்தார் (மத்.1:24)

தேவ வெளிப்பாடு பெற்ற யோசேப்பு மரியாளை அன்புடன் மணந்து கொண்டார். தன் மனைவியின் நிலையை நன்கு விளங்கிக் கொண்டார். யோசேப்பின் பெருந்தன்மை பாராட்டுக்குரியது.

### 5. பல மாதங்கள் மரியாளுடன் சரீர உறவு வைத்துக் கொள்ளவில்லை (மத்.1:25)

திருமணமான எந்த வாலிபனும் இப்படிப்பட்ட தியாகம் செய்ய எதிர்பார்க்க முடியாது. யோசேப்பு நல்ல கட்டுப்பாடோடிருந்த வாலிபன். மரியாள் இயேசுவை பெற்றெடுக்கும்வரை அவளை நெருங்கவில்லை. இது யோசேப்பிடம் காணப்பட்ட சிறந்த பண்பு. மனைவியின் நிலை அறியாமல் சில கணவன்மார் சுயநலமுள்ளவர்களாயிருப்பதால் கணவன் மனைவிக்கிடையே பிரச்சனைகள் உருவாகின்றன.

மரியாள் வாழ்நாள் முழுவதும் கன்னிகையாகவே வாழ்ந்தாள் என்று ரோமன் கத்தோலிக்க நண்பர்கள் கூறுவார்கள். இது உண்மையல்ல என்று வேதம் தெளிவாகக் கூறுகிறது.

> அவள் தன் முதற்பேறான குமாரனைப் பெறுமளவும் அவளை அறியாதிருந்தான் (மத்தேயு 1:25).

இயேசு முதற்பேறான குமாரன். அதாவது முதல் பிள்ளை என்று கூறப்பட்டுள்ளது. ஒரே பிள்ளை அல்ல. முதல் பிள்ளை. அப்படியானால் அதற்குப் பின் மரியாளுக்கும் யோசேப்பிற்கும் பிள்ளைகள் பிறந்தார்கள் என அறிகிறோம்.

முதல் குழந்தை பெறுமளவும் அவளை அறியவில்லை. அதாவது அவளுடன் உறவு வைத்துக் கொள்ளவில்லை. எனவே இயேசு பிறந்தபின் மரியாளும் யோசேப்பும் கணவன் மனைவியாக உறவு கொண்டார்கள் என அறிகிறோம். இயேசு

தாம் வளர்ந்த ஊராகிய நாசரேத்துக்கு வந்து பிரசங்கித்தபோது அவர்மூலமாய் நடந்த அற்புத அடையாளங்களையும் கண்டு ஆச்சரியப்பட்ட அந்த ஊரார்...

> **இவன் தச்சன் அல்லவா? மரியாளுடைய குமாரன் அல்லவா? யாக்கோபு, யோசே, யூதா, சீமோன் என்பவர்களுக்குச் சகோதரன் அல்லவா? இவன் சகோதரிகளும் இங்கே நம்மிடத்தில் இருக்கிறார்கள் அல்லவா? என்று சொல்லி அவரைக் குறித்து இடறலடைந்தார்கள்** (மாற்கு 6:3).

இந்த வசனங்களின் அடிப்படையில் மரியாளுக்கும் யோசேப்பிற்கும் பல பிள்ளைகள் இருந்தார்கள் என அறிகிறோம்.

## மரியாள்

உலகில் வந்த எந்தப் பெண்ணையும்விட மிக சிறப்புப் பெற்றவள் மரியாள். மரியாளைப்போல உண்மையுள்ள கன்னியர் அன்றும் இருந்தார்கள். இன்றும் இருக்கிறார்கள். ஆனால் மரியாளுக்குக் கர்த்தருடைய கண்களில் கிருபை கிடைத்ததால் இயேசுவைப் பெற்றெடுக்கும் சிலாக்கியம் பெற்றாள்.

### 1. திருமணத்திற்கு முன்பே கர்ப்பமுற்று பல சந்தேகங்கள், வசைச்சொல்லுக்கு ஆளானவள்

பரிசுத்தமாய் வாழ்ந்த மரியாளுக்குக் கிடைத்த சிலாக்கியம் தனிச்சிறப்பு வாய்ந்தது. உலக இரட்சகராகிய இயேசுகிறிஸ்துவை பெற்றெடுக்கும்

சிலாக்கியம் பெற்றாள். ஆனால் பரிசுத்த ஆவி யானவர்மூலம் கர்ப்பமுறும் நிலையை ஏற்றுக் கொண்டது எளிதானதல்ல.

பொதுவாக ஒரு பெண் திருமணத்திற்கு முன் கர்ப்பமுற்றால் தவறான நடத்தையின்மூலம் ஏற் பட்டது என்பதை யாவரும் அறிவர். அந்த இழிச் சொல்லை, சந்தேகத்துடன் பேசப்பட்ட பேச்சைக் கேட்க வேண்டிய நிர்ப்பந்த நிலை அவளுக்கு உண்டாயிற்று. தன்னை திருமணம் செய்ய இருக்கும் யோசேப்பு என்ன நினைப்பார், அவருக்கு இதை விளக்கிச் சொன்னால் புரிந்துகொள்வாரா போன்ற பல எண்ணங்கள் அவளுக்குத் தோன்றி இருக்கும்.

**2. உலக இரட்சகரைப் பெற்றெடுக்கப் போகி றோம் என்ற எண்ணத்தில் தனக்கு திருமணம் வேண்டாம் என்றும் சொல்லவில்லை.**

இயேசுவைப் பெற்றெடுக்கும் சிலாக்கியம் பெற்ற அவள் ஒரு குடும்பப் பெண்ணாக இருக் கவே விரும்பினாள். தனக்கு நியமிக்கப்பட்ட யோசேப்பை அலட்சியப்படுத்தவில்லை. சில பெண்களுக்கு சில சிலாக்கியங்களும், கிருபை களும், வரங்களும் கிடைத்துவிட்டால் திருமணமே வேண்டாம் என்பார்கள், அல்லது கணவனை மதிக்க மாட்டார்கள். மரியாள் நல்ல அடக்கமுடை யவளாக இருந்தாள்.

### 3. இயேசுவைப் பெற்றெடுத்தபின் யோசேப் பிற்கு நல்ல மனைவியாக வாழ்ந்து பிள்ளை களைப் பெற்றெடுத்தாள்


உலக இரட்சகரையே பெற்று விட்டோமே. இனி யோசேப்புடன் என்ன உறவு, இனி எதற்குக் குழந் தைகள் என்று பிரதிஷ்டை ஒன்றும் செய்யவில்லை. தன் கணவனுக்கு நல்ல மனைவியாக இருந்தாள். பல பிள்ளைகளைப் பெற்றெடுத்து நல்ல தாயாக இருந்து அவர்களை வளர்த்தாள்.

---

**யோசேப்பு - மரியாளின் குடும்பத்திலிருந்து கற்றுக் கொள்ளும் காரியங்கள்:**

- நீதிமான் என்று பெயர் பெற்றவன் யோசேப்பு
- தனக்கு நியமிக்கப்பட்ட பெண் கர்ப்பமுற்றிருக் கிறாள் என்று கேள்விப்பட்டும் அவளை அவமா னப்படுத்த விரும்பாமலிருந்த பண்பாளன் இவன்.
- மரியாளின் உண்மை நிலையைக் குறித்து தேவ வெளிப்பாடு பெற்றான்.
- பலர் பலவிதமாகப் பேசின போதிலும் மரியாளை மனமுவந்து மணந்தான்.
- அவள் இயேசுவை பெற்றெடுக்கும்வரை அவளுடன் எந்த தொடர்பும் வைக்காத நல்ல அடக்கமுள்ளவனாக இருந்தான்.

* திருமணத்திற்கு முன்பே தேவ பெலத்தால் கர்ப்பமுற்று பல சந்தேகங்களுக்கு ஆளானவள் மரியாள்.
* தேவகுமாரனைப் பெற்றெடுக்கப் போவதால் யோசேப்பு வேண்டாம் என்று கணவனை ஒதுக்கவில்லை.
* இயேசுவைப் பெற்றெடுத்த பின்பு நல்ல மனைவியாக இருந்து ப்ல பிள்ளைகளைப் பெற்றெடுத்த தாயாக விளங்கினாள்.
* இயேசு தன்னுடன் வருகிறார் என்று யூகித்து அவரை எருசலேமில் விட்டுவிட்டு பின்பு தேடி அலைந்தது நமக்கு ஓர் எச்சரிப்பு.
* உலக இரட்சகரைப் பெற்றெடுத்து வளர்த்த பெருமைக்குரிய பெண்மணி மரியாள்.



# அனனியா - சப்பீராள்

அனனியா சப்பீராள் குடும்பத்திலிருந்து பல எச்சரிப்புக்களைக் கற்றுக்கொள்ளுகிறோம். இவர் களுடைய குடும்பப் பின்னணியத்தைக் குறித்து அதிகம் கூறப்படவில்லை.

## கர்த்தருக்கு கொடுக்க தங்கள் சொத்து களை விற்றார்கள்

இந்தக் குடும்பத்தைக் குறித்துப் பிரசங்கிப் போர் இவர்களின் குற்றங்களை சுட்டிக்காட்டுவது தான் வழக்கம். ஆனால் இவர்களின் ஆரம்பம் நன்றாகத்தான் இருந்தது. ஒரு சபையில் கர்த்த ருக்காகத் தாராளமாய் கொடுப்பவர்களை விரல் விட்டு எண்ணிவிடலாம். 100 விசுவாசிகள் உள்ள சபையில் ஒழுங்காக தசமபாகம் (வருமானத்தில் பத்தில் ஒன்று) கொடுப்பவர்கள் பத்துப் பேர் இருந்

தால் அது பெரிய காரியமாகத் தோன்றும். பெரும் பாலான விசுவாசிகள் தங்களால் இயன்றதைக் கொடுப்பார்கள் அவ்வளவுதான்.

100 விசுவாசிகளுள்ள சபையில் சபையின் தேவைகளுக்காக தங்கள் ஆஸ்தியை விற்றுக் கொடுப்பவர்கள் எத்தனைபேர் இருப்பார்கள்? ஆயிரம் பேரில் ஒருவர் இருக்கலாம் என்றுதான் நிதானிக்க முடியும். அனனியா, சப்பீராள் கர்த்தருக் காக கொடுக்க தங்கள் காணியாட்சியை விற்றார்கள். எனவே இந்த விஷயத்தில் இவர்கள் பாராட்டப் பட வேண்டியவர்களே.

## விற்றதில் ஒரு பங்கை சபைக்குக் கொடுத் தனர்

கர்த்தருடைய சேவைக்காக கொடுக்க முன் வந்ததும் நல்ல செயலே. இன்று சபைக்கு வருபவர் களில் பலர் எந்த ஊழியத்திற்கும் கொடுக்காமல் இருப்பதைப் பார்க்கிறோம். இவர்கள் தங்கள் சொத் தை விற்று ஒரு பங்கை கர்த்தருக்குக் கொடுத் தார்கள்.

## அப்போஸ்தலருடைய பாதத்திலே வைத் தான்

சபைக்கு ஒரு விளக்கு வாங்கிக் கொடுத்தாலும் தங்களுக்குப் பெயர் வரவேண்டும் என்று எண்ணி தங்கள் பெயரை அதில் எழுதிக் கொடுப்பவர்கள் பலருண்டு. ஆனால் அனனியா தன் பணத்தை

அப்போஸ்தலருடைய பாதத்திலே வைத்தது அவனுடைய தாழ்மையை, பணிவைக் காட்டுகிறது.

## இவர்களிடம் ஏற்பட்ட பிரச்சனைகள் என்ன!

கர்த்தருக்கு எல்லாம் கொடுத்துவிடுவோம் என்று பொருத்தனை பண்ணி அதை மீறி இருக்கிறார்கள்.

### பொருத்தனையைக் குறித்து வேதம் கூறுவதென்ன?

**மோசே இஸ்ரவேல் புத்திரருடைய கோத்திரங்களின் தலைவரை நோக்கி: கர்த்தர் கட்டளையிடுவது என்னவென்றால்:**

**ஒருவன் கர்த்தருக்கு யாதொரு பொருத்தனை பண்ணினாலும், அல்லது யாதொரு காரியத்தைச் செய்யும்படி ஆணையிட்டுத் தன் ஆத்துமாவை நிபந்தனைக்குட்படுத்திக் கொண்டாலும், அவன் சொல்தவறாமல் தன் வாயிலிருந்து புறப்பட்ட வாக்கின்படியெல்லாம் செய்யக்கடவன்** (எண்.30:1,2).

பொருத்தனை பண்ணியபடி செய்ய வேண்டும் எனப் பார்க்கிறோம்.

**நீ உன் தேவனாகிய கர்த்தருக்குப் பொருத்தனை பண்ணியிருந்தால், அதைச் செலுத்தத் தாமதஞ் செய்யாதே; உன் தேவனாகிய கர்த்தர் அதை நிச்சயமாய் உன் கையில் கேட்பார்; அது உனக்குப் பாவமாகும்.**

**நீ பொருத்தனைப் பண்ணாதிருந்தால், உன் மேல் பாவமில்லை** (உபாகமம் 23:21,22).

பொருத்தனை பண்ணியதை செலுத்த தாமதிக்கக் கூடாது. "பொருத்தனை பண்ணியதை செலுத்தாவிட்டால் அது பாவமாகும்" என்று கூறப்பட்டுள்ளது.

> **பரிசுத்தமானதை விழுங்குகிறதும், பொருத்தனை செய்தபின்பு யோசிக்கிறதும், மனுஷனுக்குக் கண்ணியாயிருக்கும்** (நீதி.20:25).

பொருத்தனை செய்த பின்பு வேறு யோசனை செய்வது கண்ணியாக அமையும் என்ற எச்சரிப்பைப் பார்க்கிறோம்.

> **நீ தேவனுக்கு ஒரு பொருத்தனை பண்ணிக்கொண்டால், அதைச் செலுத்தத் தாமதியாதே; அவர் மூடரில் பிரியப்படுகிறதில்லை; நீ நேர்ந்து கொண்டதைச் செய்.**
>
> **நீ நேர்ந்து கொண்டதைச் செய்யாமற் போவதைப் பார்க்கிலும், நேர்ந்து கொள்ளாதிருப்பதே நலம்** (பிரசங்கி 5:4,5).

**கிரயத்தில் ஒரு பங்கை வஞ்சித்து வைத்தனர்**

அனனியாவும் சப்பீராளும் முழுவதும் கொடுக்கப் பொருத்தனை பண்ணியபின்பு மறு யோசனை செய்தார்கள். நமக்கு ஆத்திரம் அவசரம் வந்தால் யாரிடம் போவது, எனவே கொஞ்சம் நமக்காக வைத்துக்கொள்வோம் என்று திட்டமிட்டனர்.

**தேவ சமூகத்தில் அனனியா பொய் சொன்னான்**

நிலத்தின் கிரயம் மொத்தமே இவ்வளவுதான் என்று பொய் சொன்னான். நாங்கள் விற்றது

இவ்வளவிற்கு, எங்களுக்கென்று எடுத்துக் கொண்டது இவ்வளவு, மீதி இவ்வளவு என்று சொல்லி இருக்க வேண்டும். பொருத்தனை பண்ணியபின் மறுபரிசீலனை செய்தது ஒரு பாவம். தேவ சமூகத்தில் பொய் சொன்னது மற்றொரு பாவம். அனனியா அந்த இடத்திலேயே விழுந்து மரித்தான்.

## சப்பீராள்

இவளிடம் காணப்பட்ட குறையென்ன?

**1. ஒரு பங்கை வஞ்சித்து வைக்க இவளும் கணவனுடன் ஒத்துப்போனாள்**

தன் கணவன் செய்த தவறை இவள் சுட்டிக் காட்டி அவனைத் திருத்தி இருக்க வேண்டும். அநேக குடும்பங்களில் இன்று ஆசீர்வாதம் நிலைத்திருக்கக் காரணம் அந்த வீட்டின் தலைவியே என்று எனக்குத் தெரியும். கணவன்மார் போடும் தப்புக் கணக்குகளுக்கு உடன்படாததால் அடியும் உதையும் வாங்கினாலும் தன் கணவன் செய்யும் தவறைச் சுட்டிக்காட்டி அவனைத் திருத்தியதால் இன்று அந்த குடும்பங்கள் அழிவினின்று காக்கப்பட்டுள்ளன.

**2. சப்பீராள் தேவசமூகத்தில் பொய் சொன்னாள்**

நிலத்தை இவ்வளவிற்குத்தானா விற்றீர்கள் என்று பேதுரு கேட்டபோது துணிகரமாய் ஆம், இவ்வளவிற்குத்தான் விற்றோம் என்று பொய் சொன்னாள். அந்த இடத்திலேயே அவளுக்கும் மரணம் ஏற்பட்டது.

**3. வீட்டில் சேர்த்து வைத்த பணம் அடக்கத்திற்கும் உதவவில்லை**

எதிர்காலத்திற்கு உதவும் என்று எண்ணி வஞ்சித்து வைத்த பணம் இவர்கள் இருவருடைய அடக்கத்திற்குக்கூட உதவவில்லை.

## உங்கள் உள்ளத்தில் எழும்பும் கேள்விகளுக்குப் பதில்கள்:

1) எந்தப் பொருளை விற்றாலும் எல்லாவற்றையும் கர்த்தருக்கே கொடுக்க வேண்டுமா?

அவசியமில்லை. ஒரு பொருளை விற்கும் போது, ஆண்டவரே இதில் பத்தில் ஒன்றைத் தரப் பொருத்தனை பண்ணுகிறேன் என்று தீர்மானித்தால் அதை மட்டுமே கொடுத்தால் போதும். எதைப் பொருத்தனை பண்ணினோமோ அதைக் கொடுக்கக் கர்த்தர் எதிர்பார்க்கிறார்.

2) எதைக் கொடுத்தாலும் பொருத்தனை பண்ணித்தான் கொடுக்க வேண்டுமா?

பொருத்தனை பண்ணுவது அவரவரைப் பொருத்தது. நீங்கள் பொருத்தனை பண்ணவேண்டிய நிர்ப்பந்தம் ஒன்றுமில்லை.

கணவனும் மனைவியும் ஒற்றுமையாய் ஒரு மனதுடன் செயல்படுவது நல்லதுதான். ஆனால் கர்த்தரை வஞ்சிக்கிற விஷயத்தில் ஒருமனப்பட்டது அவர்கள் இருவருக்கும் சாபத்தைக் கொண்டு வந்தது.

## கணவன், மனைவியரே!


அன்று சபையில் பரிசுத்த ஆவியானவர் வல்லமையாய் கிரியை செய்யக்கூடிய அளவில் சபை ஜெபத்தில் உறுதியாயிருந்தபடியால் தவறு செய்தவர்கள் உடனே தண்டிக்கப்பட்டனர். இன்று இதை விட அதிகமாய் கர்த்தரை வஞ்சிக்கிறவர்கள் சபைகளில் உள்ளனர். ஆனாலும் இவ்விதத் தண்டனையை உடனே பெறுவதில்லை. சபையில் தேவ சமூகம் பிரசன்னமாயிருக்கும்போது அற்புதங்கள் அதிகம் நடைபெறும். பாவிகள் மனந்திரும்புவார்கள். துணிகரமாய் பாவம் செய்கின்றவர்கள் தண்டிக்கப்படுவார்கள்.

நீங்கள் நல்ல காரியத்திற்கு ஒருமனப்படுங்கள். ஞானஸ்நானம் எடுப்பதில், கர்த்தருக்குக் கொடுப்பதில், ஊழியத்திற்கு ஒப்புக்கொடுப்பதில் சபைக் காரியங்களில் ஒத்துழைப்பதில் ஒருமனப்படுங்கள்.

கணவன் தவறு செய்யும்போது அந்தத் தவறுக்கு மனைவி ஒத்துப்போகக்கூடாது. அன்புடன் கண்டித்து கணவனை அல்லது மனைவியைத் திருத்த வேண்டும். இல்லாவிடில் தண்டனை நிச்சயம்.

**அனனியா - சப்பீராள் குடும்பத்திலிருந்து கற்றுக் கொள்ளும் காரியங்கள்:**

- கர்த்தருக்குக் கொடுக்க சொத்துகளை விற்றது அவர்களின் கொடையுள்ளத்தைக் காட்டுகிறது.
- விற்றதில் ஒரு பங்கை கொடுத்ததும் நற்செயலே
- காணிக்கையை அப்போஸ்தலருடைய பாதத்தில் கொண்டுபோய் வைத்தது அவர்களின் பணிவைக் காட்டுகிறது.
- எல்லாம் கொடுப்போம் என்று பொருத்தனை பண்ணினது நல்ல காரியமே.
- பொருத்தனையை நிறைவேற்றாமல் போனது நமக்கு ஓர் எச்சரிப்பு.
- அப்போஸ்தலரிடம் பொய் சொன்னது தண்டனைக்குரியதாயிற்று.
- கணவனும் மனைவியும் பொய் சொல்ல ஒரு மனப்பட்டது ஓர் எச்சரிப்பு.
- இருவரும் ஒரே நாளில் அகால மரணமடைந்தது அடுத்த எச்சரிப்பு.
- சபைக்கு ஒரு தவறான குடும்பமாய் விளங்கினது வேதனை.
- எதிர்கலத்திற்கென்று வீட்டில் ஒழித்துவைத்தது தங்கள் அடக்கத்திற்குக்கூட பயன்படவில்லை.



# ஆக்கில்லா - பிரிஸ்கில்லாள்

ஆக்கில்லா யூதக் குடும்பத்தைச் சேர்ந்தவன். பொந்து தேசத்தான் என்று அழைக்கப்படுகிறான் (1 கொரி.18:2). பொந்து என்பது அன்று சிறிய ஆசியா என்று அழைக்கப்பட்ட (தற்கால துருக்கி தேசத்திற்கு சமீபமான இடம்) தேசத்தின் வட பகுதி. இந்த வட்டாரத்தில் ஏராளமான யூதர்கள் வாசம் பண்ணினர். அப்போஸ்தலர் 2ம் அதிகாரத்தில் பெந்தெகொஸ்தே பண்டிகைக்காக எருசலேமில் கூடியிருந்த யூதர்களில் ஏராளமானோர் பொந்து தேசத்திலிருந்தும் வந்திருந்தார்கள் என்று அப்.2:9ல் பார்க்கின்றோம்.

'ஆக்கில்லா' என்றால் 'கழுகு' என்று பொருள். 'பிரிஸ்கில்லாள்' என்ற வார்த்தைக்கு 'சற்று பழமையானது' என்று பொருள். கழுகு வேகமானது. அதிக

கூர்மையான பார்வையுடையது. அப்படிப்பட்ட கணவனுக்கு சற்று பழமையானவள், வேகம் குறைந்தவள் மனைவியானாள். அதனாலென்ன? இவர்கள் இருவரும் மிக ஆசீர்வாதமான குடும்பம் நடத்தினர்.

யூதர்களெல்லாம் ரோம் நகரத்தைவிட்டு போக வேண்டுமென்று கிளாடியஸ் (கிலவுதியுராயன்) என்ற ரோம பேரரசன் கட்டளையிட்டான். ஆக்கில்லா பிரிஸ்கில்லாள் குடும்பம் பொந்து தேசத்திலிருந்து ரோமாபுரியில் குடியிருந்தனர். இவர்கள் இந்தக் கட்டளைப்படி இத்தாலி நாட்டைவிட்டு கிரேக்க நாட்டிற்கு வந்து அந்த நாட்டில் மிக சிறப்பான நகரமாக இருந்த கொரிந்துவிற்கு வந்து குடியேறினர். பவுல் இவர்களை சந்திக்க வாய்ப்புக் கிடைத்தது. அதுமட்டுமல்ல, அவர்களுடன் தங்கவும் ஏற்பாடாயிற்று.

## அப்போஸ்தலனை உபசரித்த அன்பான குடும்பம்

ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாளும் நாடுவிட்டு அந்நிய நாட்டிற்கு வந்தவர்கள். இந்த சூழ்நிலையில் இன்னொரு நபரை வீட்டில் தங்கவைத்து பராமரிப்பது பிரச்சனையானது என்று எண்ணாமல் அன்புடன் பவுலை தங்கள் வீட்டில் ஏற்றுக்கொண்டனர். இவர்கள் கூடாரம் பண்ணுகிற தொழிலாளிகள். யூதச் சிறுவர்களுக்கு ஒரு கைத்தொழிலை

கற்றுக்கொடுப்பது அக்கால வழக்கம். எவ்வளவு செல்வந்தர்களாக இருந்தாலும் தங்கள் பிள்ளை களுக்கு ஒரு கைத்தொழிலைக் கற்றுக்கொடுப்பது யூத வழக்கமாக இருந்தது. பவுல் ஒரு செல்வந்தர் குடும்பத்தில் பிறந்து வளர்ந்தவர். உயரிய கல்வி கற்றவர். ஆனாலும் கூடாரம் பண்ணுகிற தொழி லைக் கற்றிருந்தார்.

ஒரு தொழில் செய்து அதன்மூலம் வரும் பணத்தை வைத்து குடும்பம் நடத்திக்கொண்டு ஊழியம் செய்வது தவறானதல்ல. பவுல் அவ்விதம் செய்து வந்தார்.

ஆக்கில்லாவும் அவன் மனைவியும் நற்செய்தி யைக் கேட்கவும் இயேசுவின் சீடர்களாக மாறவும் பவுல் அவர்கள் வீட்டில் தங்கினது உதவி செய்தது. கர்த்தருடைய ஊழியக்காரர்களை கனப்படுத்தும் குடும்பங்களை கர்த்தர் நிச்சயம் ஆசீர்வதிப்பார்.

**உடன் ஊழியராக பணியாற்றின குடும்பம்**

பவுல் கொரிந்து பட்டணத்தைவிட்டு எபேசு பட்டணத்திற்குப் புறப்பட்டபோது ஆக்கில்லா குடும்பமும் அவனுடன் புறப்பட்டனர். இது ஆச்சரி யமானது. கொஞ்ச நாட்களுக்கு முன்புதான் இத்தாலி நாட்டைவிட்டு கிரேக்க நாட்டிற்கு வந்தி ருந்தனர். இப்போது சீரியா நாட்டிற்கு புறப்பட்டு விட்டனர். பவுலின் உடன் ஊழியர்களாக மாறினது மட்டுமல்ல, எந்த ஊருக்கும் போக ஆயத்தமாகி

விட்டனர். ஆக்கில்லா குடும்பம் எபேசு பட்டணத்தில் வந்து தங்கி ஊழியம் செய்ய ஆரம்பித்தனர். பவுல் அவர்களைவிட்டுப் பிரிந்து சென்றுவிட்டார்.

## பிறரை ஆழ்ந்த ஆவிக்குரிய அனுபவத்திற்குள் வழிநடத்தின குடும்பம்

எபேசு பட்டணத்தில் அப்பொல்லோ என்பவன் யூத ஜெப ஆலயத்தில் தேவசெய்தி கொடுத்த கூட்டத்தில் ஆக்கில்லா குடும்பம் கலந்துகொண்டது. அப்பொல்லோ திறமையானவன், வசனம் நன்கு தெரிந்தவன். ஓரளவு இயேசுகிறிஸ்துவின் சத்தியங்களை அறிந்தவன். தான் அறிந்த சத்தியங்களை தைரியமாக பிரசங்கித்தவன். ஆக்கில்லா குடும்பம் அவனுடன் நட்பு வைத்துக்கொண்டு ஆழமான கிறிஸ்தவ சத்தியங்களை அவனுக்குப் போதித்து அவனை ஒரு நல்ல ஊழியக்காரனாக உருவாக்கினர்.

இப்படிப்பட்ட குடும்பங்கள் சபைகளில் இருந்தால் எவ்வளவு ஆசீர்வாதமாக இருக்கும்? இதை வாசிக்கும் நீங்கள் ஊழியர்களை உருவாக்கும் குடும்பங்களாக மாற ஜெபிக்கிறேன். முதலாவது நீங்கள் நல்ல போதனை பெற்றவர்களாக இருக்க வேண்டும். பின்பு பிறரையும் ஆழமான சத்தியங்களுக்குள் வழிநடத்தும் மக்களாக இருங்கள்.

## ஊழியரைக் காப்பாற்ற உயிரையும் கொடுக்க ஆயத்தமாயிருந்தவர்கள்

**கிறிஸ்து இயேசுவுக்குள் என் உடன் வேலையாட்களாகிய பிரிஸ்கில்லாளையும் ஆக்கில்லாவையும் வாழ்த்துங்கள்; அவர்கள் என் பிராணனுக்காக தங்கள் கழுத்தைக் கொடுத்தவர்கள்** (ரோமர் 16:3,4).

உங்கள் குடும்பத்தைப் பற்றிய சாட்சி என்ன? சில குடும்பங்கள் எப்போதும் சபைக்கும், ஊழியருக்கும் விரோதமாகப் பேசிக் கொண்டிருப்பார்கள். தாங்கள் மட்டுமே பரிசுத்தவான்கள்போலவும், சபையும், ஊழியரும், மற்றவர்களும் பரிசுத்தம் குறைந்தவர்கள்போலவும் பேசுவார்கள். ஊழியரிடத்தில் ஒரு சிறுகுறை கண்டாலும் ஊரைக்கூட்டி கேவலப்படுத்த அஞ்சமாட்டார்கள். ஆக்கில்லா குடும்பம் ஊழியரைக் காப்பாற்றுவதற்காக தங்கள் உயிரையும் கொடுக்க ஆயத்தமாயிருந்தார்கள்.

## பல சபைகள் பாராட்டின குடும்பம்

**...அவர்களைப் பற்றி நான் மாத்திரமல்ல புறஜாதியாரில் உண்டான சபைகளெல்லாரும் நன்றியறிதலுள்ளவர்களாயிருக்கிறார்கள்** (ரோமர் 16:4).

ஒரு ஊழியர் பிரசங்கத்தில் தவறுதலாகக் குறிப்பிட்ட ஒரு வாக்கியத்தைப் பிடித்துக்கொண்டு சபையையே இரண்டாகப் பிரித்துவிட்ட குடும்பம் ஒன்று எனக்குத் தெரியும். அவர்களை நான் இது வரை நேரில் கண்டு பேசினதில்லை. ஆனால் அவர்கள் செய்த செயல் ஊரிலுள்ள சபைகளெல்லாம் அறியக்கூடிய அளவில் பேசப்பட்டது.

இப்பொழுது அந்தக் குடும்பமே பிரிந்த சபை யாருக்கு போதக ஊழியம் செய்து வருகின்றனர். போதகருக்காக உயிரைக் கொடுக்கிற குடும்பங் களும் உண்டு; போதகர் உயிரை வாங்குகிற குடும் பங்களும் உண்டு. ஆக்கில்லா குடும்பம் அநேக சபைகளுக்கு உதவி செய்த ஆசீர்வாதக் குடும்பம்.

## சபையை நடத்தும் அளவிற்கு உயர்த்தப் பட்ட குடும்பம்

அவர்கள் வீட்டில் ஒரு சபை நடந்து வந்தது என 1 கொரி.16:9 வசனத்தின்மூலம் அறிகிறோம். ஆதிநாட்களில் சபைகள் யாவும் வீடுகளிலேயே இயங்கிவந்தன. ஊழியருக்கும், பல சபைகளுக்கும் உதவியாயிருந்த குடும்பத்தைக் கர்த்தர் ஆசீர் வதித்து அவர்களை சபை மேய்ப்பர் நிலைக்கு உயர்த்தினார்.

சாட்சியில்லாத, எந்தப் போதகருக்கும் அடங் காத சிலர் தங்கள் வீடுகளில் ஆராதனைகள் நடத்து வதுண்டு. இவர்கள் ஆத்தும ஆதாயத்திற்காக சபை நடத்தவில்லை. தாங்கள் யாருக்கும் கீழ்ப்பட்டி ருக்க விரும்பாததாலும் தங்களுக்குப் பெயர் உண்டாக்குவதற்காகவும் சபை நடத்துவார்கள்.

ஆக்கில்லா குடும்பம் அப்படிப்பட்டதல்ல, அப்போஸ்தலராலும், ஊழியர்களாலும், சபையா ராலும் நற்சாட்சி பெற்று உயர்ந்தவர்கள்.

நீங்கள் என்ன வேலை செய்து வந்தாலும் சபைகளில்லாத கிராமங்களில், பட்டணங்களில் வீட்டுச் சபைகளை ஆரம்பிக்கக் கர்த்தர் உதவி செய்வாராக. குடும்பமாகச் சென்று ஊழியம் செய் யுங்கள். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

**ஆக்கில்லா - பிரிஸ்கில்லாள் குடும்பத்திலிருந்து கற்றுக்கொள்ளும் காரியங்கள்:**

- அந்நிய நாட்டிற்கு வந்தபோதிலும் தேவ ஊழி யரை தங்கள் வீட்டில் ஏற்று பராமரித்த அன்பான குடும்பம்.
- கூடாரம் செய்து விற்றுவந்த கடின உழைப் புள்ள குடும்பம்.
- யூதராயிருந்த போதிலும் பவுல்மூலம் சத்தி யத்தை அறிந்து அதை ஏற்றுக்கொண்டனர்.
- பவுலுடன் எபேசு பட்டணத்திற்கு உடன் ஊழியராகப் புறப்பட்ட குடும்பம்.
- அப்பொல்லோ என்ற ஆர்வமுள்ள வாலிபனை அழைத்துச்சென்று பூரண சத்தியத்திற்குள் வழி நடத்தினர். ஊழியர்களை உருவாக்கின குடும்பம்.
- ஊழியருக்காக தங்கள் உயிரையும் கொடுக்க முன்வந்த தியாகிகள்.

❊ அப்போஸ்தலரால் பாராட்டப்பட்ட குடும்பம்.

❊ புறஜாதியார் மத்தியில் உண்டான சபையார் யாவரும் இவர்கள் நற்செயல்களுக்கு நன்றி தெரிவித்தனர்.

❊ இவர்களைப் பற்றி குறிப்பிட்ட எல்லா இடங்களிலும் இருவரின் பெயரும் தவறாமல் குறிப்பிடப்பட்டுள்ளது மிக பாராட்டுதலுக்குரியது.

❊ தங்கள் வீட்டில் சபையை நடத்தி வளரச் செய்த சாட்சியுள்ள குடும்பம்.

## இந்தப் புத்தகத்தில்

எக்ளிசியா பத்திரிக்கையில் வேதாகம குடும்பங்கள் என்ற தலைப்பில் வெளிவந்த செய்திகள் புத்தகமாக உருவாகி உள்ளது. பரிசுத்த வேதாகமத்தில் கூறப்பட்டுள்ள 17 குடும்பங்களைக் குறித்த சுருக்கமான செய்திகள் இதில் இடம் பெற்றுள்ளன. இந்த குடும்பங்களிலிருந்து நாம் கற்றுக் கொள்ளவேண்டிய பாடங்கள் இருக்கின்றன. எச்சரிப்பாய் இருந்து நாம் விலகி வாழ வேண்டிய காரியங்களும் உண்டு. உங்கள் குடும்ப வாழ்விற்கு பயனுள்ள பல ஆலோசனைகள் இதில் இடம்பெற்றுள்ளன.

சபைப்போதகர்களும், வீட்டுக் கூட்டம் நடத்தும் மூப்பர்களும் வேதாகம குடும்பங்களைக் குறித்து வேத பாடம் நடத்தவும், தியானக் கூட்டங்களில் செய்தி கொடுக்கவும் இந்த புத்தகம் மிக பயனுள்ளதாய் இருக்கும்.

## ஆசிரியரைப் பற்றி



Rev. P.S. ராஜமணி அவர்கள் இறையியல் கல்லூரியின் பேராசிரியராக திறம்பட பணியாற்றியவர். சபை ஊழிய அனுபவம் நிறைந்தவர். பல நாடுகளில் தீர்க்கதரிசன கிருபையுடன் வல்லமையாய் தேவன் பயன்படுத்தும் நற்செய்தியாளர். அப்போஸ்தல ஊழிய தரிசன விரைவு உடையவர். மகிழ்வோடும் அழுத்தத்தோடும் திருமறைச் செய்தியை பகிர்ந்தளிக்கும் நடைமுறை போதனையாளர். சிறந்த எழுத்தாளர். எழுச்சிமிகு சிந்தனையாளர், எக்ளிசியா பத்திரிகை ஆசிரியராகவும் பணியாற்றி வருகின்றார்.

ஆண்டவருக்காக அருட்பணியில் சாதிக்க வேண்டும் என்ற இதயத் துடிப்புடையவர். அகில இந்திய தேவ சங்க துணைத் தலைவராகவும், தென்னிந்திய தேவ சங்க தலைவராகவும் செயல்பட்டு வருகிறார்.